தர்மசக்கரம்















துன்மதி ௵ ஆனி ௴ சக்கரம் 30 ஆரம் 6

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

திருநெல்வேலி ஜில்லா

பாபநாசத்தில் அந்தர்யோகம்-18

24, 25 & 26—7—81

பொதியமலை அடிவாரத்தில் இருக்கும் பாபநாசம் க்ஷேத்திரத்தில் **1981** ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் தேதி வெள்ளி, 25ஆம் தேதி சனி, 26ஆம் தேதி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள்** தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். அம்பாசமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறுமைல் தூரத்தில் பாபநாசம் என்னும் இந்த க்ஷேத்திரம் இருக்கிறது.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள், நபர் ஒன்றுக்கு ரூ. **21-00** விதம், திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம், நூல் ஜவுளி வியாபாரம், **திரு Sv Rm. A. நடராஜ முதலியார்** அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்து, அனுமதிகார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். பதிவு பெற்ற முதல் **200** பேர்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுவார்கள். கலந்துகொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவு செய்யப் பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக் கொள்ளப்படமாட்டார். பதிவு செய்துகொண்டவர்கள் அனைவரும் ஜூலை மாதம் **23**ஆம் தேதி வியாழக்கிழமை மாலையே பாபநாசத்திற்கு வந்துசேரவேண்டும்.

தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளலாம். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டுவரவேண்டும்.

திருநெல்வேலி, நாகர்கோவில், திருக்குற்றாலம், தென்காசி, சங்கரன் கோவில் முதலிய இடங்களிலிருந்து பாபநாசத்திற்குப் போக பஸ்கள் கிடைக்கும். அம்பாசமுத்திரத்திலிருந்து பாபநாசத்திற்கு அடிக்கடி பஸ்கள் கிடைக்கும்.

சாதனை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	5-00	
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-30	6-00
நீராடல் முதலியன	6-00	7-30
காலை தியானம்	7-30	8 00
சிற்றுண்டி	8-00	9-00
காலை உபந்யாசம்	9-00	10-00
மௌனம், உழவாரப்பணி	10-00	11-00
பஜனை	11-00	11-45
கோவில் வழிபாடு	11-45	12-30

மாலை

	மணிமுதல்	மணிவரை
போஜனம், ஓய்வு	12-30	3-00
மாலை உபந்யாசம்	3-00	4-00
தனியாக வாசித்தல்	4-00	4-30
பானம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-30
நாமஜபம்	6-30	7-00
தியானம்	7-00	7-30
இரவு போஜனம்	7-30	8-30
ஸத் ஸம்பாஷணை	8-30	9-30

குறிப்பு: மூன்றுவது நாள் ஞாயிறு மாலை 5-00 மணியுடன் அந்தர்யோகம் முடிவுபெறும்.

காரியதரிசி — **Sv. Rm. A. நடராஜ முதலியார்**, அம்பாசமுத்திரம்.

ஸதானந்த — ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்.

பாபநாசம் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30	துன்மதி ௵ ஆனி ௴	ஆரம் 6

பொருளடக்கம்

வருட சந்தா:	உள்நாடு ரூ.	12-00	வெளிநாடு ரூ.	25-00
தனி இதழ்	,, ரூ.	1-25	,, ரூ.	2-25

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்-ராமேஸ்வரம்

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 12ம் தேதி ஸ்ரீ ராமநவமி யன்று இம் மடாலயம் துவக்கப்பெற்றது. அன்றுமுதல் அங்கு மகேஸ்வர பூஜை நடைபெற்று வருகிறது. 12-4-81 முதல் 31-5-81 முடிய நண்பகல் மகேஸ்வர பூஜையில் 1195 பேர் உணவு ஏற்றுக்கொண்டனர். உண்டியல் மூலமும் அன்பர்கள் நேரில் தந்ததுமாக நன்கொடை வரவு ரூ. 2228-00. மூலதனமாக வைத்துக்கொண்டு வட்டியை மட்டும் செலவிடுமாறு வந்த தொகை ரூ. 3000/- இதற்கான உணவுச் செலவு விபரம் அடுத்தமாதம் வெளியிடப்படும். இம்மடத்திற்கு தேவையாயுள்ள ஜல வசதி சுகாதார வசதிக்கான கட்டடவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—திருவாதவூரில் 21—6—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: திருவாதவூர், திருமறைநாதசுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்**
உணவுவசதி: பகல் உணவிற்கு ரூ. 1-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—தென்திருப்பேரையில் 21—6—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீகைலாசநாதர் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்**

திருச்சி ஜில்லா—கரூரில் 28—6—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளையம், விவேகானந்த கல்விநிலையம்
நேரம் காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்**
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சென்னையில் 28—6—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: புரசவாக்கம் ஸர் M.CT.முத்தையாசெட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

பாண்டிச்சேரியில் 5—7—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சொசியெத்தே ப்ரோக்ரே ஸிஸ்த் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 5—7—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-25 செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 12—7—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப்பெற்றுக் கொள்ளலாம்.

தர்மபுரி ஜில்லா—பாப்பாரப்பட்டியில் 12—7—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பழைய சுப்பிரமணிய சுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 12—7—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ரயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள லாயல் மில் ஆரம்பப்பாடசாலை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—காயாமொழியில் 12—7—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காயாமொழி ராமலிங்கபுரம் ஸ்ரீமந்நாராயணசுவாமி கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

தர்மபுரி ஜில்லா—பாலஜங்கமனஹள்ளியில் 13—7—81 திங்கட்கிழமை

இடம்: அருள்மிகு பச்சையம்மன் தேவஸ்தானம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 19—7—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: V. M. ஞானசபாபதி நாடார்-சரஸ்வதி அம்மாள் அரங்கம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரூ. 2-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

சிறு சேமிப்பும் சிறந்த சேவையும்

பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் உதவிபுரிதல் நம் கடமையாகிறது. எத்தகைய உதவி தேவை என்பதை அறிந்து நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும். ஆன்மீகத் துறையில் அவர்களை ஈடு படுத்துவது தலைத்தரமான உதவியாகும். அவர்கள் பெயரால் ரூ. 100 டிபாஸிட் செய்து மாதந்தோறும் தர்மசக்கர இதழ் அவர்களுக்குப் போய்ச் சேரும்படி செய்யலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகை ரூபாய் நூறும் வட்டியில்லாக் கடனாக அவர்களின் சிறு சேமிப்பாக தர்மசக்கரம் ஆபீஸில் இருக்கும். தர்மசக்கரம் மாதந்தோறும் தாங்கள் உதவி செய்ய விரும்புபவர்களுக்குப் போய்ச் சேரும். தாங்கள் செலுத்தும் தொகையைத் தங்களுடைய சிறு சேமிப்பாக வைத்துக்கொள்ள விரும்பினாலும் தங்கள் பெயரால் டிபாஸிட்டாக வைத்துக்கொண்டு தாங்கள் குறிப்பிடுபவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை அனுப்பலாம். தேவையானபொழுது தாங்களே இப் பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டம் சிறு சேமிப்பும் சிறந்த சேவையுமாகிறது.

சந்தா விவரம்

1. ஆண்டு சந்தா ரூ. 12

ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

2. சகாய சந்தா ரூ. 8

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலாதவர்கள் ரூபாய் எட்டுமட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்துகொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

3. டிபாஸிட் சந்தா ரூ. 100

ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கர பத்திரிகை தங்களுக்கு வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-25 வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30 | துன்மதி ஹூ ஆனி மீ | ஆரம் 6

பிரார்த்தனை

न मृषा परमार्थमेव मे शृणु विज्ञापनमेकमग्रतः ।
यदि मे न दयिष्यसे ततो दय नीयस्तव नाथ दुर्लभः ॥

ந ம்ருஷா பரமார்த்தமேவ மே
ச்ருணு விக்ஞாபனமேகமக்ரத: ।
யதி மே ந தயிஷ்யஸே ததோ தய
நீயஸ்தவ நாத துர்லப: ॥

— யமுனைச்சார்யர்

இறைவா, நான் சொல்லும் விண்ணப்பத்துக்குச் செவிசாய்ப்பீராக. எனக்குத் தாம் அனுக்ரஹம் செய்யாவிட்டால் தகைமை வாய்ந்த வேறு பக்தன் ஒருவனை வேறு எங்கும் காணமாட்டீர். இது சத்தியம்.

கூர்த்த அறிவு அத்தனையும் கொள்ளைகொடுத்து உன் அருளைப்
பார்த்தவன்நான் என்னைமுகம் பாராய் பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

திருப்தி முக்திக்கு நிகர்.

பந்தபாசத்தினின்று துன்பம் உருவெடுக்கிறது.

ஊக்கம் படைத்தவனுக்கு ஆகாதது ஒன்றுமில்லை.

அகங்காரமே துக்கமனைத்துக்கும் அடிப்படைக் காரணமாகிறது.

கஷ்டதசையைச் சாந்தமாகச் சமாளிப்பவன் அதை வெல்லுகிறான்.

சுயநலம் அழிந்துபட்டுப் போவதற்கு ஏற்ப ஆனந்தம் மேல் எழுகிறது.

அறநெறியில் நிலைத்திருப்பதற்கு ஏற்ப மனிதனுக்கு ஆற்றல் அதிகரிக்கிறது.

சிறுநெறி மனிதனைப் பாழ்படுத்துகிறது; பெரு நெறியோ அவனை மேலோனுக்குகிறது.

பணிவிடையில் இன்பம் காண்பவனுக்கு வேறு எந்தவித இன்பமும் தேவையில்லை.

ஆருயிர்களுக்கு அரிய பணிவிடை பண்ணுபவன் ஆண்டவனை வணங்க வல்லவனாகின்றான்.

அருள் நாட்டத்தில் விழித்தெழுந்திருப்பவன் பொருள் நாட்டம் என்னும் உறக்கத்தைப் புறக்கணிக்கிறான்.

மனம்போன போக்கெல்லாம் போகிறவன் சுதந்திர புருஷன் அல்லன். அவன் அரக்க இயல்புக்கு அடிமை.

முன்னோர் சம்பாதித்த செல்வத்தை உண்டு, பணிவிடை பண்ணாதிருப்பவன் சமுதாயத்தின் ஒட்டுணியாகிறான்.

எதையும் எண்ணிப்பாராதவன் கல்லுக்கு நிகர்; எண்ணிப்பார்த்து மனம் குழம்புபவனுக்கு இறுதியில் மனத்தெளிவு உண்டாகிறது.

உடலுக்கு ஒவ்வாத உணவை நா ஒதுக்கித் தள்ளுகிறது. அங்ஙனம் யுக்திக்கு ஒவ்வாததை அறிவு ஒதுக்கித் தள்ளுதல் வேண்டும்.

யாண்டும் வெளிச்சத்தில் இருப்பவன் இருளைக் காண்பதில்லை. அங்ஙனம் தெய்விக உணர்வில் திளைத்திருப்பவன் சிற்றின்பத்துடன் போராடுவதில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் அன்பர்களோடு உரையாடிக்கொண்டிருக்கிறார். கிரீஷ் சந்திரகோஷரிடம் அவர் கூறியதாவது: "உன்னிடம் வந்துள்ள இந்த மன மாறுதல் பாராட்டுதற்குரியது. நீ இப்பொழுது அமைதியுற்றிருக்கின்றாய். முன்பு நீ என்னை நாடகக் கொட்டகையில் வைத்து அவமானப்படுத்தினாய் அல்லவா? அதை நான் பொருள்படுத்தவில்லை. உனக்கு நல்லியல்பு வாய்க்கவேண்டுமென்று அம்பிகையிடம் நான் பிரார்த்தனை பண்ணினேன். அன்னையின் அருளால் நீ இப்பொழுது மனம் திருந்தப்பெற்றவனாயிருக்கிறாய்."

கிரீஷ் சந்திரகோஷர் மகேந்திரரிடம் பகர்ந்ததாவது: "யாரோ ஒருவர் என்னுடைய நாவைக் கட்டிப்பிடித்து வைத்திருப்பதாக உணர்கிறேன். பேச எனக்கு இயலாதிருக்கிறது. ஏனென்றால் முன்பு நான் பரமஹம்ச தேவரை அவதூறு கூறியது என்னுடைய மடமையாகும். அவர் அதைப் பொருள்படுத்தவில்லை. கிருபை கூர்ந்து என்னைத் தடுத்தாட்கொண்டிருக்கிறார். இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யமுடியும்? வாய்பொத்தியிருந்து இந்த அருளாளருடைய அருளை அல்பனாகிய நான் அமைதியாக ஏற்றுக்கொள்ளுகிறேன்."

பரமஹம்சதேவரை விட்டு இன்னும் அந்தர்முக திருஷ்டி மாறவில்லை. ஆழ்ந்து உள்ளத்தை உள்ளேயே செலுத்தி வைத்த அவர் சிறிது சிறிதாகப் புறவுலக உணர்ச்சி பெற்றுவருபவர் போன்று தென்பட்டார். ஆங்குக் குழுமியிருந்த அன்பர்களை அவர் கண்ணெடுத்துப் பார்த்தார்.

மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "இங்குத் தக்ஷிணேசுவர ஆலயத்துக்குப் பக்தர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அங்ஙனமே செய்யட்டும். அன்னை பராசக்தி அவர்களுக்கு அனுக்ரஹம் பண்ணி வருகின்றாள்."

அக்கம் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்த ஓர் இளைஞனிடம் பரமஹம்சதேவர் இயம்பியதாவது: "ஓஹோ வந்துள்ளாயா! நீ கருதுவது யாது? மானுடனொருவனுக்கு அமைந்துள்ள கடமை யாது?" இக்கேள்விக்கு யாரிடமிருந்தும் விடையேதும் வரவில்லை. எல்லாரும் மௌனமுற்றிருந்தனர்.

இப்பொழுது நாராயணனைப் பார்த்துப் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "பள்ளிப் பரீட்சைகளில் நீ தேர்வு பெற விரும்புகிறாய் அல்லவா? மற்று, மகனே நான் இயம்புவதைக் கேள். பந்த பாசங்களினின்று விடுபடுகிறவன் சிவசொரூபம் ஆகிறான். பந்த பாசங்களில் கட்டுண்டு இருப்பவன் ஜீவாத்மா ஆகிறான்."

பாரமார்த்திகப் பேருணர்வினின்று கீழிறங்கிப் பிரபஞ்ச ஞாபகத்துக்குப் பரமஹம்சதேவர் இன்னும் முற்றிலும் வந்தவர் அல்லர். அவருக்கருகில் பாண்டம் ஒன்றில் குடி தண்ணீர் இருந்தது. அந்த நீரை எடுத்து அவர் பருகினார். பிறகு அவர் தமக்குத் தாமே சொல்லிக்கொண்டதாவது: "மனமானது பரத்திலே மூழ்கியிருக்கும் இவ்வேளையில் நான் ஏன் நீர் பருகினேன்?"

அஸ்தமித்து இன்னும் அறவே இருண்டு போகவில்லை. பரமஹம்சதேவர் எதிரே அதுல் என்னும் அன்பர் அமர்ந்திருந்தார். அவரோடு பரமஹம்சதேவர் உரையாடிக் கொண்டிருந்தார். இந்த அதுல் என்பார் கிரீஷ் சந்திர கோஷருடைய சகோதரர் ஆவார். அவர் கல்கத்தா உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கறிஞராக உத்தியோகம் பண்ணி வந்தார். அன்னவருக்கு அருகில் அந்தணர் ஒருவர் அமர்ந்திருந்தார்.

பரமஹம்சதேவர் (அதுலரைப் பார்த்து): "நான் உமக்குச் சொல்ல விரும்புவது இதுவே. இரண்டு முறைகளையும் கையாண்டு வருவீராக. உமக்கு ஏற்பட்டு இருக்கும் உலகக்கிருத்தியங்களை ஒழுங்காகச் செய்துவருவீராக அதனோடு சேர்ந்து கடவுள் பக்தியையும் வளர்த்து வருவீராக."

அந்தணர்: "பிராமணன் ஒருவன் நீங்கலாக வேறு யாராவது பாரமார்த்திகப் பெருவாழ்

வில் பரிபூரண நிலையை எட்ட முடியுமா?"

பரமஹம்சதேவர் : "இக்கேள்வியைத் தாம் ஏன் கேட்கவேண்டும்? கலியுகத்திலே கடவுள் பக்தியிலே ஆழ்ந்து செல்லுகிறவர் எல்லாரும் அரிய பெரியநிலையை எட்டுகின்றனர் என்று இயம்பப்படுகின்றது. அதற்குச் சான்ருகச் சபரியும், ருஹிதாஸும், தீண்டப்படாத குகனும் இன்னும் சிலரும் அமைந்திருக்கின்றனர். இச் சிறு கூட்டத்தார் சாஸ்திர ரீதியாக விளம்பரப் படுத்தியவர்கள் ஆகிருர்கள். அப்படி விளம்பரப்படுத்தாதவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள்."

நாராயணன் (புன்னகை பூத்தவனுக): "பிராமணனும் சூத்திரனும்—எல்லாரும் கடவுள் காட்சியில் ஒன்றே."

அந்தணன் : "மானுடனெருவன் ஒரே ஜன்மத்தில் ஈசுவரானுபூதியைப் பெற முடியுமா?"

பரமஹம்சதேவர் : "ஈசனுடைய அருளுக்கு ஆகாதது யாது இருக்கிறது! ஆயிரம் ஆண்டுகளாக இருள் சூழ்ந்து கிடந்த அறை ஒன்றனுள்ளே தீபம் ஒன்றைக் கொண்டுவருவதாக வைத்துக் கொள்வோம். அந்தத் தீபமானது அறையிலிருந்த இருளைக் கொஞ்சம் கொஞ்சமாகவா நீக்குகிறது? திடீரென்று அறை வெளிச்சம் நிரம்பப் பெற்றதாகிறது. அதேபோக்கில் ஈசனுடைய அருளுக்குப் பாத்திரமாகிறவர்கள் ஒரு கணப்பொழுதில் மேன்மையுறுகின்றனர். (அதுலைப் பார்த்து) உலகப்பற்றை அறவே ஒதுக்கித் தள்ளுதல் முற்றிலும் அவசியமானது. உறையினின்று உருவி எடுக்கப்பட்டுள்ள வாளுக்கு நிகராக மானுடன் ஒருவன் இருக்கவேண்டும். தீவிர வைராக்கியம் வாய்க்கப் பெற்றவனுக மானுடன் ஒருவன் ஆதல்வேண்டும். அத்தகைய வைராக்கியம் வடிவெடுக்கப்பட்டிருப்பவனுக்கு இடைஞ்சலாயிருக்கும் உற்ருர் உறவினர் கருநாகப் பாம்புகளாகத்தென்படுவார்கள். இதுகாறும் அவன் பிறந்துவளர்ந்து வந்துள்ள வீடு ஆழமான கேணியாக அந்த வைராக்கிய புருஷனுக்குக் காட்சி கொடுக்கும்.

"உள்ளக் கசிவோடும், அன்போடும், ஆர்வத்தோடும் சாதகன் ஒருவன் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணவேண்டும். உள்ளன்போடு செய்யப்படுகின்ற பிரார்த்தனைக்குச் செவிசாய்க்காதிருப்பது கடவுளுக்குஇயலாது. பரமஹம்சதேவர் இங்ஙனம் பகர்ந்த மொழிகளை ஆங்கு அமர்ந்திருந்த அன்பர்களனைவரும் கேட்டு அமைதியாக அவைகளைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தார்கள்."

பரமஹம்சதேவர் (அதுலரைப் பார்த்து): "எதைக் குறித்துத் தாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்? உறுதிப்பாடும் கடவுள் நாட்டத்திலே பேரார்வமும் உம்மிடத்து இல்லையென்ரு எண்ணிக் கொண்டிருக்கின்றீர்?"

அதுலர் : "இறைவன் திருவடிகளிலே எங்கள் மனதை உறுதியாக நாட்ட எங்களுக்கு இயலுமா?"

பரமஹம்சதேவர் : "அப்பியாச யோகத்தை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். நாள்தோறும் இறைவனிடத்து ஆர்வத்துடன் பிரார்த்தனை பண்ணவேண்டும். ஆத்மசாதனம் புரிகிற ஒருவன் ஒரே நாளில் வெற்றி பெற்றுவிடலாம் என்று எண்ணிவிடலாகாது. நாள்தோறும் முறையாகப் பிரார்த்தனை பண்ணுவதன் வாயிலாகவே சாதகனிடம் அருள் நாட்டம் ஓங்குகிறது.

"அல்லும் பகலும் உலக நாட்டத்திலேயே மூழ்கிக் கிடக்கும் ஒருவனுக்கு அருள் நாட்டம் எப்படி வரும்? யதுமல்லிக்கருக்குச் சில காலத்துக்கு முன்பு கடவுளைப் பற்றிய பேச்சு மிக மிகப் பிடித்திருந்தது. அதில் நேரம் போவதே அவருக்குத் தெரியாதிருந்தது. ஆனல் இக் காலத்திலோ அவருடைய மனது மாறியிருக்கிறது. அன்றிருந்த ஆர்வத்தின் அறிகுறி இன்று அவரிடமில்லை. அல்லும் பகலும் முகஸ்துதி பண்ணுபவர்களுடைய கூட்டத்திலேயே அவர் வாழ்ந்துவருகிருர். உலக விஷயங்களைப் பற்றிப் பேசுவதிலும் அவர் ஊக்கம் கொள்ளுகிருர்."

இப்போது இருண்டு போயிற்று. அறையினுள் விளக்கேற்றி வைக்கப்பட்டது. இறைவனுடைய திருநாமங்களைப் பரமஹம்சதேவர் ஓதுவாராயினர். பாடல் ஒன்றின் வாயிலாக அவர் பிரார்த்தனை பண்ணினர். அதாவது, "மனமே, ஹரிநாமத்தை ஓது. ஹரியின் நாமத்தைத் திரும்பத் திரும்பச்சொல். ஹரி நாமம் சொல்லி அவரைப் பற்றிப் பாடு." மீண்

டும் அவர் பகர்ந்ததாவது, "ராம! ராம! ராம!" அதன் பிறகு அவர் இயம்பியதாவது: "தாயே, அனைத்தையும் நீயே சாதிக்கின்றாய். ஓய்வில்லாத உன்னுடைய விளையாட்டை நீயே ரசிக்கின்றாய். தாயே, உன்னை அடைவதற்கான உபாயம் யாது? உன்னிடம் தாயே, நாங்கள் அடைக்கலம் புகுந்திருக்கின்றோம். உன்னுடைய திருவடிகளைச் சார்ந்திருக்கிறோம். நாங்கள் உய்வடைவதற்கு உன்னைச் சார்ந்திருப்பதே உற்ற துணையாகிறது."

கிரீஷ்சந்திரகோஷ் சிறிது பரபரப்பு அடைந்தவர்போன்று தென்பட்டார். பரமஹம்சதேவரோ அமைதியே வடிவெடுத்திருந்தவராகக் காட்சி கொடுத்தார். தேஜ்சந்திரன் என்னும் பக்தனைத் தமக்குஅருகில் அமரும்படி அவர் வேண்டினர். அச்சிறுவனும் பரமஹம்சதேவருடைய விருப்பத்துக்கு இணங்கி அருகில் வந்து அமர்ந்தான். அப்படி அமர்ந்தவன் தான் விரைவில் புறப்பட்டுப்போயாகவேண்டுமென்று மகேந்திரநாதருடைய காதுக்குள் அமைதியோடு தெரிவித்தான்.

பரமஹம்சதேவர் (மகேந்திரரைப் பார்த்து): " இச்சிறுவன் சொல்லுவது யாது?"

மகேந்திரர்: " அவன் விரைவில் வீட்டுக்குத் திரும்பிப்போயாக வேண்டுமென்று என்னிடம் சொல்கிறான்."

பரமஹம்சதேவர்: " இவன் போன்ற சிறுவர்களை ஆர்வத்தோடு நான் என்னிடம் வரவழைக்கிறேன். அதற்குக் காரணம் யாதோ? ஒருவேளை இவன் போன்றவர்கள் படைத்திருக்கும் தூய்மையே அதற்குக் காரணமாயிருக்கலாம். உலக பந்தபாசங்களால் மலினப்படாதிருக்கும் சுத்தஆத்மாக்கள் ஆவார்கள் இவர்கள். உலகப் பந்தபாசத்தில் அமுந்திக் கிடக்கும் மனதை உடையவர்களிடத்து வாழ்க்கைக்குரிய மேலாம் கோட்பாடுகள் நிலைத்திருக்க மாட்டா. புதிய மட்பாண்டம் ஒன்றில் பாலை வைத்திருக்கலாம். அது கெட்டுப்போகாது. ஆனால் தயிர் தோய்ந்த மட்பாண்டத்தில் பாலைப்போட்டு வைத்தால் அது விரைவில் புளித்துக்கெட்டுப்போம். வெள்ளைப் பூண்டு வைத்திருந்த கிண்ணம் ஒன்றை ஆயிரம் தடவை கழுவலாம். ஆயினும் அதனுள் படிந்துள்ள பூண்டின் நாற்றத்தை அகற்ற இயலாது."

கல்கத்தாவிலே பீடன் வீதியிலே அமைந்திருந்த நட்சத்திரக் கொட்டகைக்குப் பரமஹம்சதேவர் எழுந்தருளினர். 'விருட்சகேது' என்னும் நாடகம் ஒன்றைப்பார்க்கவேண்டும் என்பதே அவர் அங்கு வந்ததற்குக் காரணமாயிற்று. தென்முகமாய் அமைக்கப்பெற்றிருந்த பெட்டக ஆசனம் ஒன்றன்மீது அவர் அமர்ந்திருந்தார். அவருக்கருகில் தரையின்மீது மகேந்திரரும் மற்றும் சில பக்தர்களும் அமர்ந்திருந்தனர்.

பரமஹம்சதேவர் (மகேந்திரரைப் பார்த்து): " நரேந்திரன் வந்திருக்கிறானா?"

மகேந்திரர். " ஆம் ஐயனே."

நாடகம் துவங்கியது. கர்ணனும் அவனுடைய மனைவி பத்மாவதியும்செயற்கரியசெயல் ஒன்றைச் செய்தார்கள். கர்ணனுடைய தானத்தைப் பரீட்சை பண்ணிப்பார்ப்பதற்கு ஒரு பிராமண வேடம் பூண்டு கடவுள் அவர்கள் முன்னே பிரசன்னமானர். கர்ணனுடைய மகனைப் பலிதானம் பண்ணவேண்டுமென்று பிராமணன் கேட்டான். கணவனும் மனைவியும் சேர்ந்து கேட்டவருடைய விருப்பத்தைப் பூர்த்தி பண்ணிவைத்தார்கள். அங்ஙனம் பலிதானம் பண்ணியதைப் பார்த்த பக்தர் ஒருவர் மனம் குழம்பினர். பரமஹம்சதேவரும் தன்னுடைய துயரத்தைத் தெரிவித்தார்.

நாடகம் முற்றுப் பெற்றான பிறகு பரமஹம்சதேவர் கொட்டகையினின்று ஓய்வு அறைக்குச் சென்றார். அப்படிச் சென்றவர் கிரீஷ்சந்திரகோஷரும் நரேந்திரனும் ஏற்கனவே அவ்வறையினுள் வந்து அமர்ந்திருப்பதைப் பார்த்தார். பரமஹம்சதேவர் நரேந்திரனுக்கு அருகில் நின்றுகொண்டு " நானும் இதோ வந்துள்ளேன்" என்றார்.

பரமஹம்சதேவர் ஆசனம் ஒன்றன்மீது அமர்ந்தார். கொட்டகையினுள் இன்னிசை வாத்தியம் முழங்கிக் கொண்டிருந்தது.

பரமஹம்சதேவர் (பக்தர்களைப் பார்த்து) : "இந்த இன்னிசையைக் கேட்டு நான் மகிழ்வடைகிறேன். இதே விதத்தில் தக்ஷிணேசுவர ஆலயத்திலே இன்னிசை வல்லுநர் சிலர் பாடுவது உண்டு. அதைக் கேட்டு நான் பரவசம் அடைந்து விடுவேன்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

2-11. நில்லாமல் நின்றுஅருளை நேரேபார் என்றஒரு
சொல்லால் மவுனிஅருள் தோற்றுநாள்
[எந்நாளோ.

பிரபஞ்சத்தின் காட்சி அவரவரின் மனப் பான்மைக்கேற்ப நிகழ்கிறது. மனதைக் கண்ணாடியோடு ஒப்பிடலாம். நீலக்கண்ணாடி போட்டுக்கொண்டு உலகைப் பார்ப்பவனுக்கு அது நீலநிறம் உடையதாகத் தென்படுகிறது. மஞ்சள் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்ப்பவனுக்கு அதே உலகம் மஞ்சள் நிறம் உடையதாகக் காட்சி தருகிறது. மேடு பள்ளம் உடைய கண்ணாடியைப் போட்டுக்கொண்டு ஒருவன் மக்களைப் பார்ப்பானாகில் அவர்களிடம் கணக்கற்ற கோணல்களை அவன் காண்பான். இக் கோட்பாட்டிற்கு ஒப்ப துரியோதனன் உலக மக்களிடம் கோணல்களையே பார்த்தான். அவன் கண்ட காட்சிக்கு நேர்மாறாக அவனுடைய தாயாதி யுதிஷ்திரன் என்னும் பெயர் படைத்திருந்த தர்மனுக்கு உலக மக்கள் எல்லாரும் நல்லவர்களாகவே தென்பட்டார்கள். ஆக, உலகைப் பொருள்படுத்தும் பாங்கில் இந்த இரண்டு சகோதரர்களும் இரண்டு கோடிகளிலிருக்கிறார்கள். உலகிலுள்ள மக்கள் எல்லாரும் இவர்களுக்கிடையில் இருக்கிறார்கள். ஒரு சிலர் துரியோதனனுக்குப் பக்கத்திலிருந்துகொண்டு அவன் போக்கில் உலகைப் பொருள்படுத்துகிறார்கள். வேறு சிலர் யுதிஷ்திரனுக்குப் பக்கத்திலிருந்து கொண்டு உலகைப் பார்க்கின்றனர். இந்த நல்ல கூட்டத்தார் இன்னும் ஒருபடி மேலே வருவார்களாகில் அவர்களுக்கு உலகின் காட்சி மகிமை நிறைந்ததாகத் தென்படும்.

தங்கத்தினால் செய்யப்பட்ட நகைகள் அனைத்தும் தங்கமயமாயிருக்கின்றன. அவைகளின் வடிவங்களில் கண்ணும் கருத்துமாயிருக்கிறவர்கள் நகைகளைக் காண்கின்றனர். அவைகளுக்கு மூல வஸ்துவாயிருக்கும் தங்கத்தை அவர்கள் காண்பதில்லை. அதே பாங்கில் ஈசன்தான் உலகனைத்துமாய் இலங்கிக் கொண்டிருக்கிறார். மனபரிபாகம் அடைந்து ஈசனைக் காண விரும்புகிறவர்கள் அதற்கேற்ற மனப்பான்மையை வரவழைத்துக்கொள்ள வேண்டும். மற்றபடி ஜீவாத்மாக்களுக்குச் சொந்தமாயுள்ள விருப்பு வெறுப்பு மயமான மனநிலையில் ஆத்மசாதகன் நிற்கலாகாது. யாண்டும் மனதை நடுநிலையிலேயே வைத்துப் பழகவேண்டும். அக்கோட்பாடுதான் நில்லாமல் நில் என்னும் சொல்தொடரில் அடங்கியிருக்கிறது. அருளை நேரே பார்த்தல் என்னும் கோட்பாடு வடிவ மயமான நகைகளை மறந்து விட்டுத் தங்கத்தைக் காண்பதற்கு நிகராகும். தூய மனதை நடுநிலையில் வைத்துப் புறவுலகைக் காண்போர்க்கு அது முற்றிலும் அருள் மயமாகக் காட்சி கொடுக்கும். தெய்வந்தான் பிரபஞ்சத்திலுள்ள இத்தனைவிதப் பொருள்கள் மயமாகவும் உயிர்கள் மயமாகவும் இலங்கிக்கொண்டிருக்கிறார் என்னும் உண்மை தெற்றென விளங்கும். 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் பொய்யாமொழி இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. கடவுளைத் தேடியலையவேண்டாம், ஜீவமயமாயிருக்கிற நீ உன்னுடைய ஜீவபோதத்தை ஒதுக்கித்தள்ளி விட்டு அருளைச் சார்ந்திருந்து மனதை நடுநிலையில் வைத்துப்பார். அப்பொழுது மெய்க் காட்சி உனக்குப் புலப்படும் என்று மௌன குரு தாயுமான சுவாமிகளுக்கு உபதேசித்தருளினார். அவருடைய திருவாய்மொழிக்கு ஒப்ப தாம் அதிவிரைவில் ஆத்மபரிபாகம் அடையவேண்டும் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டதாம் இக்கண்ணி.

2-12. வைதிகம்ஆம் சைவ மவுனிமவு னத்துஅளித்த
மெய்திகழ்ந்துஎன் அல்லல் விடியுநாள்
[எந்நாளோ.

அல்லல் விடியு நாள்— மனக்கிலேசம் அகன்று போகும் காலம்.

நம் நாட்டிலுள்ள சமயங்கள் அகச்சமயங்கள், புறச்சமயங்கள் என இரண்டு விதமாகப் பாகுபடுத்தப்பட்டிருக்கின்றன. நான்கு வேதங்களைப் பிரமாணமாகக் கொண்டவைகள் அகச் சமயங்கள். அத்தகையவைகள் ஆறு சமயங்கள்

இருக்கின்றன. அவைகள் முறையே சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் எனப் பெயர் பெற்றுள்ளன. அக்கோட்பாட்டை அனுசரித்து வைதிகம் ஆம் சைவம் என்று அண்ணல் சைவ மதத்தின் சிறப்பை எடுத்து இயம்புகின்றார். அத்தகைய மௌன நிலையை எட்டியவர் மௌனகுரு. அச் சான்றோர் மௌனத்திலிருந்த கொண்டே தாயுமான சுவாமிகளுக்கு ஞானத்தெளிவு உண்டாகும்படி அனுக்ரஹம் பண்ணினர். அந்த மேலான நிலையை எட்டாதவர்கள் அடுக்கடுக்காகப் பதங்களைப் பிரயோகித்துப் பேச்சைப் பெருக்கிக்கொண்டே போகின்றனர். பேச்சு எவ்வளவுதான் பெருகி வந்தாலும் அந்தக்கரண சுத்தியடையப் பெறாதவர்களுக்குத் தத்துவம் விளங்காது. மன பரிபாகம் அடைந்துள்ளவர்கள் பரிபூரணத்தை அடையப்பெற்றுள்ள சான்றோர்களின் முன்னிலைக்கு வந்தால் போதுமானது. தூய நிலைக்கண்ணடியின் எதிரே நின்றுகொண்டு பார்ப்பவர்களுக்குத் தங்கள் பிம்பம் உள்ளபடி தென்படுகிறது. அங்ஙனம் அந்தக்கரண சுத்தி அல்லது மனத்தூய்மை அடையப் பெற்றிருப்பவர்கள் ஞானத்தின் சிகரமாகிய மௌனத்தை எட்டியிருப்பவர்கள் சந்நிதானத்தைச் சார்ந்திருப்பார்களாகில் பர தத்துவங்கள் யாவும் அன்னவர்களுக்குத் தெற்றென விளங்குகின்றன. அதற்கேற்றபடி மனக்குழப்பங்கள் யாவும் அகன்றுபோய் தெளிந்த ஞான நிலையே எஞ்சி நிற்கிறது. பெறுதற்கரிய அந்த வாய்ப்பை அடையப் பெற்றவர் தாயுமானவர். அதை அடையும் நாள் எந்நாளோ என்று உபசாரத்திற்காக அவர் இயம்புகின்றார்.

2-13. வாக்குமனம் அற்ற மவுனிமவு னத்துஅருளே
தாக்கவும்என் அல்லல்எல்லாம் தட்டுஅழிவது
[எந்நாளோ.

தட்டழிவு—அடியோடு அகன்று போவது. சுடர் விட்டு எரிகின்ற தீயினுள் நன்றாக உலர்ந்துபோன விறகுக் கட்டையைப் போட்டால் அது உடனுக்குடனே தீப் பற்றிக்கொள்ளுகிறது. பிறகு விறகுக்கட்டை என்னும் பெயர் போகிறது. சுடர்விட்டு எரியும் தீயாக அது திகழ்கிறது. இந்த உபமானத்துக்கு ஒப்பானது சத்குருநாதனுடைய அனுக்ரஹமும், அதைப் பெறுதற்குத் தகுதிவாய்ந்த ஆத்மசாதகனுமாம். ஆச்சர்யோ வக்தா குசலோ அஸ்ய லப்தா என்பது உபநிஷத் வாக்கியம். நிறைஞானத்தை எட்டிய சான்றோர் ஒருவர் உலகில் அரிதிலும் அரிதாக வந்து அமைகின்றார். அப்படி அமைந்துள்ள ஞானக் களஞ்சியத்தைப் பயன்படுத்த வல்ல தகுதிவாய்ந்த ஆத்மசாதகனும் இந்நிலவுலகில் அரிதிலும் அரிதாகவே வந்து அமைகிறான். சொல்லையும், சிந்தையையும் துடைத்துத் தள்ளிவிட்டு அப்பாலுள்ள பரத்தை அடையப் பெற்றவர் ஞானகுரு. இனிச் சொல்லையும் சிந்தையையும் முற்றிலும் பக்குவப்படுத்தி அவைகளைத் துடைத்துத் தள்ளும் ஆத்ம பரிபாகம் அடையப் பெற்றிருப்பவன் தலைசிறந்த சிஷ்யன் ஆகின்றான். ஆச்சாரியரை அணுகுதற்கேற்ற திறமையும் வாய்க்கப்பெற்றவனாக அன்னவன் இருக்கின்றான். பரத்தை அடையப் பெற்றவராகத் திகழ்ந்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ணராவார். அவர் உள்ளம் யாண்டும் பரத்தோடு ஒன்றித்துக் கலந்ததாய் இருந்தது. அவர் விவேகானந்தரைக் கண்டதும் பேரானந்தம் அடைந்தார். விவேகானந்தரைக் காண்பது அவருக்குச் சிவ தரிசனத்துக்கு நிகராக இருந்தது. விவேகானந்தர் சில நாட்கள் தொடர்ந்து ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்க்க வராது இருந்து விடுவார். அப்பொழுது விவேகானந்தரைத் தேடிக்கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் சென்று விடுவார். விவேகானந்தர் சிந்தையையும், சொல்லையும் முற்றிலும் பக்குவப்படுத்தி வைத்திருந்ததே அதற்குக் காரணமாகும். ஆசாரியருக்கேற்ற தகுதி வாய்ந்த சிஷ்யராக விவேகானந்தர் திகழ்ந்தார். இத்தகைய அதிசயம் உலகில் சர்வ சாதாரணமாக நிகழ்வதன்று. ஈண்டு தகைசான்ற ஆத்ம சாதகராகத் திகழ்பவர் தாயுமானசுவாமிகள். அவரை ஆட்கொள்ளுதற்கு எழுந்தருளியுள்ள மௌன குருவோ வாக்கையும், மனதையும் ஒதுக்கித் தள்ளி விட்டு அப்பாலுள்ள பரத்தில் நிலை பெற்றவர். அன்னவரைச் சார்வதின் விளைவாகச் சிஷ்யருடைய மனதில் எஞ்சியுள்ள அல்லல்களெல்லாம் தட்டழிந்துபோவது திண்ணம். இக்கோட்பாட்டை அற்புதமாக எடுத்து விளக்குகிறது இக்கண்ணி.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

20. நீ பிரார்த்தனை செய்யும்பொழுது அதை வெளிப்பகட்டுக்கு என்று செய்யாதே. தாங்கள் வழி படுவதை, வழிப்போக்கர் எல்லாரும் கண்டு மெச்ச வேண்டும் என்னும் கருத்துடன் ஆடம்பரப்பிரியர்கள், ஆலயங்களிலும், நாற்சந்திகளிலும் நின்றுகொண்டு வணங்குவார்கள். அது முற்றிலுமே மோசமானது அன்று. அவர்களுடைய பாங்குக்கு ஏற்ற பரிசை அவர்கள் பெறுவார்கள்.

நீ பிரார்த்தனை செய்யும்பொழுது உன் அறைக் குள்ளே சென்று கதவைத் தாழிட்டுக்கொள். உன் அந்தராத்மாவாக இருக்கும் தெய்வத்தை ஆங்கு நீ ரகசியமாக வழிபடு. உன் மனத்தகத்து உள்ள எண்ணத்தை அவர் நன்கு அறிந்துகொள்வார். பிறகு உனக்கு உகந்ததை வெட்ட வெளியாக வருத்து வழங்குவார்.

நீ பிரார்த்தனை செய்யும்பொழுது பாமரர் பகர்வது போன்று பொருள் சேராத பதங்களைத் திரும்பத் திரும் பப் பகர்ந்துகொண்டிராதே. பதங்களைப் பெருமிதமா கப் பிரயோகித்தால் அதற்குப் பரமன் செவிசாய்ப்பார் என்று அன்னவர் எண்ணுகின்றனர். வீண் சொற் களைச் சொரிகின்ற புல்லறிவாளர் கூட்டத்தை நீ சேர வேண்டாம். வேண்டும் என்று கேட்க நீ வாய் திறப் பதற்கு முன்பே உனக்கு வேண்டத்தக்கது யாது என் பதை உன் தந்தையாகிய தேவன் அறிகின்றான்.

பிரார்த்தனை செய்ய வேண்டிய விதத்தை இங்கு இயேசுநாதர் போதிக்கின்றார். பிரார்த் தனையின் மூலம் கடவுளைத்தான் நாம் பெற வேண்டும். கடவுளைத் தவிர உலகப்பொருள் கள் மட்டமானவைகளாகும். அவ்வுலகப் பொருள்கள்தாம் நமக்கு வேண்டும் என்றால் அவைகளையும் பிரார்த்தனை மூலம் பெறலாம். பேரும், புகழும் பெறவேண்டும் என்று விரும்பினால் பொது இடத்தில் இருந்து கொண்டு நாம் பிரார்த்தனை செய்வோம். அப் பொழுது நம்மை எல்லாரும் பார்ப்பார்கள். எல்லாரும் நம்மைப் போற்றுவார்கள். அதில் சந்தேகமில்லை. பலர் முன்னிலையில் செய்கின்ற பிரார்த்தனையானது நமக்கு நன்மதிப்பைத் தேடித்தரும். நம்மைப் பலரும் அறிந்து கொள் வதற்கு அது உதவியாக இருக்கும். பொருளும் நமக்கு வந்து சேரும். பலரும் நம்மைப் பின் பற்றுவார்கள். நம்முடைய சக்தியும் வெளிப் படும். ஆனால் உண்மையான மதம், உள்ளத் தைத் தூய்மைப்படுத்துவதாகும். நாம் மதத்தை அனுஷ்டிக்கின்றோம் என்பது யாருக்கும் தெரிய வேண்டியது இல்லை. மதம் மிகவும் புனிதம் வாய்ந்தது. மதத்தை அனுஷ்டிப்பதனால் ஏற் படும் மாறுதல் அனுஷ்டிப்பவனுக்கு மட்டும் தெரியும்.

ஆகையால் அது மற்றவர்களுக்கு ரகசிய மானது. வழிபாட்டை வெளிப் பகட்டுக்காகச் செய்யக்கூடாது என்று இயேசுநாதர் எச்சரிக் கின்றார். இன்றைக்கு உலகம் விளம்பரத்தில் மோகம் கொண்டு இருக்கின்றது. மதத்தை விளம்பரப்படுத்துவதையே தங்கள் செயலாகக் கொண்டு வாழ்பவர்களும் இருக்கிறார்கள். முற்கால முனிவர்கள் தங்களை இன்னார் என்று காட்டிக்கொள்ளாது மனதைத் தூய்மைப் படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந் தார்கள். மனத்தூய்மை பெறுவதற்கும், ஆன்மீக வளர்ச்சி அடைவதற்கும் விளம்பரம் தேவையில்லை. உலகப்பொருள்களைப் பெறு வதற்குக் கடவுளின் துணையை நாடுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் மேற் கொண்ட செயலில் வெற்றி அடைவதற்குக் கடவுள் உதவி புரியவேண்டும் என்று பிரார்த் திக்கிறார்கள். உலகத்தில் வெற்றி பெறுவ தற்குக் கடவுளின் துணையைப் பெறுவது ஒரு வழி என்று எண்ணுகிறார்கள்.

கடவுள் மட்டும் வேண்டுமென்று கடவுளையே நாடுபவர்கள் உலகத்தைப்பற்றிக் கவலைப்படுவ தில்லை. கடவுள் ஒருவர்தான் வேண்டும் என்று கடவுளையே நாடும் பக்தர்கள் உலகப் புகழ்ச்சி யையும், இகழ்ச்சியையும் பொருட்படுத்துவ தில்லை. உலகம் தங்களைப் புகழ்ந்தால் அதைக் குறித்து அவர்கள் மகிழ்ச்சி அடைவதில்லை. உலகம் தங்களை இகழ்ந்தால் அதைக் குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை. தனிமையில் இருந்துகொண்டு 'இறைவா, நீதான் வேண்டும்' என்று பிரார்த்திக்க வேண்டும். அப்படிப் பிரார்த்திக்கின்றவர்களுக்கு அவர் தம்மைக் காட்டி அருள்கின்றார். உள்ளமானது உண்மை

யாகவே அவரை நாடி நிற்குமானல் அவர் காட்சி கிடைத்தே தீரும்.

நீங்கள் உலகத்தை ஏமாற்றலாம்; ஆனல் தெய்வத்தை ஒருநாளும் ஏமாற்ற முடியாது. உங்களுக்கு எது தேவை என்பதை அவர் நன்கு அறிவார். உங்கள் உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களை மற்றவர்கள் அறிந்துகொள்ளாது நீங்கள் மறைத்து வைத்துக்கொள்ள முடியும். ஆனல் உங்கள் உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களையெல்லாம் தெய்வம் அறிந்து கொண்டு இருக்கின்ருர். உங்கள் காதின்மூலம் அவர்தாம் கேட்டுக்கொண்டு இருக்கிருர். உங்கள் நாவின்மூலம் அவர்தாம் பேசிக் கொண்டு இருக்கிருர். உங்கள் கண்ணின்மூலம் அவர்தாம் பார்த்துக்கொண்டு இருக்கிருர். உங்கள் மனதின் மூலம் அவர்தாம் நினைத்துக் கொண்டு இருக்கிருர். அவருக்குப் புறம்பாக நீங்கள் கேட்கவோ, பேசவோ, பார்க்கவோ, நினைக்கவோமுடியாது. அவர் பேரறிவு அல்லது வாலறிவுமயமாக இருக்கின்ருர். அவ்வாலறிவு புத்தியின் மூலம் பிரதிபிம்பித்து நமக்கு அறிவு வருகிறது. நாம் செய்யும் பிரார்த்தனை எத்தகையது என்பதை அவர் நன்கு எடை போட்டுவிடுவார். நம் பிரார்த்தனை உண்மையான பிரார்த்தனையா, போலிப் பிரார்த்தனையா என்பதை அவர் அறிந்துகொள்கிருர். ஹிருதய பூர்வமாக நாம் இறைவனை இறைஞ்சி வேண்டுகின்ருேமா என்பதை அவர் அறிகிருர். ஹிருதய பூர்வமான பிரார்த்தனையாக இருக்குமாகில் அவர் அதற்குச் செவிசாய்க்கின்ருர். "சிந்தனையும், சொல்லும் பிரார்த்தனையில் ஒன்றுபட வேண்டும். அப்படி ஒன்றுபட்டால் நாம் செய்யும் பிரார்த்தனை நிறைவேறுகிறது. பிரார்த்தனையில் வாய் ஒன்று சொல்ல, மனது வேருென்றை நினைத்துக்கொண்டு இருக்குமானல் அப்பிரார்த்தனை சக்தியற்றது ஆகிறது. இறைவா! இப்பொருள்கள் எல்லாம் உனக்குச் சொந்தமானவைகள் என்று சொல்லுவதற்கிடையில் மனது அப்பொருள்கள் எல்லாம் தனக்குச் சொந்தமானவைகள் என்று நினைக்குமானல் அது போலிப் பிரார்த்தனையாகும். உன்னுடைய எண்ணங்களுக்கு நீ துரோகியாக இராதே. தூய எளிய உள்ளத்துடன் பிரார்த்தனை செய். நெஞ்சில் வஞ்சகம் இல்லாது நாம் இறைவனிடம் பிரார்த்திப்போமானல் நம் பிரார்த்தனையை இறைவன் கேட்கின்ருர்." இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எப்படிப் பிரார்த்திக்கவேண்டும் என்பதைக் கூறியிருக்கிருர். இறைவனிடம் செய்யும் பிரார்த்தனை இம்முறையில்தான் அமையவேண்டும் என்பதை இயேசுநாதரும் இவ்வுபதேசத்தின்மூலம் நமக்குப் புகட்டுகின்ருர்.

பிரார்த்தனையின் மூலம் நம் இதயத்தை இறைவனுக்குத் திறந்து காட்டவேண்டும். இதயம் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டு இருக்குமானல் அது பெருநிலை வேண்டும்என்று இறைவனிடம் பிரார்த்தித்து உருகுகிறது. இதயம் சிறுமைக்கு வசப்பட்டு இருக்குமானல் உலக ஆசையைநிறைவேற்றிக் கொள்ளுவதற்கு அது இறைவன் துணையை நாடிப் பிரார்த்தனை செய்கிறது. தனக்கு மதிப்பு வேண்டும் என்று விரும்புகிற இதயம், பேரும் புகழும் வேண்டும் என்று இறைவனை நாடிப் பிரார்த்திக்கிறது. தற்பெருமைக்காகவோ, உலகப் பொருளுக்காகவோ, செய்கின்ற பிரார்த்தனை கீழான பிரார்த்தனை ஆகின்றது. தற்போதம் அல்லது ஆன்ம போதம் எழப்பெற்று இதயம் இறைவனுக்காக உருகுமானல் அது உண்மையான பிரார்த்தனை ஆகிறது. அத்தகைய பிரார்த்தனையில் ஆடம்பரத்துக்கோ வெளிப்பகட்டுக்கோ இடமில்லை. அப்பிரார்த்தனையில் உள்ளம் உருகும்போது உள்ளத்தில் உள்ள கசடுகள் அகன்று, ஆங்குத் தெய்வ சான்னித்தியம் திகழ்கிறது. அதுதான் உண்மையான பிரார்த்தனை. அத்தகைய பிரார்த்தனையைச் செய்கின்ற மக்கள் பாக்கியவான்கள். அவர்கள் இறைவனுடைய சாம்ராஜ்ஜியத்துக்கு விரைவில் செல்கின்ருர்கள். உலகத் தேவைகளை இறைவனிடம் பிரார்த்திக்கலாகாது. அவற்றை நாம் முயற்சியினல் பெற்றுவிடலாம். ஞானம், பக்தி, வைராக்கியம் வேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்திக்கலாம். அப்பிரார்த்தனையை மற்றவர்களுக்குத் தெரியும்படி செய்யவேண்டிய அவசியமில்லை. பிரார்த்தனையில் வாய் என்ன சொல்கின்றதென்பது முக்கியமானது அன்று; உள்ளம் கசிந்து உருகுவதே முக்கியமானது. இக்கருத்தை இயேசுநாதருடைய இவ்வுபதேசம் விளக்குகிறது.

ஆன்மீக உலகம்

(174ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆன்மீகக் கருத்துக்கள் வேதங்களில் இருக்கின்றன. வேதங்களை வெளியிட்ட ரிஷிகள் பள்ளிக்கூடம் சென்று பாடப்புத்தகங்கள் படித்தவரல்லர். அவர்கள் தவத்தின் மூலம் தங்கள் உள்ளங்களைப் பண்படுத்தினார்கள். தவத்தின் மூலம் புறவுலகம், அகவுலகம் ஆகிய இரு உலகங்களையும் கடந்து உள்ளத்தை ஆன்மீக உலகத்துக்குச் செலுத்தினார்கள். ஆன்மீக உலகத்தில் அவர்கள் கண்ட காட்சிகளையும், பெற்ற அனுபவங்களையும் எழுதிவைத்தார்கள். அவைகள்தாம் வேதங்களென்றும், உபநிஷதங்களென்றும் பகரப்படுகின்றன. வால்மீகி மஹரிஷி இதற்குச் சான்று ஆவார். அவர் பாமரனாக ஆரம்பத்தில் இருந்தார். நாரதருடைய சந்திப்பு அவருக்கு வாய்த்தது. நாரதர் அவருக்கு 'ராம' என்று கூறும்படி உபதேசித்தார். ஆனால் அவரால் 'மரா' என்றுதான் சொல்லமுடிந்தது. 'மரா' என்பதைத் திரும்பத்திரும்ப உச்சரிக்க அது 'ராம, ராம' என்று மாறியது. ராம என்ற மந்திரம் அவருடைய உள்ளத்தைப் பேருள்ளமாகத் திருத்தியமைத்தது. அப்பேருள்ளத்திலிருந்து ராமாயணம் என்னும் அரிய நூல் தோன்றியது. வால்மீகி போன்று வியாசரும் பாடப்புத்தகம் படித்தவரல்லர். அவர் மகாபாரதம் என்னும் அரிய நூலை உருவாக்கித் தந்திருக்கிறார். வேதங்களை எல்லாம் தொகுத்துத் தந்திருக்கிறார். வேதங்களின் சாராம்சத்தைப் பிரம்மசூத்திரமாக எழுதியிருக்கிறார். இவர்கள் போன்று எத்தனையோ மஹரிஷிகள் ஆன்மீக உலக அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

புலன்களுக்குப் புலனாகும் இவ்வுலக வாழ்க்கைக்கு அப்பால் ஒன்றும் இல்லை என்று எண்ணி ஏமாற்றம் அடைந்து வருகின்றோம். அகவுலகம் முடிந்த உலகம் ஆகாது. ஆன்மீக உலகம்தான் முடிந்த நிலை ஆகும். ஆங்கு நம் வாழ்க்கை பூர்த்தி அடைகின்றது. ஆன்மீகம் நம் வாழ்வின் லக்ஷியமாக இருக்கவேண்டும். யாரோ சிலர்தாம் ஆன்மீக உலகுக்குச் செல்லுகின்றார்கள். சுவாமி விவேகானந்தர் புற உலகை நன்றாக ஆராய்ச்சி செய்தார். அவர் அகவுலகையும் ஆராய்ச்சிசெய்தார். அவ்விரண்டு உலகங்களுக்கும் அப்பால் உள்ளது யாது என்பதை அறிந்துகொள்ள அவர் அவாமிக உடையவராக இருந்தார். கடவுளைக்கண்டதுண்டா என்னும் கேள்வியைச் சான்றோர்களிடம் கேட்டார். கடவுள் இப்புற உலகத்திலும் அகப்படமாட்டார். அக உலகத்திலும் அகப்படமாட்டார். இவ்விரு உலகங்களையும் கடந்து அப்பால் சென்றால்தான் அவர் அகப்படுவார். அந்நிலைக்கு நம் உள்ளத்தை எடுத்துச் செல்லுவது எதுவோ அதைத்தான் கல்வி என்று பகரவேண்டும் என்பதைத் திருவள்ளுவர்

> " கற்றதனால் ஆயபயன்என்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின் "

என்று கூறியுள்ளார். கல்வி நம்மை அந்நிலைக்கு எடுத்துச் செல்லவேண்டும். தெய்வத்தைக் காணவேண்டும் என்னும் எழுச்சி உள்ளத்தில் உண்டாவதற்கு ஏற்ப வாழ்க்கை வாழ்ந்து வருவோமானால் அது சரியான வாழ்க்கை ஆகிறது. சரியான வாழ்க்கை வாழ்ந்து வருவோமானால் தெய்வத்தைக்காண வேண்டும் என்னும் ஆர்வம் உள்ளத்தில் உண்டாகிறது. உள்ளத்தில் அருள் உணர்வு ஓங்கும் படியாகத் தூய்மையான வாழ்வு வாழவேண்டும். சுவாமி விவேகானந்தர் நவீனக் கல்வியைக் கற்பதற்கிடையில் மனதைத் தூய்மைப்படுத்துவதில் தீவிரமாக இருந்தார். ஆகையினால்தான் அவருடைய உள்ளத்தில் கடவுளைக் காணவேண்டும் என்னும் பேராவல் எழுந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கல்வி கல்லாது உள்ளத்தை அப்பெருநிலைக்கு உயர்த்தினார். அவருடைய உள்ளத்தில் அருள்தாகம் இருந்தது என்பதை அவர் செய்த பிரார்த்தனை ஒன்று தெரிவிக்கிறது. ஆலயத்தில் மாலை வேளையில் ஆராதனை நிகழும்பொழுது மணி அடிப்பார்கள். அம்மணி ஓசை ஆலயத்துக்குப் பக்கத்தில் அமைந்து இருக்கும் அறையில் அமர்ந்து இருக்கும் ஸ்ரீராமகிருஷ்ணரின் காதில் வந்து விழும். அப்பொழுது அவருடைய உள்ளத்தில் அருள் உணர்வு ஓங்கிவிடும். அருள் உணர்வு ஓங்கப்பெற்ற நிலையில் "தாயே!

என் வாழ்வில் ஒரு நாள் கழிந்து போய்விட்டது என்பதை இம்மணி ஓசைமூலம் எனக்கு நீ அறிவிக்கின்ருய். உன் காட்சி பெருது என் வாழ்நாள் இப்படியே கழிந்துகொண்டு போகுமானல் என்வாழ்வு அனர்த்தமாய்ப் போய்விடாதா? அம்மா, இனி நான்வாழ்வதில் பிரயோஜனமில்லே. உன் காட்சி கிட்டவில்லே என்ருல் நான் மாண்டுபோவேன்.'' இங்ஙனம் அழுது புலம்பியவராக முகத்தைத் தரையில் தேய்த்துக்கொள்வார்.

விவேகானந்தர் உள்ளத்தில் எழுந்த அருள் உணர்வு "கடவுளேக் கண்டதுண்டா?" என்ற கேள்வியுடன் பல மகான்களே அணுகும்படி தூண்டியது. அவர் காலத்தில் வடநாட்டில் தேவேந்திரநாத தாகூர் என்னும் பெரியவர் ஒருவர் இருந்தார். மக்கள் அவருக்கு மஹரிஷி என்னும் பட்டம் வழங்கியிருந்தார்கள். அப்பெரியவரிடத்துச் சென்ருல் தம் அருள் வேட்கையைத் தணித்து வைப்பார் என்று விவேகானந்தர் அவரை அணுகி ''நீங்கள் கடவுளேக் கண்டதுண்டா?" என்னும் கேள்வியைக் கிளப்பினர். அதைக் கேட்ட மஹரிஷி அதிர்ச்சி அடைந்தவராக, ''பிள்ளாய்! நீ பெரிய யோகியாவாய்'' என்று ஆசீர்வாதம் பண்ணினர். விவேகானந்தர் அதிருப்தியுடன் அவரிடம் விடைபெற்றுக் கொண்டுவந்தார். விவேகானந்தர் உள்ளத்தில் எழுந்த அருள் வேட்கையை யாராலும் தணிக்க முடியவில்லே. கடைசியாக விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தார். தாகம் உடையவனுக்குத் தண்ணீர் இருக்கிறது என்று சொன்னல் பரமதிருப்தி அடைவான். கடவுளேக் கண்டதுண்டா? என்ற கேள்வியுடன் வந்த விவேகானந்தருக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் ''கடவுளேக் கண்டிருக்கிறேன்" என்று தந்த பதில் பரமதிருப்தியை உண்டு பண்ணியது. மேலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உனக்கும் அவரைக் காட்டுவேன் என்று உறுதி அளித்தார். விவேகானந்தரின் நெஞ்சைத் தொட்டு அவரை ஆன்மீக உலகுக்கு எடுத்துச் சென்ருர். சிறிது நேரம் அப்பெருநிலேயில் அவரை இருக்கச் செய்து அவ் உயர்நிலேயில் இருந்து அவர் மனதைக் கீழே இறக்கிக் கொண்டுவந்தார். அப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகானந்தரைப் பார்த்து ''நரேன்! இப்பொழுது உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். விவேகானந்தருக்கு இளமையில் நரேந்திரன் என்பது பெயர். ''சிறிது நேரத்திற்கு முன்பு இருந்த நிலேயில் என்னே யாண்டும் வைத்துவிடுங்கள். வேறென்றும் எனக்குத் தேவையில்லே'' என்ருர் விவேகானந்தர். இதுதான் அருள்நிலே.

இப்பெருநிலேயில் நம் உள்ளமும் இருக்க வேண்டும். இப்பெருநில்யை அடைய வேண்டும் என்று பேருக்கம் பெற்றவர்களாகவும், பேருணர்வு ஓங்கப்பெற்றவர்களாகவும் நாம் வாழ்ந்து வரவேண்டும். இதுதான் வாழ்க்கையின் லட்சியம். இந்த உயர்ந்த லட்சியத்தை மனதில் கொள்ளாது நூருண்டு உலகில் வாழ்வதை லட்சியமாகக்கொண்டிருக்கிருர்கள் சிலர். சாதாரண மக்களுள் சிலர் ஆயுளேப் பெருக்குவதை லட்சியமாகவும், இன்னும் சிலர் பொருள் தேடுவதை லட்சியமாகவும், இன்னும் சிலர் பட்டம் பதவிகளேத் தேடுவதை லட்சியமாகவும் கொண்டிருக்கிருர்கள். பள்ளிக்கூடத்து மாணக்கர்களே எதற்காகப் படிக்கிறீர்கள் ? என்று கேட்டால், ''அவர்கள் என்ஜினியர்கள் ஆவதற்கும், டாக்டர்கள் ஆவதற்கும், நீதிபதிகள் ஆவதற்கும், கணக்கர்கள் ஆவதற்கும் படிக்கிருேம்" என்று பகர்வார்கள். உண்மையை அறிவதற்காகவோ, மானிட நிலேக்கு அப்பால் உள்ள ஆன்மீக நிலேயை அறிவதற்காகவோ படிக்கிருேம் என்று யாரும் பகரமட்டார்கள். இன்றைய கல்வியின் போக்கும் மாணக்கர்களே அந்நிலேக்கு உயர்த்துவதாக இல்லே. பண்டைக் காலத்தில் ரிஷிகள் வசம் கல்வி ஒப்படைக்கப்பட்டிருந்தது. ரிஷிகள் உண்மையை நேரில் தரிசித்தவர்களாக இருந்தார்கள். அவர்களிடம் கல்வி பயின்ற மாணவர்கள் குருபக்தி உடையவர்களாக இருந்து குருவுக்குப் பணிவிடை செய்து வந்தார்கள். குருபக்தியின் மூலமாகவும், குரு பணிவிடையின் மூலமாகவும் உள்ளத்தைத் தூய்மைப் படுத்திய மாணவர்கள் ஞானத்தைப் பெறுவ்தற்குத் தகுதியுடையவர்களாக இருந்தார்கள். குரு ஒருவர் மாணக்கன் ஒருவனிடம் நூறு மாடுகளே ஒப்படைத்து அவை ஆயிரமாகப்பெருகும் வரையில் அவைகளே மேய்த்துக் காப்பாற்றி

வரவேண்டும் என்று கூறினர். ஆயிரம் மாடுகளாகப் பெருகும் வரையில் அம்மாணுக் கன் சிரத்தையுடன் அப்பணிவிடையைச் செய் தான். குருவினிடம் வைத்த பக்தியும், குரு வுக்குச் செய்த பணிவிடையும் அவன் உள் ளத்தைத் தூய்மைப்படுத்தின. அப்பொழுது இயற்கையில் நடக்கும்நிகழ்ச்சி ஒவ்வொன்றும் உள்ளத்தில் உள்ள ஞானத்தைத் தூண்டிவிடு வதை அவன் உணர்ந்தான். ஆயிரம் மாடுகளா கப் பெருகுவதற்குள் அவன் ஞானியானன்.

நம்மிடத்துள்ள கீழான இயல்பை வெல்லு வதற்கு அறிவு நமக்குத் துணைபுரியவேண்டும். அறிவு ஓர் எல்லை வரையிலும்தான் பயன் படும். அறிவைக்கொண்டு பூரண நிலையை அடைந்துவிட முடியாது. அறிவைப் பூர்த்தி பண்ணுவது ஆன்மீகம் ஆகும். உள்ளம் ஆன் மீக நிலைக்கு உயர்த்தப்படும்பொழுதுதான் நிறைஞானம் வாய்க்கிறது. இவ்வுலகத்தை ஆன்மீக ஞானம் பெறுவதற்குப் பயன்படுத்த வேண்டும். உலகுக்கு நாம் அடிமைகளாக இருக்கக் கூடாது. உலகை ஆளவந்த நாம் உலகத்தால் ஆளப்படுகின்ருேம். மனதை ஆளவந்த நாம் மனதுக்கு ஆட்பட்டு இருக் கின்ருேம். நாம் ஆளவந்தோமேயன்றி, ஆட் பட்டு இருப்பதற்கன்று. உலகத்திடம் நம்மை ஒப்படைத்தால் உலகத்துக்கு நாம் அடிமை யாகின்ருேம். தெய்வத்திடம் நம்மை ஒப்ப டைத்தால் நாம் தெய்வத்துக்கு அடிமை யாகின்ருேம். தெய்வத்திடம் நம்மை ஒப் படைத்து, உலகத்துக்கு அடிமையாயிருக் கும் நிலையிலிருந்து மீளவேண்டும்.

திருநாவுக்கரசர் தம்மை முற்றும் தெய்வத் திடம் ஒப்படைத்துவிட்டார்: அவருக்கு அரசரிடம் இருந்து ஆணை ஒன்று வந்தது. அவ் வாணையைக் கொண்டுவந்த அரசாங்கப் பணி யாளர்கள், அரசர் அவரை அழைப்பதாகக் கூறினர்கள். அதற்குத் திருநாவுக்கரசர் "நாமார்க்கும் குடி அல்லோம்" என்று கூறி அரசன் அழைப்புக்கு இணங்க மறுத்துவிட் டார். குடிமகன் அரசனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டவன். பக்தன் அரசனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டவன் அல்லன். பக்தன் மீது அரசனுடைய ஆணை செல்லாது. பக்தர் கள் பகவானுக்கு மட்டும் ஆட்படுவார்கள். மற்றவர்களுக்கு ஆட்பட்டவர்கள் அல்லர். "கோமார்க்கே நாம் என்றும் மீளா ஆள்" என்று நாவுக்கரசர் கூறுகின்ருர். உயிர் களுககு எல்லாம் தலைவனக இருக்கின்ற ஈச னுக்குத்தான் தாம் அடிமை என்று பகர்கின் ருர். தெய்வத்துக்கு அடிமையாக இருப்பதற் கும் உலகுக்கும், மனதுக்கும் அடிமையாக இல் லாது வாழ்வதற்கும் கற்றுக்கொள்ளவேண்டும்.

மனதில் ஆசைகள் எழுந்தவண்ணம் இருக் கும். அவ்வாசைகளை எல்லாம் பூர்த்திபண்ணு வது நம்முடைய திட்டமாக இருக்கக் கூடாது. மனதில் எழும் ஆசைகளை வென்று பழகுகின்ற அளவுதான் நாம் மனதை வென்றவர்கள் ஆகின்ருேம். உலகை ஆளவும் மனதை ஆள வும் நாம் வாழ்ந்து வருகின்ருேம். புற உல குக்கும், மன உலகுக்கும் அடிமைப்பட்டு வாழ் வது ஆன்மீக வாழ்வு ஆகாது. புறவுலகுக் கும் மன உலகுக்கும் அடிமைப்படாது வாழ முதலில் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அருள் உலகுக்கு நம் உள்ளத்தை அடிமைப்படுத்த நாம் கற்றுக்கொள்ளவேண்டும். தெய்வத் துக்கு நம் உள்ளம் அடிமையாகி, உலகப் பிடிப்பில் இருந்து அது மீளுமாகில் மனதுக்கு எல்லா நலன்களும் வந்து அமைகின்றன. உலகப் பிடிப்பில் கட்டுண்ட மனதில் தெய் வச் சிந்தனை எழுவதில்லை. எனவே உலகப் பிடிப்பில் கட்டுப்படாது மனதை விடுவிக்க வேண்டும். அப்படி மீட்டெடுக்கப்பட்ட மனதைத் தெய்வத்தின்பால் திருப்புதல்வேண் டும். தெய்வீகத்தில் மனதுக்குக் கவர்ச்சி உண்டாகவேண்டும். புறவுலகக் கவர்ச்சிக்கோ, அக உலகக் கவர்ச்சிக்கோ உள்ளம் வசப்படக் கூடாது. புறவுலகமோ, அகவுலகமோ நம் உள்ளத்தின்மீது ஆட்சி செலுத்தாது உள் ளத்தை அடக்கி ஆளுகின்றபொழுது நாம் அடக்கம் பயின்றவர்கள் ஆகின்ருேம். அவ் வடக்கம் நம்மை அமரநிலைக்கு எடுத்துச் செல்கின்றது. இவ்வுண்மைதான் "அடக் கம் அமரருள் உய்க்கும், அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்று பகரப்பட்டுள்ளது.

பொறிகளைக் கவர்ந்திழுக்கின்ற புறவுலகக் கவர்ச்சிக்கு வசப்படாது பொறிகளை அடக்கிவிடுவோமானல் புலனடக்கம் பழகிய வர்களாகின்ருேம். மனதில் எழும் ஆசைகள்

நம் உள்ளத்தைக் கவர்கின்றன. அக்கவர்ச்சிக்கு வசப்படாதிருப்போமானல் மன அடக்கம் பயின்றவர்களாகின்றோம். புலனடக்கத்தின் மூலம் மனோசக்தியும், மன அடக்கத்தின் மூலம் ஆத்மசக்தியும் நம்மிடத்து உண்டாகின்றன. ஆன்மசக்தி உடையவர்களாகும் போது நாம் பேரின்ப நிலையை அடைகின்றோம். புற உலகையும், அக உலகையும் ஆட்சி புரிகின்ற நிலையில் நம்மை நாம் அமைத்துக் கொள்வோமானல் நாம் வீரர்களாகவும், தீரர்களாகவும் மாறுகின்றோம். நம் உள்ளம் யாண்டும் தெய்வத்தைச் சார்ந்திருந்து பழக வேண்டும். அப்பொழுதுதான் நாம் அவ் உயர்நிலையை அடைய முடியும்.

'நாமே ருசி, பக்தப்ரியா' என்று சொல்லும் பழமொழி ஒன்று உண்டு. இறைவனுடைய நாமத்தைச் சொல்லும்பொழுது சுவை உண்டாகிறதென்றும், பக்தர்களைக் காணும்பொழுது பரமானந்தம் ஏற்படுகிறதென்றும் அதற்குப்பொருள். பகவந் நாமத்தைச் சொல்லிப் பரமானந்தம் அடைந்தவர் ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர் ஆவார். அவர் மக்களைப் பார்த்து "நீங்கள் விரும்பும் போகங்களெல்லாம் இறைவனுடைய நாமத்தை உச்சரிப்பதில் கிடைக்கின்றன" என்று கூறி நாமம் சொல்ல வரும்படி அழைக்கின்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பக்தர்களைக் கண்டால் பரவசநிலை வந்துவிடும். ஸ்ரீ விவேகானந்தரிடம் தெய்வ சாந்நித்தியத்தை நன்கு கண்டார். விவேகானந்தரைப் பார்க்கும்பொழுதெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பரவசநிலை வந்து விடும். இது அவரிடமிருந்த அருள்நிலையை விளக்குகிறது. பகவந் நாமத்தைச் சொல்லுவதிலும், பகவத் பெருமையைக் கேட்பதிலும், பக்தர்களைக் காண்பதிலும் உள்ளம் மகிழ்ச்சியடையுமானல் நாம் ஆன்மீக உலகில் இருப்பவர்களாகின்றோம். மனம் கீழ்நிலையில் இருக்கும்பொழுது தெய்வீக விஷயங்களில் மனம் விருப்பம் கொள்ளாது. மனம் கீழ்மையில் உழன்று கொண்டிருக்கும்போது அது தெய்வீகச் சூழ்நிலையை விரும்புவதில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உள்ளம் யாண்டும் பரபோதத்திலேயே மூழ்கிக் கிடக்கும். அவர் வாயிலிருந்து யாண்டும் தெய்வீக மகிமைகளே வெளிவந்துகொண்டிருக்கும். அவரைக் காண்பதற்கும், அவர் பேசுவதைக் கேட்பதற்கும், அவர் சாந்நித்தியத்தில் இருப்பதற்கும் விரும்பிய உண்மையான பக்தர்கள் அவரிடம் அடிக்கடி வந்துபோவார்கள். அவர்களுடன் அவர்களுடைய நண்பர்களும் சில சமயம் வருவார்கள். அப்படி வரும் நண்பர்களுள் மனம் கீழ்நிலையில் உள்ளவர்களும் இருப்பார்கள். புல்லியல்பு படைத்த அம்மக்கள் நீண்டநேரம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சாந்நித்தியத்தில் இருக்கமாட்டார்கள். "நாங்கள் கங்கைக்கரையில் காத்திருப்போம். நீங்கள் அங்குவந்து எங்களைச் சந்தியுங்கள்" என்று தங்கள் நண்பர்களிடம் கூறிவிட்டு ஸ்ரீராமகிருஷ்ணருடைய அறையிலிருந்து கிளம்பி வெளியே போய்விடுவார்கள். மனம் அடைந்துள்ள பரிபாகத்திற்கேற்ப அது சூழ்நிலையைத் தேர்ந்தெடுக்கிறது.

நம்மிடத்துள்ள இயல்புகளை வென்று பழகுவதற்குத்தான் நமக்கு உலகவாழ்வுஅமைந்துள்ளது. கீழான இயல்பை மேலான இயல்பாக மாற்றியமைக்கும்போது ஆன்மீக உலகம் நமக்குச் சொந்தமாகிறது. புறவுலக அகவுலக இன்பங்கள் யாவும் பொருளற்றவைகள் என்று ஒதுக்கித்தள்ளி மனதை அவற்றினின்றும் விடுவிக்கவேண்டும். மனதில் கீழ்மை இருக்கும் வரையில் அது நம்மைப் புறவுலக இன்பத்துக்கும், அகவுலக இன்பத்துக்கும் அடிமைப்படுத்தவே முயலும். புறவுலக, அகவுலக இன்பத்துக்கு அடிமைப்பட்ட மனிதன் இவ்வுலகத்தில் எவ்வளவு சீரும் சிறப்பும் உடையவனாக இருந்தாலும் பெருமைக்குரியவனாகான். அவனுக்கும் ஆன்மீக உலகுக்கும் வெகுதூரம். புறவுலக, அகவுலக இன்பத்திலிருந்து தன்னை மீட்டெடுத்தவன் உலகத்தவர் காட்சிக்கு இழிந்தவனாகத் தென்பட்டாலும் அவன் ஆன்மீக உலகில் வசிப்பவனாகின்றான்.

ஆன்மீக உலத்தில் வாழ்பவர்கள் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' எனப்பகர்கிறார்கள். ஆகவே அவ் அருள் உலகம் நாம் அடைய வேண்டியஉலகம் ஆகும். அவ்அருள் உலகத்துக்குப்போவதற்கு இவ்வுலகவாழ்வைப் பயன்படுத்தவேண்டும். இடையறாது முயன்று தெய்வத்தின் அருளைச் சார்ந்திருந்து அருள் உலகுக்குச் செல்வோமாக. (முற்றும்)

அனுமன் கண்ட சீதை

(திரு K. ராமமூர்த்தி M. Com.)

8. பொல்லாத அறிவும் போகாத உயிரும்

அசோகவனச் சீதையின் அளவுகடந்த துயரத்தை எடுத்துக்காட்டக் கம்பன் ஒரு புதிய முறையைக் கைக்கொள்கின்றான். சீதை தன் தனிமொழியில் தன்னுடைய உயிரையும் அறிவையும் தன்னிடமிருந்து பிரித்து முன்னிலைப்படுத்தி அவற்றிடம் பேசுவதுபோன்று அமைத்துள்ளான் கவிச்சக்கரவர்த்தி. தன் அறிவுடனும் உயிருடனும் சீதை என்ன பேசுகின்றாள் என்று பார்ப்போம்.

"நான் மிகவும் விரும்பிப்போற்றிக் காத்து வந்த என் நல்அறிவே! என் உடலுக்கு ஆதாரமான என் உயிரே! ஒப்பற்ற தனி நாயகனும் ராமனைப் பிரிந்த அன்றே நீங்கள் என்னைவிட்டுப் போயிருந்தால் நானாவது பழியிலிருந்து தப்பியிருப்பேன்! ஆனால் நீங்களோ சற்றும் நாணமின்றி, ராமனைப் பிரிந்து இத்தனை நாட்களாகியும் என்னைவிட்டுத்தொலைந்து போகாமலிருக்கின்றீர்கள். ஒருவேளை நான் காத்திருப்பதுபோன்று நீங்களும் ராமனைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கின்றீர்கள் போலும்! அப்படி நீங்கள் எதிர்பார்ப்பதுபோன்று ராமனின் பொன்னொளிர் மேனியைக் காணும் பேறு உங்களுக்குக் கிடைக்கப் போகின்றதா என்ன? எனக்கென்னவோ அந்த நம்பிக்கையில்லை. சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! தரையளித்த தனி நேமித் தசரதன் உயிர் துறக்கவும், எவ்வுயிரும், ஏழுலகும், தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவும் இரங்கி வருந்தவும், கொஞ்சம்கூட மனத்தில் இரக்கம் என்பதின்றிப் பெருங்காடு புகுந்த கொடியவரல்லவா ராமன்? அந்த ராமன் இப்போது நாம் படும் துயரை ஒரு பொருட்டாக மதித்து இங்கு வந்து நம்மைக் காப்பார் என்று எதிர்பார்ப்பது அறிவுடைய செயலோ? இதனால் வரும் பழி உங்களுக்கும்தானே? உங்களை எவ்வளவு அருமையாகக் காத்து வந்தேன்! ஆனால் நீங்களோ என்னைவிட்டுப் பிரியாமல் இருந்துகொண்டு எனக்குத் தீராத பழியை அல்லவா ஏற்படுத்திவிட்டீர்கள்? இது உங்களுக்கே நியாயமாகத் தோன்றுகின்றதா? சொல்லுங்கள்."

தன்னுடைய அறிவையும் உயிரையும் பார்த்துப்பேசித் தனது வருத்தத்தைச் சீதை வெளியிடுவதாக அமைத்த கவிஞனின் திறமை பாராட்டுதற்குரியது. இனி, சீதையின் எண்ணங்களைத் தொடர்ந்து கவனிப்போம்:—

"பிற ஆடவன் ஒருவன் என்னை விரும்பினான் என்று தெரிந்தும், அவன் என்னிடம் பேசிய கொடுமையான சொற்கள் என் செவியில் வந்து தங்கி நின்றும், அவனைச் சார்ந்தவர்கள் அவனுக்காக என்னிடம் பேசிய பொருந்தாத பேச்சுக்களைக் கேட்டுங்கூட இந்தத் தொலையாத உயிரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கின்றேனே, என்னை விடக் கீழ்மையான அரக்கியர் இந்த உலகில் வேறு யார் இருக்கப்போகின்றார்கள்?"

சீதையின் இந்த எண்ணங்களில் இரண்டு கருத்துக்கள் வெளிப்படுவதைக் காணலாம்:—

1. ராமனைக் காணும் ஆசையினால்தான் தன் உயிரும் அறிவும் தன்னுடன் ஒட்டிக்கொண்டிருப்பதாகச் சீதை கூறுகின்றாள். அசோகவனச் சிறைக்கொடுமைகளைத் தாங்கிக்கொள்ளும் வலிமை சீதைக்கு வந்ததே இந்த நம்பிக்கையினால்தான். என்றாவது ஒரு நாள் ராமன் வருவான், அவன் திருமேனியைக் கண்ணாரக்கண்டு களிக்கலாம் என்ற நம்பிக்கையே சீதைக்கு எல்லையில்லாத பொறுமையைத் தந்தது. பின்னர் மாயாசனகப் படலத்தில் ராவணன் மீண்டும் வந்து சீதையிடம் காதல் பிச்சை கேட்டு நின்றபோது அவனிடமே சீதை இதனைத் தெரிவிக்கின்றாள்: "என் உயிரை அழித்துக்கொள்ளாமல், நாணமின்றி நீ கூறும் சொற்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் புண்ணிய மூர்த்தியாகிய என் ராமனை என்றாவது ஒருநாள் பார்ப்பேன் என்ற நம்பிக்கையினால்தான் என்பதை நினைவில் நிறுத்திக்கொள்!":—

"ஊன் இலா யாக்கை பேணி,
உயர் புகழ் சூடாது, உன் முன்
நாண் இலாது இருந்தேன் அல்லேன்;
நவை அறு குணங்கள் என்னும்

பூண் எலாம் பொறுத்த மேனி
புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும்
காதலால் இருந்தேன் கண்டாய்!"

—யுத்தகாண்டம், மாயாசனகப் படலம் 22.

[ஊன் இலா யாக்கை - உணவின்றி வருந்திய உடல். நவை அறு குணங்கள் என்னும் பூண் எலாம் பொறுத்த மேனி - குற்றமற்ற பண்புகள் என்னும் அணிகலன்களையே தன் மேனியில் தாங்கியுள்ள ராமன்]

2. ராவணன் மனத்தில் தன்னைப்பற்றிய தவறான எண்ணம் வந்ததே தனக்குப் பழியைத் தரும் என்று கருதினாள் சீதை. இந்தப் பழியைப் போக்கத் தன் உயிரை விட்டுவிடுவதே முறை. இருப்பினும், உயிர்விடாது அரக்கனின் காமப் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருப்பது, தான் அரக்கியரைவிடக் கீழானவளாகப் போய்விட்டதற்கு நல்ல சான்றாகும் என்று தன்னைத்தானே நொந்துகொள்கின்றாள் சீதை. பிற ஆடவர் நெஞ்சில் புகுவது கற்புடைய பெண்டிர்க்குப் பழிதரும் என்பது பழந்தமிழ்ச் சிந்தனை. இதனை மணிமேகலை என்ற காப்பியத்தின் ஆசிரியரான சீத்தலைச் சாத்தனார்:—

"மண்டிணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டிராயிற் பிறர் நெஞ்சு புகாஅர்"

— மணிமேகலை, சிறைசெய் காதை 45-46.

என்று எடுத்துரைக்கின்றார். மற்றொரு காப்பியமான சிலப்பதிகாரத்தில் கண்ணகியை அறிமுகப்படுத்தும்போது ஆசிரியர் இளங்கோவடிகள், அவள் செந்தாமரையில் உறையும் திருமகள் போன்ற வடிவுடையவள் என்றும்,

"தீது இலா வடமீனின் திறம் இவள் திறம்"

என்றும் சொல்வார். இதில் 'குற்றம் இல்லாத அருந்ததியின் புகழையுடைய கற்பு கண்ணகியின் கற்பு' என்று வருவது குறிப்பிடத்தக்கது. 'தீது இல்லாத அருந்ததி கற்பு' என்பதில் 'தீது' என்பது எதைக் குறிக்கின்றது என்று விளக்க முற்பட்ட சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்:

"தீது = பிறர் நெஞ்சு புகுதல்"

என்று விளக்கம் சொல்வார். எனவே ராமாயணத்தில் சீதை தன்னைத்தானே நொந்து கொள்வது அவள் பெண்களின் கற்புப்பற்றிக் கொண்டிருந்த கருத்தினைத் தெளிவாக்குகின்றது.

9. "தீதும் நன்றும் பிறர்தர வாரா"

துன்பக் கடலில் மூழ்கியிருந்த சீதையின் மனம் என்னவெல்லாம் எண்ணி எண்ணித் தவித்தது என்பதற்கு அவளுடைய தனிமொழியில் காணப்படும் இன்னொரு கருத்துச் சான்றாகின்றது.

"சொல்லொணாத பழியைச் சுமந்துகொண்டு இன்னும் உயிர் வாழ்கின்ற என்னுடைய உயர்ந்த குடிப்பிறப்பும், நாணமும் நன்று! நன்று! கற்புடைய மகளிர் வரலாற்றில், இல்லறம் துறந்து கணவனை விட்டுப் பிரிந்தும்கூட உயிர் வாழ்ந்த பெண்டிர் என்னைத் தவிரவேறு யார் இருக்கப் போகின்றார்கள்? அதனால் தான், 'பிறன்மனையில் இருந்த பெண்ணை மீண்டும் ஏற்றுக்கொள்ளுதல் அறமன்று' என்று எண்ணி என் உயிர்த்துணைவன் என்னை மீட்க வராது இருந்துவிட்டார்போலும்! இல்லறத்தைத் துறந்த நான் எனக்குப் பழிதேடிக் கொண்டதுடன் ராமனுக்கும், 'தன் மனைவியைக் கவர்ந்துசெல்ல விட்டுவிட்டவன்' என்ற பழியையுமல்லவா ஏற்படுத்திவிட்டேன். என்றைக்கு அந்த நீசன் என்னைச்சிறை யெடுத்தானோ அன்றைக்கே என் ஆவியைப் போக்கியிருக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் உலகத்தவர் பெரும்பழி தூற்றப் பெருமை கெட்டு இன்னமும் வாழ்வது எந்தச் சொர்க்கத்துக்குப் போகவோ?

"இதுவரையில் பழி ஏற்படாத பெரும்புகழ் படைத்த குலத்தில் தோன்றிய நான் என் குலப் பெருமையைக் காக்கவாவது உடனே உயிரைப் போக்கவேண்டும். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது சான்றோர் வாக்காதலால் எனக்கு ஏற்பட்ட பழியையும், என்னால் என் குலத்திற்கு ஏற்பட்ட பழியையும் நான் தானே துடைக்க முயலவேண்டும்! 'தம் காவலிலிருந்த பெண்ணைப் பிறன் கவர்ந்து செல்ல, அவள் தன் உயிரைப் போக்க, இரண்டையும் தடுக்கத் திறமில்லாத இவர்கள் க்ஷத்திரியர்களா?' என்று உலகத்தவர் கூறும் பழியை ராம-இலக்குவர் ஏற்றுக் கொள்ளட்டும்; அல்லது அப்பழியை நீக்க இங்கு வந்து அரக்கரோடு போர் செய்து வெற்றி வாகை

சூடட்டும். அவ்வாறு வெற்றி பெற்று என்னைச் சிறை மீட்டார்களானால், அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பழிதான் நீங்குமே தவிர எனக்கு ஏற்பட்டுள்ள பழி வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து இருக்கத்தானே போகிறது? 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' போன்று மானத்திற்குப் பங்கம் வந்தால் தம் உயிரைப் போக்கும் பண்புடைய பெண்டிர்க்கு முன்னே 'கருமுகிலைப் போன்ற கணவனைப் பிரிந்து கள்வர் ஊர் இருந்தும் உயிர் பிரியாதவள்' என்று மகளிர் என்னைப் பழித்து ஏசும் வண்ணம் எவ்வாறு உயிர் வாழ்ந்திருப்பேன்?"

'ராமன் வந்து அரக்கர் சிறையிலிருந்த தன்னை மீட்டாலும்கூட, அதனால் ராமனுக்கு ஏற்பட்டிருந்த பழிதான் நீங்குமேயல்லாது 'பிறன் மனையில் இருந்தவள்' என்ற பழி தன்னைத் தொடர்ந்து வரத்தானே செய்யும்' என்று சீதை நினைத்தது எவ்வளவு சரியானது என்பதை யுத்தம் முடிந்தபின் நடந்த நிகழ்ச்சிகள் தெளிவாக்குகின்றன. சிறை மீட்கப்பட்டு, சிந்தையெல்லாம் ராமனே நிறைந்திருக்க, அவனை நாடி வந்த சீதைக்கு ராமன் தந்த வரவேற்பு எப்படிப்பட்டது? கொடுங்கோல் அரக்கரைக் கொன்று குவித்து நெடுங்கண் சீதையைச் சிறைமீட்டது அவளை மீண்டும் தன்னுடன் சேர்த்துக்கொள்வதற்காக அன்று என்கின்றான் கோசலநாடுடைய வள்ளல். தன்னுடைய வீரத்திற்கு ஏற்பட்ட பழியைப் போக்கிக்கொள்ளத்தான் கருங்கடல் கடந்து, அரும்படை தொலைத்து, அரக்கர் தலைவனைக் கொன்றானும் அல்லையாண்டமைந்த மேனி அழகன். அரக்கர் கொடுஞ்சிறையில் ஐயிரு மாதங்கள் அல்லற்பட்ட அருந்ததி கற்பினாளைப் பார்த்து அறத்தின் மூர்த்தி கூறிய சொற்கள் இவை:

"உன்னை மீட்பான் பொருட்டு, உவரி தூர்த்து, ஒளிர்
மின்னை மீட்டுறு படை அரக்கர் வேர் அற,
பின்னை மீட்டு, உறுபகை கடந்திலேன்; பிழை
என்னை மீட்பான் பொருட்டு இலங்கை எய்தினேன்."

— யுத்தகாண்டம், மீட்சிப் படலம்-63.

[உவரி-கடல்; பிழை-பழி] அசோகவனச் சீதையின் அகத்தில் மலர்ந்த இந்த மலரின் வாசனை மீட்சிப்படலத்தில் ராமனுடைய சொல் மலரிலிருந்து வீசும் மணத்துடன் ஒத்திருக்கும் விந்தையைப் பார்க்கின்றோம். இனி, சிறையிருந்த செல்வியின் சிந்தனைகளைத் தொடர்ந்து அறிந்துகொள்ள முயல்வோம்.

10. இளையபெருமாளுக்கு இழைத்த அநீதி

அசோகவனச் சீதையின் அகத்தை அரித்துக் கொண்டேயிருந்த ஒரு நிகழ்ச்சி ஆரண்யத்தில் அவள் இலக்குவனைக் கொடுமையாகத் திட்டியதுதான். இலக்குவனுக்குத் தான் செய்த மிகப் பெரிய துரோகம் என்றே சீதை அதனை நினைத்து வந்தாள். அவளுடைய தனிமொழியில் இதன் எதிரொலியைக் காணலாம்.

"ராமனும் இலக்குவனும் என்னைக் காக்காமல் இருந்தார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அறிவில்லாமல் நான்தானே வஞ்சக மானைத் தொடர்ந்து செல்லும்படி என் மன்னவனைப் போக்கினேன்! அது பொன் மானன்று, பொய்மான் என்று புகன்ற இளையவன் வார்த்தையை ஏற்றுக்கொள்ள மறுத்தேன்! அதன் பிறகாவது எனக்குப் புத்தி வந்ததா? வஞ்சக மான் வாய்திறந்து அலற, அதை மெய்யென்றே எண்ணி என்னைத் தாயாகக் கருதிப் பணி செய்த இலக்குவனைத் தகாத வார்த்தைகள் கூறி விரட்டினேனே! அது மட்டுமா? கடைசியில் நஞ்சினும் கொடிய அரக்கன் ஊரில் சிறைப்பட்டு வாழும் இழி நிலையும் அடைந்தேன். இத்தனை பழிகள் சுமந்த நான் உயிரோடிருத்தலை உலகத்தவர் ஏற்றுக்கொள்வார்களா?

"வஞ்சனை மாவின்பின் மன்னைப் போக்கி, என்
மஞ்சனை வைது பின் வழிக்கொள்வாய் என
நஞ்சனையான் அகம் புகுந்த நங்கையான்
உய்ஞ்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ?"

-- உருக்காட்டுப் படலம் 17.

[மன்னைப் போக்கி-மன்னவனாகிய ராமனைப் போகும்படி செய்து மஞ்சனை—மைந்தனை, இலக்குவனை]

இந்தப் பாடல் சீதையின் மன உணர்ச்சிகளை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. தன்னுடைய இந்த நிலைக்குத் தானே காரணம் என்பதற்குத் தன் செயல்களையே சான்று காட்டுகின்றாள் சீதை. இதில் இலக்குவனைத் தன் ''மைந்தன்'' என்று குறிப்பிடுவது நம் உள்ளத்தை உருகவைக்கும் ஒரு சொல்லா

கும். இலக்குவனிடம் சுடுஞ்சொற்கள் பேசியது சீதையின் மனத்தை விட்டு அகலவே இல்லை என்பதற்கு இப்பாடலும் ஒரு சான்றுகும். மேலும், இலக்குவனைத் தான் கடிந்து பேசிய பேச்சுக்களை இலக்குவன் மூலமாக ராமன் அறிந்துகொண்டதால்தான் தன்னை விடுவிக்க ராமன் வரவில்லையோ என்ற எண்ணமும் சீதைக்கு இருந்தது என்பதை,

"என்னை, நாயகன், இளவலை, என்னலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு "அறிவு இலன்" எனத்
[துறந்தானே?"

— காட்சிப்படலம் 14

என்ற சீதையின் வாக்கிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

இலக்குவன் சீதையைத் தாயாகவே கருதிப் பணிவிடை செய்துவந்தான். 'தபஸ்வினி' என்று தசரதனல் போற்றப்பட்ட சுமித்திரை, ராமனுடன் வனம் புறப்பட்ட தன் மகன் இலக்குவனைப் பார்த்து,

रामं दशरथं विद्धि माम् विद्धि जनकात्मजाम् ।
अयोध्यामटवीं विद्धि गच्छ तात यथासुखम् ॥

— வான்மீகி ராமாயணம், அயோத்யா காண்டம் 40. 10.

[तात-மகனே! रामं-ராமனை दशरथं-தசரதராக विद्धि-பாவித்து நீ நடந்துவருவாயாக जनकात्मजां ஜனகனின் மகளான சீதையை मां-நான் என (தாய்போன்று) विद्धि-பாவித்து நடந்து வருவாயாக! अटवीं-கானகத்தை अयोध्यां-அயோத்தியாக विद्धि-நினைத்துக்கொள்வாயாக! यथासुखं-மனக்குறையின்றி गच्छ-சென்று வருவாயாக!] என்று கூறுவதாக வான்மீகிபகவான் தெரிவிக்கின்றார்.

ஆதி கவியைப் பின்பற்றியே கம்பனும், 'சொல் மாண்பு உடைய அன்னை சுமித்திரை' இலக்குவனிடம் சொன்னதாகப் பாடுகின்றான்.

"......அவ் வனம் இவ் அயோத்தி;
மாகாதல் ராமன் நம் மன்னவன்; வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் நம் பூங்குழல் சீதை–என்றே
ஏகாய்; இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்" என்றாள்.

—அயோத்யா காண்டம் நகர்நீங்கு படலம் 146

[மன்னவன் – தசரதன்; ஏதம் - குற்றம்.]

வான்மீகியின் வழிச்சென்று பாடிய கம்பன் சுமித்திரையின் சொற்களாக முனிவர் பெருமான் தெரிவித்ததற்குமேல் ஒருபடி அதிகம் சென்று அவளைப் பேச வைக்கின்றான். ராமனைத் தந்தையாகவும், சீதையைத் தாயாகவும், கானகத்தை அயோத்தியாகவும் கருதிவர வேண்டும் என்ற அறிவுரையை வான்மீகத்திலிருந்து அப்படியே எடுத்துக்கொண்ட கம்பன் அத்துடன் நின்று விடவில்லை. ராமனைத் தொடர்ந்து செல்லும் இலக்குவன், தான் ராமனுடைய தம்பி என்ற எண்ணத்துடன் அவனுக்குப் பணி செய்யக்கூடாதாம்; ஒரு தெய்வத்திற்குப் பக்தன் பணி செய்வது போன்று, தலைவனுக்குத் தொண்டன் பணி செய்வது போன்று ராமனுக்குத் தொண்டு செய்ய வேண்டுமாம். ராமனும் சீதையும் நகரத்திற்குத் திரும்பி வரும்போதுதான் அவனும் திரும்பவேண்டும். தெய்வச் செயலால் ஒருக்கால் ராமன்–சீதை நகரத்திற்கு வரமுடியாத நிலை நேரிட்டால் அவர்களைக் காக்கும் முயற்சியில் முதலில் தன் உயிரைத் தரவேண்டும் இலக்குவன் என்று அறிவுறுத்துகின்றாள் சுமித்திரை தான் பெற்ற மகனுக்கு. தியாகத்தின் உச்சத்தை, தாய்மையின் பூரணத்துவத்தை வேறு எந்தக் கவிஞனும் இப்படிச் சிறப்பித்திருக்கின்றானு என்பது சந்தேகம் தான். ஒவ்வொரு பாத்திரத்தையும் அதனதன் குணத்தில் உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்வதே கம்பனின் வழக்கம். வான்மீகத்திலேயே சுமித்திரை மிக உயர்ந்த பண்பாடுடைய தாயாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றாள். அப்படிப்பட்ட சுமித்திரை என்னும் பாத்திரத்தை மெருகு ஏற்றி அதன் உச்சநிலைக்கு உயர்த்திச் செல்கின்றான் கம்பன். கம்பராமாயணத்தின் மணிமுடியான செய்யுட்களில் இதுவும் ஒன்று: -

"......மகனே! இவன் பின்செல்; தம்பி
என்னும்படி அன்று; அடியாரின் ஏவல் செய்தி;
மன்னும் நகர்க்கே இவன்வந்திடின் வா;அது அன்றேல்
முன்னம் முடி" என்றனள் வார்விழி சோர நின்றாள்.

—அயோத்யா காண்டம் நகர்நீங்கு படலம் 147

இலக்குவனிடம் சுமித்திரை கூறிய இவ் அறிவுரை ராமனுக்குப் பிரமிப்பூட்டியது. தாயையும் மகனையும் பார்த்து அவன் நெஞ்சம் விம்மிப் பூரித்தது. அவனுடைய உள்ளத்தில் இவ்வார்த்தைகள் ஆழமாகப் பதிந்துவிட்டதன் பயனுசப் பலமுறை சீதையிடம் இதுபற்றிப் பேசிப் பேசி வியந்திருக்கின்றான்.

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆத்மாவின் நான்காவது லக்ஷணமான சச்சிதானந்த ரூபத்தைப்பற்றி இனி அறிந்து கொள்ள முயல்வோம். ஆத்மாவின் ஸத் ரூபம் எது? ஆத்மாவின் சித் ரூபம் எது? ஆத்மாவின் ஆனந்தரூபம் எது?

பதில்: முக்காலத்திலும், எதனுலும், எவ்விதத்திலும் பாதிக்கப்படாமலும், மாறுபாடு அடையாமலும் ஒரேவிதமாக இருப்பது எதுவோ அது ஸத் எனப்படுகிறது. ஸத்தின் தன்மை, லக்ஷணம் இது. இந்த லக்ஷணம் ஆத்மாவினிடத்தில் இருக்கிறது. இதற்கு சாஸ்திரப் பிரமாணம் என்ன? (நம் முன்னேர்களின், சான்ரோர்களின் அனுபூதி, அனுபவம் தான் சாஸ்திரப் பிரமாணம் எனப்படுகிறது.) வேதாந்த சாஸ்திரத்தில் இந்தப் பிரபஞ்சத்தின் சிருஷ்டிக்கு முன்பு ஸத் ஒன்றுதான் இருந்தது. அதிலிருந்து ஆகாசம், காற்று முதலியன உண்டாயின என்று சிருஷ்டி கிரமம் விளக்கப்பட்டிருக்கிறது. உலகில் ஜீவர்களாகிய நம் அனுபவமும் இதேதான். நம் அனுபவம் இக்கோட்பாட்டிற்குப் பிரமாணம் ஆகிறது. அனுபவத்தின் முடிவுதான் இந்த விளக்கம் ஆகும். பணக்காரன், தரித்திரன், கர்மகாண்டி, பக்தன், முமுக்ஷு என்று உலக மக்களைப் பிரிக்கலாம். இவர்களின் அனுபவம் வருமாறு:

"நான் பூர்வஜன்மத்தில் ஸத் பாத்திரங்களுக்கு (நல்லவர்களுக்கு) ஏதோ கொஞ்சம் கொடுத்திருப்பேன். அதனுல்தான் இந்த ஜன்மத்தில் கொஞ்சம் ஐசுவரியத்தை அனுபவிக்கிறேன். நான் இந்த ஜன்மத்திலும் என் செல்வத்தை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்வேனுகில் நான் மேலும் நன்மை அடைவேன்" என்று நல்ல தனவந்தன் கருதுகிருன். இதேபோன்று வறுமையில் வாடுபவனும் நினைக்கிருன். ''நான் முன் ஜன்மத்தில் நல்லவர்களுக்கும் துன்புற்றவர்களுக்கும் எந்த உபகாரமோ, தானமோ, நன்மையோ செய்யவில்லை. அதன் விளைவாகச் சம்பத் இந்த ஜன்மத்தில் என்னைவிட்டுப் போய்விட்டது. இந்த ஜன்மத்திலாவது நான் என் சக்திக்கு இயன்றவாறு பிறருக்கு நன்மை செய்யாவிடில், ஈந்து வாழாவிடில் நான் வரும் ஜன்மங்களிலும் இதே துயரத்தில் வாடுவேன்'' என்று நினைத்துப் பார்க்கிருன்.

''நான் பூர்வ ஜன்மங்களில் நற்கர்மங்களைச் செய்தேன். அந்த வாசனை, சம்ஸ்காரங்களின் விளைவாக இந்த ஜன்மத்திலும் என்னிடம் நல்ல பிரவிருத்தி நற்கர்மங்களைச் செய்தலில் விருப்பம், முயற்சி உள்ளது. இதன் விளைவாக நான் சுவர்க்கத்தில் தேவத்தன்மை அடைவேன். சொர்க்க இன்பங்களை அனுபவிப்பேன்'' என்று கர்மகாண்டி நினைக்கிருன். "பூர்வஜன்மத்தில் பகவானை உபாசித்தேன். அம்முயற்சியில் நான் இடைவழியில் நிற்கிறேன். இந்த ஜன்மத்தில் அதன் தொடர்ச்சியாக ஈசுவர உபாசனை, பக்தி பண்ணுகிறேன் என்பது என் பாக்கியம். நான் முன் வைத்த காலைப் பின்வைக்கமாட்டேன். கடவுள்கைவிடமாட்டார். நான் இந்த ஜன்மத்தில் இல்லாவிட்டாலும் வரும் பிறவிகளில் என் பக்தி நிறைநிலை அடையும். நான் பகவானை அடைவேன்" என்று பக்தன் பிரார்த்திக்கிருன். "முன்பு பல ஜன்மங்களில்சத்கர்மங்களை ஈசுவர அர்ப்பணமாகச் செய்துள்ளேன். அதன் விளைவாக அன்ரே இந்த ஜன்மத்தில் சாதனத்தில் ஆர்வமும், முமுக்ஷுத்வமும் உடையவனுய்ப் பிறந்துள்ளேன்! சற்குருவை அடைவேன், சிரத்தையுடன் சாதன சதுஷ்டயத்தில் ஈடுபடுவேன். சிரவணம் முதலிய சாதனங்களால் நான் ஆத்மஞானம் அடைவேன்" என்று முமுக்ஷு ஆர்வம் கொள்கிருன். நமக்குப் பல பிறவிகள் முன்பு உண்டாகியிருக்கின்றன. இப்பிறவி இடைநிலை. இனி பல பிறவிகளில் படிப்படியாக முன்னேற்றமடைந்து நிறைநிலை அடைவோம். இவ்வுலகில் காணப்படும் அறிவு, ஆற்றல், பண்பில் ஏற்றத்தாழ்வு, இன்பதுன்பம், நோய் ஆகிய எல்லாவற்றிற்கும் நல்ல சமாதானம், இந்தப் பலபிறவிக் கொள்கைதான். கடவுள் பாரபக்ஷம் அற்றவர். வாழ்வு இந்த ஒரு பிறவியுடன் முடிந்து விடுவதன்று. பகுஜன்மவாதம் முக்திக்கு ஒத்த

கொள்கை. உண்மைக்கு ஒத்து இருப்பதால் மேலே கண்டுள்ளபடியெல்லாம் நாம் நினைக்கிறோம். எல்லாப் பிறவிகளிலும் சரீரம் மாறி வந்தது. அறிவு, குணம், பண்பு எல்லாம் மாறிக்கொண்டே வந்தன; வளர்ந்து வந்தன. ஒவ்வொரு பிறவியிலும் எல்லாப் பிறவிகளுக்கும் நடுநாயகமாக இணைப்பாக இருந்தது எது? எல்லாப்பிறவிகளையும் எடுத்தது எது? அது ஆத்மா; அது அழியாதது. இந்த அழியாத தன்மை ஸத் எனப்படுகிறது. எல்லா உயிர்களிடத்திலும் 'अहमस्मि' நான் இருக்கிறேன்' என்று மூன்று காலங்களிலும் உணர்வது இந்த ஸத் தன்மையின் காரியமாகும், விளைவாகும், வெளிப்பாடு ஆகும். ஆத்மா மூன்று காலங்களிலும் பாதிக்கப்படாமல் மாறுபாடு அடையாமல் ஏகரூபமாய் இருப்பதால் ஆத்மாவுக்கு 'ஸத்' என்றும் இருத்தல் அதன் லக்ஷணம் என்றும் சொல்லப்படுகிறது.

அனுபவத்துக்கு எட்டியுள்ள இந்த விஷயம் யுக்திக்கும் பொருந்தி வருகிறது. நாம் இந்த உலகத்தில் இருக்கிறோமா இல்லையா என்பதற்கு யுக்திப் பிரமாணம் வேண்டியதில்லை. நாம் இருக்கிறோம் என்று உணர்கிறோம். நமக்குச் சரீரம் இருக்கிறதா இல்லையா என்கிற விஷயம் பிரத்யக்ஷம். இதற்கு ஆராய்ச்சி தேவை இல்லை. இந்தச் சரீரம் எதனால் ஏற்பட்டது? கர்மாவினால் ஏற்பட்டது. இந்தக் கர்மம் நம்முடையதா, பிறருடையதா? நம்முடையதுதான். இதில் சந்தேகத்திற்கு இடமில்லை. அவரவர் கர்மாவின் பலனை அவரவரே அடைகின்றனர். பிறர் கர்மாவினால் வேறு ஒருவன் பயனை அடைவான் என்றால் அது பொருந்தாது, நியாயமில்லை. நம் கர்மத்தின் பயனாகத்தான் நமக்கு இந்தச் சரீரம் வாய்த்திருக்கிறது; இந்தச் சூழ்நிலையில் பிறந்திருக்கிறது. இந்தச் சரீரத்தை உண்டுபண்ணியகர்மம் இந்த ஜன்மத்தில் செய்யப்பட்டதா? அல்லதுமுன் பிறவிகளில் செய்யப்பட்டதா என்று யோசித்தால் முன்ஜன்மங்களில் செய்யப்பட்டது என்றே சொல்லவேண்டும். இந்தச் சரீரம் உண்டான பின் செய்யும் கர்மம் இந்தச் சரீரத்துக்குக் காரணமாக இருக்கமுடியாது. காரணம் என்பது காரியம் ஏற்படுவதற்கு முன்பே இருக்கவேண்டும். இந்தச் சரீரம் ஏற்பட்டபின் நாம் செய்யும் கர்மமானது இந்தச் சரீரம் ஏற்படுவதற்கு முன் இல்லாதபடியால் இது இந்தச் சரீரத்துக்குக் காரணமாக இருக்க முடியாது. ஆகவே முற்பிறவிகளில் செய்த கர்மம்தான் இந்தச் சரீரத்துக்குக் காரணம் ஆகும். முன்பு கர்மம் செய்யும்போது நாம் இருந்தோமா இல்லையா என்று விசாரித்தால் இருந்தோம் என்றே சொல்ல வேண்டும். இல்லாமலிருந்தால் எப்படிக் கர்மாவைச் செய்திருக்க முடியும்? அப்போது நமக்குச் சரீரம் இருந்ததா இல்லையா என்றால், இருந்தது. சரீரமில்லாவிட்டால் கர்மாவைச் செய்யமுடியாது. அது அந்தப் பிறவியில் செய்த கர்மாவின் பலனா அல்லது அதற்கு முன் பிறவிகளில் செய்த கர்மாவின் பலனா என்று விசாரித்துப் பார்த்தால் முன்பு முடிவு செய்தது போன்று அது அதற்கு முன் ஜன்மங்களில் செய்த கர்மங்களின் பலன்தான் என்கிற முடிவு நிச்சயமாகிறது. இப்படியே விசாரித்துக்கொண்டு போனால் சரீரத்திற்கும் கர்மாவுக்கும் உள்ள தொடர்பு நதிப்பிரவாஹம்போன்று அநாதியாக உள்ளது விளங்கும். தண்ணீர் நீர்ப்பெருக்கு வெவ்வேறாக இருந்தும் பிரவாஹத்தில் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது போன்று கர்மாவினால் சரீரம், சரீரத்தால் கர்மம் என்கிற ரீதியில் அநாதி காலமாகக் கர்மாவும் சரீரமும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. இது தான் பிரவாஹ அநாதி எனப்படுகிறது. இவ்விரண்டுடன் கூடிய ஆத்மாவுக்கு உற்பத்தியே (கர்மமும் சரீரமும்) இல்லாததால் ஆகாசம் போன்று அதன் சொருபமே அநாதிதான். இது முக்கியமான அநாதி எனப்படுகிறது. இவ்வாறு சென்றகாலத்திலும் நிகழ்காலத்திலும் ஆத்மாவின் இருப்பை யுக்தியாலும் தீர்மானிக்கலாம்.

இனி வரும் காலத்தில் ஆத்மா இருக்குமா, இருக்காதா என்று புத்தியினால் ஆராய்ந்து பார்ப்போம். நாம் முன்ஜன்மாவில் சிரவணம், மனனம் இவைகளைச் செய்யாமல் வெறும் லௌகிக கர்மாவை மட்டும் முக்கியமாகக் கருதிச் செய்ததால் இந்த ஜன்மமும் சரீரமும் ஏற்பட்டிருக்கின்றன. இப்போது நாம் செய்யும் கர்மமும் இனி, பின்னால் ஜன்மங்களைக் கொடுக்

கும். இப்படிப் பார்த்தால் வருங்காலத்திலும் கர்மத்திற்கும் சரீரத்திற்கும் பிரவாஹம் போலத் தொடர்வு, இணைப்பு, இருக்கிறது என்பது தீர்மானமாகிறது. இதற்கு முடிவே இல்லை. தத்துவ ஞானம் ஏற்பட்டுக் கர்மம் நாசமடைந்தால்தான் சரீரம் ஏற்படாது. (இங்கு நுண்ணிய விஷயம் ஒன்றை விளங்கிக் கொள்வோம். சாகும் பரியந்தம், ஞானியும் கர்மத்தை விடமுடியாது. கர்மம் நின்ருல் ஜீவிதம் முடிந்துவிடும். சுவாசிப்பது, எண்ணுவது, ஜீரணம் பண்ணுவது, ரத்த ஓட்டம்—இவை யாவும் கர்மங்கள். ஞானம் வந்தாலும் இக்கர்மங்களும் நிகழ்ந்தாகவேண்டும். ஞானம் வந்தால் கர்மம் நசித்துவிடும். இக்கர்மங்கள் பிரகிருதியின் செயல்கள். குணங்களால் கர்மங்கள் செய்யப்படுகின்றன. யக்ஞகர்மம் தவிர மற்ற கர்மங்கள் பந்தப்படுத்துகின்றன. பற்றற்றுப் பெருவினையாற்றுபவனே பெருநிலையைப் பெறுகிருன். கர்மம் தன்னளவில் கெடுதலானது அன்று. அதன் பேரில் வைக்கிற பற்றுதலே பந்தப்படுத்துகிறது. பற்றைவிட்டால் பந்தமில்லை. அப்போது அனைத்தும் இறைவன் செயல் என்பது விளங்குகிறது. அப்போது அகங்காரமில்லை. எல்லாம் அவன் செயல்; எல்லாம் அவன் உடைமை. எல்லாம் நன்மைக்கே என்பது விளங்குகிறது. இந்த நிலையில் கர்மபந்தம் இல்லை. ஆகையால் ஞானம் வந்தால் கர்மம் நசித்துவிடும் எனப்படுகிறது. இந்த இரண்டுக்கும் (கர்மம்-சரீரம்) சம்பந்தப்பட்ட ஆத்மா பிரம்மஞானம் ஏற்படும்வரையில் சரீரத்தின் தோற்றம், மறைவு (பிறப்பு, இறப்பு) இவைகளை அனுபவித்துக் கொண்டும் சரீரம் இருக்கும் காலத்தில் சுக துக்கங்களை அனுபவித்துக்கொண்டும் ஸ்தாவரம் முதல் பிரம்மலோகம் வரையிலும் அலைந்து கொண்டும் இருக்கிருன். ஆத்மா நாசமடைவதில்லை. தத்துவ ஞானம் ஏற்பட்டால் அவித்தை, ஆசை, கர்மா முதலியவைகள் நசித்துத் துக்கத்துக்குக் காரணமாவது ஏதும் இல்லாமையால் தன் ஸ்வரூப ஆனந்தத்துடன் விதேக கைவல்யத்தை அடைந்து நித்யானந்த சொரூபனுகிருன். ஆகையால் வருங்காலத்திலும் ஆத்மாவுக்கு 'ஸத்' என்றும் இருத்தல் உண்டு; நாசம் என்பது இல்லை. எக்காலத்திலும் ஆத்மா இருக்கிறது என்பது யுக்தியினலும் சித்திக்கிறது.

இங்ஙனம் ஆத்மா முக்காலத்திலும் பாதிக்கப்படாமல் தன்னில் தானய், ஒன்ருய் இருப்பது சுருதி, யுக்தி அனுபவ பூர்வமாக நிருபணம் ஆகிறது.பிரளய காலங்களிலும் இப்பிரபஞ்சம் நாசமடைந்தும் தான் நாசமடையாமல் ஆத்மா இருக்கிறது. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்பன இப்பிரபஞ்சத்திற்கே தவிர ஆத்மாவுக்கு இல்லை. கடலில் அலைகள் தோன்றி மறைவது போன்றும், ஆகாயத்தில் மேகங்கள் தோன்றி மறைவது போன்றும் ஆத்மாவிடத்து, சிதாகாசத்தின் பேரில் இப்பிரபஞ்சம் தோற்றமளித்துக் கொண்டிருக்கிறது. சிவபிரான் சவம்போன்று கீழே படுத்துக் கிடக்கிருர். அவர் பேரில் அம்பிகை நடனமாடுகிருள். சக்திக்கு ஆதாரமாக இருப்பது சிவன். அம்பிகைக்குச் சிவன் பேரில் அல்லாமல் ஆடுவதற்கு வேறு இடம் எங்கே? இது சிவ அபராதம் அன்று. உண்மையின் தத்துவத்தின், விளக்கம் ஆகும்; பக்திநூல்களின் விளக்கம் ஆகும். ஒருபக்கம் ஆனந்தக் கூத்தனின் திருக்கோலம். தீபாராதனையை இப்பக்கம் காட்டும்போது வெறும் தோற்றம். அங்கு என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை. அதைச் சிதம்பர ரகசியம் என்பார்கள். சித் அம்பரத்தின் = சிதாகாசத்தின் ரகசியம் என்று பொருள். திரையின் பேரில் சினிமாப் படக்காட்சி தோன்றுவது போன்று சித்அம்பரத்தில் இப்பிரபஞ்சம் தோன்றி, இருந்து, மறைகிறது. ஆத்மா ஒன்றே சத் பொருள்; என்றும் இருப்பது. அதுவே இத்தனையுமாய், ஜீவர்களாய், உயிர்வகைகளாய், பிரபஞ்சப் பொருள்களாய்த் தோன்றுகிறது. தோன்றுவது எதுவோ அது மறைகிறது. தோற்றத்துக்கு ஆதாரமாய் இருப்பது என்றும் இருக்கிறது. அது ஸத் எனப்படுகிறது. ஸத் தத்துவத்தை ஆராய்ந்தால் காலம், தேசம், வர்த்தமானம் அடிபட்டுப் போகின்றன. அப்படி ஒன்று இல்லவே இல்லை. ஆ! எவ்வளவு பெரிய விஷயம்! தோன்றிக்கொண்டிருக்கும்பொருளுக்கே காலதேச வர்த்தமானம் என்னும் தத்துவம் உண்டு. சத்பொருளுக்கு இல்லை.

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

"திருந்து தானம் தடமதில் கூடலே"–சிறந்த இருப்பிடமாக அமைவது பெரிய மதில் சூழ்ந்த கூடலம்பதி மதுரையே ஆகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களை உடையது, எல்லாத் தலங்களிலும் மேம்பட்ட சிறப்பினை உடையது மதுரை. வேதத்தின் பொருளாக இலங்கும் சிவபெருமான் திருவருளையே திருமேனியாகக் கொண்டு எப்போதும் வீற்றிருக்கின்றார். பூலோக சிவலோகம் மதுரை ஆகும். மதுரை என்னும் திருஆலவாய் ஸ்தலம் தன்னிடத்தில் வசிப்பவர்களுக்கு ஜீவன்முக்தியைக் கொடுக்கும்; பரகதியையும் நல்கும். நிஷ்கள வடிவமாகவும், ஞானனந்த ரூபியாகவும் இலங்கும் சிவபெருமானே சகளத் திருமேனிகொண்டு எழுந்தருளியுள்ள பதி மதுரையாகும்.

இப்பெருமானைப் பொழுதுபுலர் காலையில் தரிசனம் செய்தால் பெரிய பூதானம் செய்த பலனைப் பெறலாம். தேவர்கள் வழிபடும் நள்ளிரவில் வணங்கினல், அஸ்வமேத யாகம் செய்த பெரும் பலன் கிடைக்கும். அபிஷேக ஆராதனை செய்து விதிப்படி வழிபாடு செய்தவர்கள், தீவினையாகிய கடலைக் கடப்பார்கள். அவருடைய சந்நிதியில் கற்பூர தீபம் காட்டி வணங்குபவர்கள் வெண்மை நிறத்தையும், நெற்றிக் கண்ணையும் உடைய சிவசாரூப்ய பதவியை அடைவார்கள்.

"செயற்கை வெள்ளித் தடமதில் கூடலே"— சிவபிரான் வெள்ளிமலையில் வீற்றிருப்பது செயற்கையே ஆகும்.

அவர் இயற்கையாக எப்போதும் எழுந்தருளியிருப்பது கடம்பவனமாகிய மதுரை; செயற்கையாக வெள்ளிமலையில் வீற்றிருப்பார்.

கடைசி அடியில், "தடமதில் கூடலே" என்னும் தொடர், தடம்+மதில்+கூடல் எனவும், தடமதில்+கூடல் எனவும் இரண்டு விதமாகப் பிரிந்து இரண்டு பொருள்பட அமைந்துள்ளது.

"அருநாமம் அரசிவ சங்கரநாமம் எனக்கொண்டு
அவற்று ஒருநாமம்பகர்ந்தோர்க்குஅரிஅயன் இந்திரனும்
பெருநாமம் கொடுத்துஅவர்தம் கருநாமம் துடைக்கும்
பெற்றியார் தமிழ் மதுரை"

—என்பது ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் திருவாக்கு ஆகும்.

இடைவிடாது ஜபம் செய்வதற்குரிய நாமங்கள் யாவை என்றால், அர சிவ சங்கர என்னும் திருநாமங்களே ஆகும். இதனை மனத்திலே நன்ருக உணர்ந்துகொண்டு, இந்தத் திருப்பெயர்களில் ஏதாவது ஒன்றை யார் உச்சரிக்கின்றார்களோ அவர்களுக்குத் திருமால்பதவி சித்திக்கும். பிரமபதவி கிடைக்கும்; தேவேந்திரபதவி கிடைக்கும். அவர்களுக்கு மறுபிறவி என்பது இல்லை. இறுதியில் முக்தியும் கிடைக்கும். இவ்வாறு பெருமைக்கு உரியவையெல்லாம் கிடைக்கும்படி அருள் பாலிக்கும் இயல்புடைய ஸ்ரீசொக்கநாதர் எழுந்தருளியிருக்கும் திருத்தலம் மதுரை ஆகும்.

இறைவனுக்கு என்று ஒரு நாமம் உண்டா? இல்லை. இறைவனுக்குப் பெயர் வைப்பவர் யார்? ஒருவரும் இலர். இறைவனுக்கு நாமம் உண்டா? உண்டு. ஆயிரக்கணக்கான நாமங்கள் உண்டு. இறைவனுக்குப் பெயர் வைத்தவர் யார்? நாமே. நாம்தாம் வைத்தோம். ஒரே ஒரு பெயர் மட்டுமே உண்டு என்றால், இருக்கக்கூடிய அந்த ஒரு பெயரை மட்டுமே சொல்லி வழங்கவேண்டும்; வணங்கவேண்டும். பெயரே இல்லை என்றால் எந்தப் பெயராலும் கடவுளை அழைக்கலாம்; போற்றி வழிபடலாம். அவரவர் மனக்கருத்தில் என்ன விருப்பம் இருக்கிறதோ அவ்விருப்பப்படி பெயர் இட்டு அழைக்கலாம். பற்றுக்கோடு இல்லாத இறைவனிடத்தில் பற்றுக்கொண்டு, நாமே பெயர்சூட்டி வழிபடலாம்.

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம்" என்பது ஆன்றோர்களின் அனுபவமொழி. அரன் என்றும் சொல்லலாம்; சிவன் எனவும் இயம்பலாம்; சங்கரன் எனவும் கொண்டாடலாம்.

மனித மனம் ஒரு நிலையில் நில்லாதது; அலையும் தன்மை உடையது. ஒன்றையே நினைத்து இருக்கும் இயல்பு அற்றது. குணம் குற்றம் தெரியாதது. குணம் குற்றம் உணர்ந்து, ஒன்றையே நினைத்திருக்கும் ஏகாக்ர சிந்தனை மனப்பக்குவம் உடையவர்களுக்கே அமையும்.

அதற்குரிய காலம் வருகின்ற வரையிலும், தங்களுடைய மனம் விரும்புகின்ற, நினைத்துப் பார்க்கின்ற இறைவனுடைய வடிவத்தையே மனத்தில் இருத்தித் தியானிப்பார்கள். மனம் விரும்புகின்றவாறு இறைவன் திருநாமத்தை உச்சரிப்பார்கள். கடவுளின் பிரபாவத்தைப் பேசுவார்கள்.

உண்மையான பேரன்புடனும், பக்தியுடனும் கடவுளின் திருநாமத்தை உச்சரிப்பவர்களுக்குத் திருவருட்பேறு சித்திக்கும். மனம் ஒரு நிலைப்பாடு அடைகின்றவரையிலும் இறைவனுக்குப் பல திருநாமங்களைச் சொல்லிப் போற்றுதல் இயல்பு. எந்தத் திருப்பெயரைச் சொன்னாலும் சரி; அகத்துக்குள்ளே அடர்ந்து படர்ந்திருக்கும் அக்ஞானம் என்னும் காடு பஸ்மம் ஆகிவிடும். அத்தகைய வலிமை இறைவன் திருநாமத்துக்கு உண்டு. ஆண்டவன் எங்கும் நிறைந்துள்ளான். அவன் இல்லாத இடம் இல்லை. அவனை அகத்தில் இருத்தியும் துதி செய்கிறோம். வாக்கு, மனம் ஆகிய இரண்டுக்கும் அப்பாற்பட்டவன் அவன். ஆனால் இந்த இரண்டிற்குள்ளேயும் அவன் அடங்கியிருப்பதைப்போல எண்ணிக்கொண்டு வாக்கினாலே போற்றிப் புகழ்கிறோம். மனத்திலே இருத்துவதற்கு முயற்சி செய்கிறோம்.

கடல்நீர் ஆவியாகிப் பிறகு மழையாகப் பெய்து பயிர்களுக்கும், உயிர்களுக்கும் பயனளிக்கிறது. ஆற்று நீர் பயன்படுகிறது. குளத்தின் நீர், கிணற்றின் நீர் பயன்படுகின்றன. வெவ்வேறு இடங்களில் இருந்து வந்தாலும், பொதுப்படையாகப் பார்க்குமிடத்து நீரின் இயல்பு ஒன்றுதான் உயிர்களை வாழவைக்கிறது.

அதே போன்று, இறைவனின் எந்தப் பெயரைச் சொல்லுகின்றோமோ அந்தப் பெயரிலிருந்து, எந்த வடிவத்தை நினைத்து வணங்குகின்றோமோ அந்த வடிவத்திலிருந்து அளப்பரிய கருணைவெள்ளம் பாய்ந்து உயிர்களாகிய பயிர்களை வாழவைக்கிறது.

வியாசபகவான் பாகவதத்தில் சொல்லுகின்ற கருத்து இவ்விடத்தில் நினைத்துப் பார்க்கத்தக்கது.

''இறைவா! நீ உருவம் எதுவும் அற்றவன். அப்படி இருந்தும், என்னுடைய தியானத்தில், உன்னை உருவத்தோடு பாவனை செய்து வழிபடுகின்றேன்.

''நீ வாக்கிற்கும் மனத்திற்கும் அப்பாற்பட்டவன். ஆனால் வாக்கிற்கும், மனத்திற்கும் உட்பட்டவனைப் போல எண்ணிக்கொண்டு தோத்திரங்களால் பாடுகிறேன்.

“நீயோ எங்கும் நிறைந்திருப்பவன். ஆனால், நானோ பல தலங்களுக்கும் யாத்திரை சென்று உன்னை வழிபாடு செய்து வருகின்றேன்.

“ஆகவே, இரக்கங்கொண்டு, இம்மூன்று குற்றங்களையும் மன்னித்தருளல் வேண்டும்; எனக்குஉய்தியளித்தல் வேண்டும்.”

''பரமாத்மாவே! உன்னைப் பக்தர்கள் ''ராமாய'' எனவும் சொல்லுகிறார்கள்; ''நமசிவாய'' எனவும் கூறுகிறார்கள். ராமாய என்பதில் உள்ள முதல் எழுத்து ரா என்பது நமசிவாய என்பதில் இரண்டாவது எழுத்து ம என்பது. இந்த இரண்டு எழுத்துக்களையும் ஒன்று சேர்த்தால் “ராம” என்று வரும். எனவே சிவன் வேறு, விஷ்ணு வேறு என்றெல்லாம் உலகத்தவர் பேதம் கற்பித்து உன்னைப் பேசுகின்றனரே! இது எவ்வளவு பெரிய அறியாமை! சிவன், விஷ்ணு என்றெல்லாம் பேசப்படும் பரம்பொருள் ஒருவரே” என்று கூறுகிறார் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள். பரம்பொருளைப் பற்றிய விஷயத்தில் பெரியவர்களிடத்தில் என்றுமே வேற்றுமை இருந்ததில்லை. இறைவன் திருப்பெயர்களுள் ஏதாவது ஒன்றை உள்ளன்புடன் இடையறாது உச்சரிப்பவர்களுக்கு இந்திரபதவி, பிரம்மலோகப் பதவி, விஷ்ணுபதவி முதலிய பெரும் பதவிகள் கிடைக்கும் என்கிறார்.

“சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்;
செப்ப நா அமைத்தேன்;
வந்தனை செய்யத் தலை அமைத்தேன்;
கை தொழ அமைத்தேன்;
பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன்;
மெய் அரும்ப வைத்தேன்;
வெந்த வெண்ணீறு அணி ஈசற்கு
இவையான் விதித்தனவே''

—எனச் சேரமான் பெருமாள்நாயனர் கூறுகின்றார்.

இறைவனை எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பதற்கு ஏற்றவாறு எனது உள்ளத்தை

நான் திருத்தியமைத்துக்கொண்டேன். இறைவன் திருநாமத்தை இடைவிடாது சொல்லிக் கொண்டிருப்பதற்கு ஏற்ற வண்ணம் நாவிற்குப் பயிற்சி கொடுத்துக்கொண்டேன். இறைவன் சந்நிதியில் வணங்குவதற்குத் தலையைப் பழக்கிக்கொண்டேன். இறைவனைச் சதாகாலமும் கரம் கூப்பித் தொழுவதற்கு என் கரங்களைச் செம்மையாக்கிக் கொண்டேன். இறைவன் மீது பற்றுக் கொள்ளுவதற்காகவே எனது மனத்தில் அன்பாகிய பக்தியை உருவாக்கி வளர்த்துக்கொண்டேன். இறைவன் திருநாமத்தைச் செவியால் கேட்ட சமயத்திலேயே, இறைவன் திருவுருவத்தைக் கண்ணால் கண்ட மாத்திரத்திலேயே அப்படியே சிலிர்க்கும்படியாக உடம்பை அமைத்துக்கொண்டேன்.

இவ்வாறு உண்மையான பக்தி இருக்குமானால் இகத்திலும், பரத்திலும் பெரும் பதவி தானாகவே வந்து அமையும். இந்திரபதவி, பிரம்மலோகபதவி என்பவை இவ்வுலக வாழ்விலும், மறுவுலக வாழ்விலும் நல்லுயிர்க்கு வந்து சேரும் நலங்களைக் குறிப்பதாகவும் அமையலாம். பக்தியினால் ஏற்படும் சிறப்பைக் குமரகுருபரர் இங்கே குறிப்பிடுகின்றார்.

> "என்பு நைந்துஉருகி நெக்கு நெக்கு ஏங்கி
> அன்பு எனும்ஆறு கரையது புரள
> நன்புலன் ஒன்றி நாதஎன்று அரற்றி
> உரைதடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
> கரமலர் மொட்டித்து இருதயம் அலரக்
> கண்களிகூர நுண்துளி அரும்பச்
> சாயா அன்பினை நாள்தொறும் தழைப்பவர்—

என்கிறார் மணிவாசகப் பெருந்தகை.

இறைவன் திருப்புகழைச் செவியால் கேட்ட மாத்திரத்திலேயே, உடம்பிலுள்ள எலும்புகள் எல்லாம் நைந்து நொறுங்கி இணைப்புக்களெல்லாம் விட்டு உருகிப்போய் விடுகின்றன. அன்பு என்று சொல்லப்படுகின்ற ஆற்றுவெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஐந்து புலன்களும் அப்படியே ஒன்றிப்போய்விடுகின்றன. வாய் மட்டும் நாதனே! இறைவா! தலைவா! என்று இடையறாது புலம்பிக் கொண்டிருக்கிறது. நாதனே என்று சொல்லும் வார்த்தையைத் தவிர வேறு எவ்வித வார்த்தைகளும் சொல்ல இயலவில்லை; தடுமாற்றம் ஏற்படுகிறது. உடம்பில் உரோமமெல்லாம் சிலிர்க்கிறது. இரண்டு கைகளும் வணங்குவதற்கு மலரைப் போலக் குவிந்துகொள்கின்றன. இறைவனை நோக்கியே, எண்ணியே அந்தர்முகமாக இருதயம் மலர்கின்றது. மகிழ்ச்சிப் பெருக்கால் கண்கள் அகல விரிகின்றன; ஆனந்த பாஷ்பம் சொரிகின்றன.

இறைவன் மீது கொள்ளவேண்டிய ஆரா அன்பினை இது எடுத்து இயம்புகின்றது. இவ்வாறு உண்மையான அன்பு இறைவன் மீது இருக்கும் பட்சத்தில், "வாக்கும் மனமும் இல்லா மனோலயம் தேக்கியே என்சிந்தை தெளிவித்து" என ஔவையார் இயம்புவது போல, வாக்கும் மனமும் அற்ற மன ஒடுக்க ஒருமித்தநிலை ஏற்படும்; சிந்தையில் தெளிவு ஏற்படும். பேரா இயற்கைப் பெருவாழ்வாகிய சிவானந்தப் பெருவாழ்வு வாழலாம்.

கலம்பகச் செய்யுளில் "சித்து" என்னும் உறுப்பு அமைந்த செய்யுள் உண்டு. அது :

> "குரும்பை வெம்முலைசேர் மதுரேசர் பொற்
> கோபுரத்தில் கொடிகட்டும் சித்தர்யாம்
> கரும்பை முன்பு கல்லானைக்கு இடும்சித்தர்
> கையில் செங்கல் பசும்பொன்னது ஆக்கினோம்
> இருந்த வீடும் வெறும் பாழதாம் அவர்க்கு
> எருத்துக் கொட்டிலும் பொன்வேய்ந்திடச்
> [செய்தேம்
> அருந்தனம் நமக்கு ஓதனமே அப்பா
> ஆடகத்து மற்று ஆசை அவ் ஐயர்க்கே."

—மதுரைச் சொக்கநாதரின் ஆலயக் கோபுரத்தின்மீதே கொடி கட்டி, மற்றவர்களை வாதுக்கு அழைக்கும் வல்லமை பெற்ற சித்தர் நான். கல்லானைக்குக் கரும்பைக் கொடுத்துத் தின்னும்படியாகச் செய்த சித்தராகிய சோமசுந்தரப்பெருமான் கையிலே உள்ள சிவந்த கல்லைப் பசும்பொன்னாக மாற்றினேன். அவர் இருந்த வீடு ஒரு பொருளும் இல்லாத ஒன்றுமே இல்லாத வெறும் வீடு. அவ்வாறு வெறும் வீட்டில் இருந்தவருக்கு, அவருடைய எருது கொட்டிலுக்கு–மாட்டுக் கொட்டகைக்கு—பொன்னைக் கூரையாக வேய்ந்து கொடுத்தேன். இவ்வளவு சித்தி பெற்ற எனக்குச் சோறு கூட கிடைப்பது அரிதாக இருக்கிறது. என்னால் பயன்பெறும் அவருக்கோ பொன்னில் ஆசை இருக்கிறது. இது பாடலின் பொதுவான கருத்து.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

12. ஈரத்தீக்குச்சியும் உலகப்பற்றுடைய மனிதனும்:

முற்காலத்தில் தீயை உண்டாக்கச் சிக்கிமுக்கிக் கற்களைப் பயன்படுத்தினர். கல்லும் கல்லும் உராய்ந்தபோது கனல் பிறந்ததால் அதைக்கொண்டு தீப்பற்றவைத்தனர். மூங்கில் காடுகளில் மூங்கில்கள் ஒன்றோடொன்று உரசியதாலும் தீ உண்டாவதை மனிதன் கண்டான். விஞ்ஞானம் வளர வளர செயற்கை முறையில் தீயை உண்டாக்க முயன்றான். அதனால் விளைந்ததுதான் தீக்குச்சி ஆகும்.

தீக்குச்சி தொழிலில் இரு செயல் முறைகள் காணப்படுகின்றன. ஒன்று தீக்குச்சி தயாரித்தல். மற்றொன்று தீப்பெட்டி தயாரித்தல். தீப்பெட்டியின் பக்கங்களில் சிவப்புப் பாஸ்பரஸ், நுண்மணல் போன்ற பொருட்கள் தடவப்பட்டிருக்கும். தீக்குச்சியின் தலையில் பொட்டாசியம் குளோரேட், ஆண்டிமனி சல்பைடு, வஜ்ஜிரம், கண்ணாடித்தூள் போன்ற பொருட்கள் சேர்க்கப்பட்டிருக்கும்.

ஈரப்பதமான நாட்களில் தீக்குச்சிகளும், பெட்டியும் ஈரப்பதம் உடையதாக இருக்கும். அப்போது எவ்வளவுதான் கிழித்தாலும் தீப்பற்றாது. ஆனால் உலர்ந்த கோடைக்காலத்தில் ஒரு முறை உரைத்த மாத்திரத்தில் தீப்பற்றிக் கொள்கிறது. ஈரப்பதம் உலகஆசை போன்றது. ஈரப்பதமுள்ள தீக்குச்சி தீப்பற்றாதது போன்று உலக ஆசை உள்ள மனிதனுக்கு ஈசுவரானுபூதி வாய்ப்பதில்லை. உலக ஆசைக்கு மாயை என்றும் ஒரு பெயருண்டு. உலக ஆசைகளுக்கு வசப்படுகிறவன், சிறிது சிறிதாகத் தனது தெய்வீகத் தன்மையை இழந்து விடுகிறான். அருவருப்பைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. தன் தலையின்மீது மலத்தைத் தூக்கிக்கொண்டு போகும் தோட்டிக்கு அச்செயல் பழக்கப்பட்ட ஒரு செயலாகும். அதனால் அதில் அவனுக்கு அருவருப்பு உண்டாவதில்லை. அதுபோன்று உலக ஆசையில் மூழ்கிக்கிடப்பவர்களுக்கு அதன்தோஷம் தென்படுவதில்லை. உலக ஆசைகள் மனிதனை அறவே கெடுத்துவிடுகின்றன. உலக ஆசைகள் நிலையற்றவை. காமம், காசு ஆசை இரண்டும் பொல்லாத உலக ஆசைகளாம். பணத்தைக் கொண்டு நாம் பெறுவதுதான் என்ன? பக்தியை வளர்ப்பதற்குப் பணம் உதவுமா?

ஈரப்பதம் உள்ள தீக்குச்சி போன்று பத்தாத்மாக்களுக்கு ஈசுவரானுபூதி வாய்ப்பதில்லை. ஏனெனில் அவர்கள் காமத்திலும் காசு ஆசையிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். அவைகளில் தங்களுக்கு நிரந்தரமான இன்பம் கிடைக்கும் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். பரமஹம்சதேவர் பகர்ந்தது போன்று உலக ஆசையுடைய ஒருவன் நோய்வாய்ப்பட்டு உயிர் துறக்கும் தறுவாயில் இருக்கிறான். அப்பொழுது அவன் மனைவி "நீங்கள் எனக்கு என்ன ஆதரவு செய்து வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்கிறாள். சாகப்போகும் நிலையிலிருக்கும் அம்மனிதன் சுடர்விட்டு எரிகின்ற தீபத்தைப் பார்த்து, "அதில் அனாவசியமாக எண்ணெய் விரயம் ஆகிக்கொண்டிருக்கிறது. திரியைச் சிறியதாக்குங்கள்" என்றானாம். அடுத்தநிமிஷம் தான் கண்மூடப்போவதை அறியாது லௌகீகப்புத்தி படைத்திருந்த அம்மனிதனுக்கு ஈசுவரானுபூதி வாய்த்திருக்குமா? நம் கடமைகளை முறையாகச் செய்து கொண்டு மனதை மட்டும் சதா பகவான்மீது நாட்டி வைத்தால் உலர்ந்த தீக்குச்சியைக் கிழித்த மாத்திரத்தில் பற்றிக் கொள்வதுபோன்று ஈசுவரானுபூதிவாய்க்கும். அதை விடுத்துக் குடும்ப அல்லல் என்ற படுகுழியில் மூழ்கி, பணம் சேகரிப்பதிலேயே காலம் கழித்து, ஆண்டவனுக்குப் பணியாற்றாமல் இருந்தால் ஈரத்தீக்குச்சி தீப்பற்றாததுபோன்று ஈசுவரானுபூதி வாய்க்காது.

ஈரப்பதமுள்ள தீக்குச்சி தீப்பற்றாது. அது போன்று உலக ஆசை உள்ளவனுக்கு ஈசுவரானுபூதி வாய்க்காது என்பது தெளிவு.

"ஈரப்பதம் உள்ள தீக்குச்சியை எவ்வளவுதான் கிழித்தாலும் அது பற்றாது. உலர்ந்த தீக்குச்சியோ ஒரு தடவை உரைத்தமாத்திரத்தில் தீப்பற்றிக்கொள்கிறது. ஒருவனுடைய உள்ளத்தில் உலக ஆசை இருக்குமாகில் அவனுக்கு ஈசுவரானுபூதி வாய்க்காது."

— *ராமகிருஷ்ணர் உபதேசம்*

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-154

886. धनधान्यविवर्धिनी தனதான்யவிவர்தினீ—தனத்தையும் தானியத்தையும் வளரச் செய்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

தனம் என்பது . செல்வம். தானியம் என்பது உணவுப் பொருள். தானியமே உண்மையான செல்வமாகிறது. பண்டமாற்றுதலின் சின்னமாகத் தங்கம் வெள்ளி ஆகியவைகளைச் செல்வமாக வைத்துக்கொள்கிறோம். பூர்வீக மக்கள் தங்கம், வெள்ளியாகிய தனத்தைக் கையாளாமலே நன்கு வாழ்ந்துவந்தனர். அத்தகைய மக்கள் இன்றைக்கும் மலைப்பிரதேசங்களின் உட்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இனிப் பறவைகளும் விலங்குகளும் தனத்தைப் பொருள்படுத்தாது தானிய வகைகளை நாடி இன்புற்று வாழ்ந்துவருகின்றன. ஆகவே தனம் எனப் பகரப்பெறும் தங்கம், வெள்ளி ஆகியவைகளுக்குக் கற்பனையாக மதிப்புத் தரப்படுகிறது. தானியவகைகளே இயல்பாக உயிர்வகைகளனைத்துக்கும் பயன்பட்டு வருகின்றன.

சான்றென்று எடுத்துக்கொள்ளுவோம். பக்கம் பக்கம் வைரம், தங்கம், வெள்ளி, சர்க்கரை, அரிசி மாவு ஆகியவைகளை வைத்தால் சிறிது நேரத்திற்குள் எறும்பு இனம் வந்து சர்க்கரையையும், அரிசிமாவையும் எடுத்துச்செல்லும். எத்தனை நாளானாலும் அவைகள் தனம் எனப் பகரப்பெறும் வைரம், தங்கம், வெள்ளி ஆகியவைகளை நாடுவதில்லை. அந்தந்தப் பொருளுக்குரிய மதிப்பை இங்ஙனம் இயற்கை காட்டித் தருகிறது. அன்னை பராசக்தியைத் தனலட்சுமி என்றும், தானியலட்சுமி என்றும் மனிதன் போற்றுகிறான். நாடெங்கும் உணவுப் பொருள் இல்லாது பஞ்சம் ஏற்பட்டிருக்கிற பொழுது தனலட்சுமியின் அனுக்ரஹம் ஒன்றுக்கும் உதவமாட்டாது. அதாவது மூட்டை மூட்டையாகத் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் வந்து குவிந்து கிடக்கின்றன. ஆனால் அவைகள் பசியைப் போக்கமாட்டா. அந்த நெருக்கடியில் கீழ்த்தரமான தானியம் கொஞ்சம் அகப்பட்டாலும் அது மனிதனுக்கு நன்கு பயன்படும். ஆகவே தனலட்சுமிக்குத் தந்திருக்கும் மதிப்பு கற்பனை அளவிலேயாம்.

இனித் துறவியர்களும் சான்றோர்களும் தனலட்சுமியைப் பொருள்படுத்துவதில்லை. தங்கள் மீது தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்கள் தீண்டுவதற்கும் அவர்கள் இடம் கொடுக்கமாட்டார்கள். முற்றிலும் பரநாட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மேனியின்மீது தாமிரம், தங்கம், வெள்ளி, இரும்பு ஆகிய எந்த உலோகமும் தீண்டலாகாது. தீண்டினால் அவைகள் அன்னவர்களைத் துன்புறுத்தும். ஆகையால் தான் பரநாட்டத்தில் தீவிரமாகப் போகிறவர்களுக்குத் தனலட்சுமி என்னும் கற்பனை தேவதை அவசியமில்லை.

உலக மக்களோ யாண்டும் தனலட்சுமியையே சார்ந்திருக்கின்றனர். அவளுடைய அனுக்ரஹத்தை மக்கள் அல்லும் பகலும் நாடி நிற்கின்றனர். அவர்கள் எடுத்துக்கொள்ளும் நாட்டத்துக்கேற்பத் தனமும், தானியமும் அவர்களுக்கு வேண்டியவாறு வந்துகுவிகின்றன.

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பது பொய்யாமொழி. நாகரிகமான வாழ்க்கைக்குத் தனம் ஏராளமாகப் பயன்படுகிறது. பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பது உலகப்பற்றுடையவர்களின் கோட்பாடு. பிரபஞ்சத்தைச் சரியாக ஆராய்ந்து பார்த்தால் அதில் வேண்டியவாறு தனம் குவிந்து கிடக்கிறது. கடலுக்குள்ளிருக்கும் முத்து, பவளம் முதலியன தனமாகக் கருதப்படுகின்றன .நிலத்தில் அகப்படும் உயர்ந்த கல்வகைகளை இரத்தினங்கள் என மனிதன் பாராட்டுகிறான். தாமிரம், தங்கம், வெள்ளி ஆகியவைகளைத் தலை சிறந்த செல்வமாக மனிதன் மதிப்புப் போடுகிறான். இத்தனைவிதச் செல்வமயமாக அன்னை பராசக்தி இலங்கி வருகிறாள். அவளுடைய மகிமைக்கு அளவில்லை. ஆயினும் அவளுடைய சொரூபத்தில் எந்தப் பகுதிக்கு எத்தகைய மதிப்புத் தரவேண்டும் என்னும் கோட்பாட்டை ஆத்மசாதகன் நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

887. विप्रप्रिया விப்ரப்ரியா — விப்ரர்களி டத்துப் பிரியம் வைத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உலோகங்களில் அமைப்பிலே மேலானவை களும், கீழானவைகளும் இருப்பன போன்று மக்கள் பிறவியிலேயே மேலோர்களும் கீழோர்களும் ஆவது இயல்பு. பிறவியில் மேலோராயிருப்பவர்கள் விப்ரர்கள் எனப்படு கின்றனர். அன்னவர்கள் முறையாகக் கல்வி யிலும், மனப்பான்மையிலும் வாழ்க்கையிலும் மேலோங்கி வருவார்களானல் அவர்களுக்கு த்விஜன் அல்லது இருபிறப்பாளன் என்னும் அடைமொழியும் தரப்படுகிறது. செல்வம் நிறைந்துள்ள சமுதாயம் மேலான சமுதாயம் ஆகாது. ஆனல் விப்ரர்கள் நிறைந்துள்ள சமுதாயமே தலைசிறந்த சமுதாயமாகிறது. ஒருநாட்டில் விப்ரர்களின் எண்ணிக்கை அதி கரிப்பதற்கேற்ப அந்நாட்டில் தெய்வசம்பத்து அதிகரிக்கிறது. விப்ரர்களின் எண்ணிக்கை குறைவதற்கேற்ப அசுரசம்பத் தலையெடுக் கிறது. ஆகவே விப்ரர்களைத் தோற்றுவிப்பதி லேயே சமுதாயம் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும் என்பது கோட்பாடு. விப்ரர் களிடத்து அன்னை பராசக்தி அலாதியாக அன்பு காட்டுவது இயல்பாம்.

888. विप्ररूपा விப்ரரூபா — விப்ரர்களின் வடிவத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத் தின் பொருள்.

இயற்கைத் தாயினிடத்துச் சேதனம், அசே தனம் ஆகிய இரண்டு கூறுகளும் ஒருங்கே அமையப்பெற்றிருக்கின்றன. அசேதனம் என் பது ஜடவஸ்து. அதனிடத்து உயிர் இல்லை. உயிர் அற்றவைகளிடத்திலும் தாரதம்மிய முண்டு. தங்கம் இரும்பு ஆகிய இரண்டினுள் தரத்தில் தங்கம் மேலானது; இரும்பு கீழா னது. அதேவிதத்தில் சேதனம் என்பது உயிர்த் தத்துவம். உயிர் வகைகளுள் ஸ்தாவ ரம், ஜங்கமம் என்னும் இரண்டு திணைகள் இருக்கின்றன. ஒன்று நிலைத்திணை; மற்றது இயங்குதிணை. இயங்குதிணை நிலைத்திணையை விட மேலானது. ஜங்கமங்களுள் மானுடர் சிறந்தவர்களாகிறார்கள். மானுடர்களுள் விப் ரர்கள் மேலோர் ஆகின்றனர். அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை எல்லாப்படித்தரங்களி லும் இருக்கின்ற ஸ்தாவர ஜங்கம சொரு பிணியாக இலங்குகின்றாள் என்றாலும் அவள் விப்ரர் ஆக வடிவெடுத்து வந்திருக்கிற பகுதி யில் அவளுடைய மகிமையை ஏராளமாகக் காணுகின்றோம். சான்றொன்று எடுத்துக் கொள்வோம். மனிதனுடைய உடலமைப்பில் வெவ்வேறு அங்கங்கள் இருக்கின்றன. கை, கால், நெஞ்சு, வயிறு ஆகியவைகள் வெவ் வேறு அங்கங்களாக அமைந்திருக்கின்றன. அவையாவும் மானுட வாழ்க்கைக்கு இன்றி யமையாதவைகளாம். அப்படியிருந்தும் மானுட அமைப்பில் அங்கங்களுக்கிடையில் தாரதம் மியமுண்டு. ஒரு காலோ ஒருகையோ இல்லாது மனிதன் தாக்குப்பிடித்து வாழ்ந்திருக்கலாம். ஆனல் தலையில்லாது அவன் வாழ்ந்திருக்க முடியாது. அங்கங்களுள் உத்தமமான அங்கமா யிருப்பது தலை. பண்பட்ட மூளையோடு கூடி யிருப்பவனுக்குக் கையோ, காலோ இல்லாது போனல் அது அவனுக்குப் பெரும் குறையா காது. ஆனல் அறிவில்லாதவனுக்கு அங்கங்க ளனைத்தும் ஒழுங்காக அமைந்திருந்தும் அன்ன வன் ஒன்றுக்கும் உதவான். மானுட சரீர அமைப்பில் தலை முதன்மை பெறுவதற்கு நிகராகச் சமுதாய அமைப்பில் விப்ரன் முதன்மைபெறுகிறான். ஆதலால் அந்த விப்ர வின் சொரூபமாகவே அன்னை பராசக்தியை வைத்து வழுத்துவது முறையாகும். அக்கார ணத்தை முன்னிட்டே விப்ரரூபா என்னும் நாமத்தை அம்பிகை பெற்றுள்ளாள்.

889. विश्वभ्रमणकारिणी விஸ்வப்ரமண காரிணீ — அகிலாண்டங்களின் நடைமுறைகளை முறையாகக் கொண்டு செலுத்துபவள் என் பது இந்த நாமத்தின் பொருள்.

அண்டங்கள் அகண்டாகாரத்தில் விரிந் தோடுகின்றன எனினும் அவைகளின் நடை முறையில் ஒழுங்குப்பாடு இருக்கிறது. தோன்றா நிலையினின்று அவைகள் தோற்றத் துக்கு வருகின்றன. அது எப்படிச் சாத்தியம் என்னும் கேள்வி எழலாம். கடலினின்று மேலே சென்று காற்றில் எங்கும் வியாபகமா யுள்ள நீராவி கட்புலனாவதில்லை. அடுத்தபடி யாகக் கட்புலனாகும் கார்மேகம் வெண்மேகம் போன்ற வடிவங்களை அந்த நீராவி எடுத்துக் கொள்கிறது. கட்புலனாகின்ற மேகங்களி

னின்று மழைநீர், ஆலங்கட்டி, உறைபனி, மூடு பனி முதலியன வடிவெடுக்கின்றன. இதே விதத்தில் தோன்றாநிலையில் சூக்ஷ்மமாயிருக்கும் அண்டங்கள் வடிவெடுத்துத் தோற்றத்துக்கு வருகின்றன. அப்படித் தோற்றத்துக்கு வருவதைச் சிருஷ்டி என்கிறோம். தோற்றத்துக்கு வருவதில் ஒழுங்குப்பாடு உண்டு. தோன்றியுள்ள அண்டங்கள் நிலைபெற்றிருப்பதிலும் ஒழுங்குப்பாடு இருக்கிறது. அதன் பிறகு அவைகள் ஒடுங்கித் தோன்றாநிலை எய்தும் முறையிலும் ஒழுங்குப்பாடு இருக்கிறது. சுருங்கச் சொல்லின் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார மயமாகப் பிரபஞ்சம் யாவும் அமைந்திருக்கின்றன. இந்த முத்தொழில்களில் அமைந்துள்ள மகிமைகளே அன்னை பராசக்தியின் அற்புதத்துக்கு எடுத்துக்காட்டுகளாகின்றன. எனவே அண்டங்கள் யாவின் நடைமுறைகளை ஒழுங்காக ஆராய்ச்சி பண்ணுவதே ஒருவித ஆராதனையாகிறது.

890. **विश्वग्रासा விஸ்வக்ராஸா** — அண்டங்கள் யாவையும் எடுத்து விழுங்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சிறுகுழந்தைகள் மணலில் வீடுகட்டுகின்றன. மணலை வைத்துக் கொண்டே உணவை ஆயத்தப்படுத்துகின்றன. அந்த உணவைத் தங்களுடன் விளையாடும் மற்றக் குழந்தைகளுக்கு எடுத்துப் படைக்கின்றன. இவ்விளையாட்டு முடிவுற்றான பிறகு அதற்கு ஏதுவாயிருந்த மணல் வீடு, மணல் உணவு ஆகியவைகளை உதைத்துத் தள்ளிவிட்டுக் குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம் ஓடுகின்றன. இச்செயல் எவ்வளவு சுலபமாகக் குழந்தைகளிடம் நிகழ்கிறதோ அதைவிடச் சுலபமாக அன்னை பராசக்தி அண்டங்கள் யாவையும் எடுத்து விழுங்குகின்றாள். இதை மற்றுமோர் உவமானத்தின் மூலம் விளக்கலாம். நாம் அனைவரும் ஜாக்ரதாவஸ்தையில் விழித்திருந்து உலக வியவகாரங்களை ஏராளமாகச் செய்கிறோம். பிறகு உறங்கும் வேளை வருகின்றபொழுது நம்முடைய வியவகாரங்கள் அனைத்தையும் மனத்தகத்தே ஒடுக்குகிறோம். அதில் சிரமம் ஏதும் இல்லை. மறுபடியும் விழித்தெழுந்திருக்கும்பொழுது அதே வியவகாரங்களின் தொடர்பைக் கொண்டு செலுத்துகிறோம். அதே பாங்கில் அன்னை பராசக்தி அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாக இருந்து பிரளயகாலத்தில் அவை யாவையும் தன்னகத்தே ஒடுக்கிக்கொள்ளுகிறாள். அச்செயலைச் சரியாக எண்ணிப் பார்ப்பவர்களுக்கு உலகப்பற்று தானாகக் குறைந்துபட்டுப்போம்.

891. **विद्रुमाभा வித்ருமாபா** — பவளம் போன்ற எழிலோடு கூடியிருப்பவள்.

அன்னை பராசக்தியின் மேனி சிவப்பானது என்பதற்குச் சான்றுகள் பல அமைந்துள்ளன. அவைகள் பெரும்பாலும் புஷ்பங்களின் நிறத்தோடு ஒப்பிட்டு விளக்கப்பட்டன. இப்பொழுது பவளத்தின் வாயிலாக நிறம் விளக்கப்படுகிறது. நேர் சூரியப் பிரகாசத்தோடு தொடர்பு கொள்ளும் புஷ்பங்களுக்குரிய நிறங்கள் தாமாக எளிதில் வந்து அமைவது இயல்பு. ஆனால் பவளமோ சமுத்திரத்தின் ஆழத்தில் சூரிய வெளிச்சம் எட்டாத இடத்தில் இருக்கிறது. அப்படி இருந்தும் பவளத்தினிடம் சிவப்பு நிறம் இருப்பது அரிதிலும் அரிதாம். அன்னையின் நிறம் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டதன்று. தன்னிடத்து இயல்பாயுள்ள மகிமைக்குப் பவளத்தின் நிறம் எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது.

இந்நாமத்தில் மற்றொரு பொருளும் அடங்கி இருக்கிறது. வித் + த்ரும:—ஞான வெளிச்சம். வித்ருமாபா-ஞான வெளிச்சத்தின் ஒளியை உடையவள். விருட்சத்தினின்று விதை உண்டாகிறது. அந்த விதை முளைத்து வருகிற பொழுது மரத்தின் பாங்குகளனைத்தும் மீண்டும் தோற்றத்துக்கு வருகின்றன. ஞானப் பிரகாசம் வாழையடி வாழையாக அல்லது தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றப்படுகிறது. சுவை நிறைந்த பழம் தரும் மரம் ஒன்று பட்டுப்போனால் அதனோடு சுவையோடு கூடிய பழம் உண்டாவது நின்று விடுவதில்லை. அதே பாங்குடைய ஏனைய விருட்சங்கள் தோன்றி நல்ல பழங்களை உண்டுபண்ணி இயற்கையின் போக்கைக் காப்பாற்றுகின்றன. ஞானப் பெருக்கும் அத்தகையதேயாம். இங்ஙனம் இயற்கையின் நடைமுறையின் வாயிலாக அம்பிகை தன்னுடைய மகிமைகள் யாவையும் காப்பாற்றி வருகிறாள் என்ற பொருளும் இந்நாமத்தில் இருக்கிறது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (277) யமதர்ம ராஜா அழிக்கும் சக்தி படைத்தவர். மும்மூர்த்திகளுள் சிவன் ருத்ரனாக அழிக்கும் திறமை படைத்தவர். சிவனை வழுத்துகிறோம், ஆனால் யமனைப் போற்றுவதில்லை. ஏன்?

மும்மூர்த்திகளுள் விஷ்ணு, சிவன் ஆகிய இரண்டு மூர்த்திகளே உபாசனைக்குரியவர்கள் ஆகிறார்கள். பிரம்மதேவன் மும்மூர்த்திகளுள் ஒருவராயிருந்தும் அவரை உபாசிப்பதில்லை. எந்தத்தெய்வத்தை உபாசிக்கிறோமோ அந்தத் தெய்வத்தின் விபூதி அல்லது சிறப்பு இயல்பு உபாசனைக்கு உரியதாகிறது. பிறவிப் பெருங் கடலைத் தாண்டி அதீதத்துக்குப் போவது வாழ்க்கையின் குறிக்கோள். அதீத நிலையை வழங்கும் திறமை நாராயணனுக்கும், சங்கரனுக்குமே உண்டு. பிரம்மதேவனுக்கு அத்தகைய தகைமைஇல்லாமையினால் பிறவி வேண்டாம் என்னும் இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பவர்கள் பிறவியைப் பெருக்கும் தேவதையை வணங்குவதில்லை. இனி ருத்ரனும் சம்ஹாரமூர்த்தியாயிருக்கிறார். யமதர்ம ராஜனும் சம்ஹாரமூர்த்தியாயிருக்கிறார். இவர்கள் இருவருள் சிவனுடைய அம்சமாயிருக்கிற ருத்ரனை மட்டும் நாம் வழுத்துவதற்குக் காரணம் உண்டு. பிறவிப் பிணியைப் படிப்படியாகத் துடைத்து ஜீவாத்மனை மேல் நிலைக்குக் கொண்டு வரும் தகைமை ருத்ரமூர்த்திக்கு உண்டு. அத்தகைமை யமதர்மராஜனுக்கு இல்லை. ஆயுள் முடிந்த ஜீவாத்மனைக் கரந்தெடுக்கும் கடமைமட்டும் யமதர்மராஜனுக்கு இருக்கிறது. அந்த ஜீவனைப் பண்படுத்தும் திறமை அத்தெய்வத்திடத்து இல்லை. ஆதலால்தான் யமன் உபாசனைக்குரிய மூர்த்தியாக மாட்டார்.

பரம்பொருளின் சொரூபங்கள் பல. அச்சொரூபங்களுள் ஜீவாத்மனைப் பண்படுத்தி மேல்நிலைக்குக் கொண்டுவரும் சொரூபங்களே உபாசனைக்குரிய மூர்த்திகளாகிறார்கள். அத்தகைமை வாய்க்கப்பெறாது அவரவர் கடமைகளைமட்டும் முறையாகச்செய்து வருகிறவர்கள் இயற்கையின் நடைமுறைப் பணியாளர்கள் ஆகிறார்கள். தங்கள் பணிவிடைகளை முறையாக நிறைவேற்றுவதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். ஆனால் உய்வு அடைவதற்கு நாம் அவர்களை வணங்குவதில்லை. இக்காரணத்தை முன்னிட்டே யமதர்ம ராஜன் வணங்கப்படுவதில்லை.

கேள்வி: (278) துஷ்டனைக் கண்டால் தூர விலகு. துஷ்டனோடு இணக்கம் கொண்டு அவனைத் திருத்தியமை—இவற்றில் எதைக் கடைப் பிடிப்பது?

தொற்றுநோய் பிடித்துள்ள ஒருவனிடத்திருந்து ஏனையவர்கள் விலகியிருப்பது முற்றிலும் அவசியம். விலகியிராவிட்டால் அந்நோய் எல்லார்க்குமிடையில் பரவுவதற்கு அவகாசம் தருகிறோம். பொதுமக்கள் அப்படிச்செய்யலாகாது. ஆனால் டாக்டர் ஒருவர் தொற்றுநோய் பிடித்துள்ள ஒருவனோடு தொடர்பு கொண்டேயாக வேண்டும். அன்னவனுக்குச் சிகிச்சை பண்ணுவது டாக்டருடைய கடமை. அக்கடமையைச் செய்யாத டாக்டர் அந்த ஸ்தானத்திற்குத் தகுதியுடையவர் ஆகார். தமக்குவேண்டிய தற்பாதுகாப்பை அமைத்துக்கொண்டு டாக்டர் தொற்றுநோயினின்று நோயாளியைக் குணப்படுத்துகிறார்.

துஷ்டனைப்பற்றிய கோட்பாடும் கிட்டத்தட்ட இதே பாங்குடையது. துஷ்டனுக்கு நிகரான பாம்பினிடத்திருந்தும், புலியினிடத்திருந்தும் பொதுமக்கள் விலகியிருக்கவேண்டும். ஆனால் பாம்பையும், புலியையும் எதிர்த்து மாய்க்க வல்லவன் அவைகளைப் பார்த்து மருண்டு ஓடலாகாது. அவைகளை ஒழிப்பது வல்லவர் கடமையாகும். துஷ்டன் ஒருவனோடு இணங்குவதால் ஏனையவர்கள் தங்களையறியாது துஷ்டத்தனத்தைத் தங்களிடம் வரவழைத்துக்கொள்கின்றனர். அப்படிச் செய்வது சரியன்று. துஷ்டனைச் சமாளிக்கும் அறிவுத் திறன் வாய்க்கப்பெற்றவன் அவனோடு உறவாடி அவனை நல்வழிக்குத் திருப்பவேண்டும். நல்வழிக்குத் திரும்ப மாட்டேன் என்னும் பிடிவாதத்துடன் தீயவழியிலேயே போகின்றவனை முறையாகத் தடுத்துவைக்கவேண்டும். இல்லையேல் சமுதாயத்திற்கே அக்கொடியவனால் தீங்கு நேரிடும்.

ஆகவே எந்தெந்த மனிதனிடத்து யார் யார் எப்படியெல்லாம் நடந்துகொள்ளவேண்டும் என்னும் நியதி உண்டு. அந்நியதியோ மனித டைய தரத்துக்கும் பொறுப்புக்கும் ஏற்ப மாறுபடுகிறது. ஒரு மனிதனுக்குக் கடமை யாக அமைந்தது மற்றொரு மனிதனுக்குக் கேடாக முடியலாம். இப்பாகுபாட்டையறிந்து உலகில் நாம் நடந்துகொள்ளவேண்டும்.

கேள்வி : (279) ***மனிதன் தன்னைத்தானே மேலோனாக ஆக்கிக் கொள்ளவேண்டும், என்னும் கோட்பாடு மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு என்று வகுத்து வைக் கப்பட்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்தவ மதமோ தன்னை ஒரு பாபியாகக் கருத வேண்டும் என்றும் தான் செய்த பாபத் தைக் குறித்து ஒருவன் வருந்திக்கொண் டேயிருக்கவேண்டும், என்றும் புகட்டு கிறது. இவ்விரண்டு வித போதனைகளுள் முரண்பாடுகள் இருக்கின்றன அல்லவா ?***

சமயங்களனைத்தும் மக்களை மேலோராக்கு வதற்கே அமைந்திருக்கின்றன. சமயங்கள் புகட்டுகின்ற நெறிகளுள் முரண்பாடு இருப் பதும் உண்டு. 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பது கோட்பாடு. உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் மக்களுள் சிலர் இடையிடையே நெறிவழுவிப் போவ தும் உண்டு. அதைக் குறித்து மானுடனொரு வன் தன்னுடைய ஆயுள்காலம் முழுதும் வருந் திக்கொண்டே இருப்பானாகில் அன்னவன் உய்வடைய மாட்டான். மேலும் மேலும் அவன் கீழ்மைக்கே உரியவனாவான். "இறைவா, என்னுடைய அறியாமையினால் இப்பிழை யைச் செய்துவிட்டேன். என்னை மன்னித் தருள்வீராக. மேலும் இத்தீமைக்கு நான் ஆளாகமாட்டேன்" என்று பிரார்த்தனை பண்ணவேண்டும். அடுத்தபடியாகப் பண் ணிய பிழையை மறந்துவிடவேண்டும். அதற்கு மாறாக அப்பிழையைப்பற்றியே திரும்பத் திரும்ப எண்ணுவதால் அதை மானசீகமாக அவன் சிருஷ்டிபண்ணிக்கொண்டே இருக் கிறான். கேடு அங்ஙனம் வளர்கிறது. அதற்கு மாறாக, தான் ஆத்ம சொரூபம்; பரமாத்மாவிடத்திருந்து வந்தவன் ஆதலால் நல்ல பாங்குகள் பலவற்றிற்குத் தான் உறை விடம். இப்படியெல்லாம் தெய்வீக எண்ணத்தி லேயே ஊறியிருப்பது உசிதம். அதன்மூலம் மனிதன் நிச்சயமாகவே மேன்மையுறுகிறான்.

கேள்வி: (280) ***கடுந்தவம்புரிந்து பேராற் றல் பெற்றவன் இராவணன். அவனே அக்கிரமக்காரனாக மாறியதால் இரா மன் தோன்றி அவனை அழிக்கவேண்டி இருந்தது. இராவணனுக்கு வலிவு கொடுத்த சிவன் ஏன் அவனுக்கு நல் லறிவு கொடுக்க வில்லை?***

உலகம் முழுதும் இறைவனிடத்திலிருந்து தோன்றியவைகள். உலகில் தோன்றியுள்ள சேதன அசேதனப் பொருள்கள்யாவும் ஒரே பாங்குடையவைகள் ஆகமாட்டா. அசே தனமாயிருக்கும் கல் வகைகளுள் நஞ்சு நிறைந்த கற்களும் உண்டு; நலனை உண்டு பண்ணும் கற்களும் இருக்கின்றன. உயிர் வகைகளுள் நலன் நிறைந்த உயிர்கள் உண்டு. கேடு நிறைந்த உயிர்களும் இருக்கின்றன. நலன் கேடு ஆகிய இரண்டுக்குமிடையிலுள்ள போராட்டமே பிரபஞ்ச வாழ்வு என்னும் பெயர் பெறுகிறது. கடுந்தவம் புரிந்து இரா வணனாக வந்துள்ள மூர்த்திக்கு மூலப்பொருள் இறைவன். தெய்விகப் பண்புடன் தோன்றித் தீமையைத் துடைக்க வந்த இராமனுக்கும் மூலப்பொருள் பரம். ஆகையினால் பரப் பிரம்ம சொரூபம் என இராமன் போற்றப் படுகிறான். காமத்துக்கு உறைவிடம் இரா வணன். தெய்விக இயல்புக்கு உறைவிடம் இராமன். தெய்விக இயல்பும் காமமும் ஒன்று சேர்ந்து இருக்கமாட்டா. காமத்தில் ஊறிய இராவணன் தன் பாங்குக்கேற்ற செயலில் ஈடு பட்டான். அவன் செயல் தெய்விக முன் னேற்றத்துக்கு உதவி புரியாது. மக்களாக வடிவெடுத்துள்ள நம்மிடத்து இராவணகார இயல்பு ஒருபக்கம் புதைந்து இருக்கிறது. இராம மகிமை மற்றோர் இடத்தில் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. நம்மிடத்து உருவெடுக்கிற கெட்ட இயல்பை அடக்கியாளவும் நல்லி யல்பை வளர்க்கவும் செய்வது நம் கடமையா கிறது. இக்கோட்பாட்டுக்குப் புறவுலகில் எடுத்துக்காட்டு மூர்த்திகளாக இராவணனும் இராமனும் தோன்றி வந்தார்கள்.

அமரநாத யாத்திரை

(199ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி குஹானந்தர்]

சேஷநாக்கிலிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ள சந்தன்வாரியினை அடைய ஏழு மணி நேரம் பிடித்தது. வரும்போது சேற்றில் சிக்கிப் பலருடைய காலணிகள் கிழிந்து விட்டன. மழையில் நனைந்துகொண்டு அதிக சிரமத்துடன் அடிமேல் அடி வைத்து நடந்தோம். சந்தன்வாரிக்கு முன்னுல் உள்ள பனிப்பாறை மீது நடந்து வந்ததுதான் கஷ்டத்தின் உச்சநிலையாக இருந்தது. அதில் குதிரைமீது வந்தவர்களும் நடந்துதான் கடக்க வேண்டியதாயிற்று. அதில் விழாமல் வந்தவர் மிகச்சிலரே. எப்படியோ ஒருவாறு நாங்கள் சந்தன்வாரியை அடைந்தோம். மழை இன்னும் விட்டபாடில்லை. மேற்கொண்டு பத்து மைல் நடக்கவோ, குதிரைமீது செல்லவோ தயாராக இல்லை. என்ன செய்வது என நாங்கள் எண்ணிக்கொண்டிருந்தபோது ஆடுகளை ஏற்றிச்செல்கின்ற லாரி பஹல்காம் செல்வதற்கு உபயோகப்படுத்தப்படுவது எங்களுக்குத் தெரியவந்தது. மேலே பல துவாரங்களைக் கொண்ட தார்ப்பாயும், கீழே ஆட்டுப்பிழுக்கையும், மண்ணும் உள்ளனவாக அந்த லாரி இருந்தது. அதைத் தவிர வேறு கதி இல்லாததால் ஒரு நபருக்கு ஐந்து ரூபாய் வீதம் கட்டணம் செலுத்தி அதில் ஏறி நின்றுகொண்டோம். எவ்வளவு ஆட்களை ஏற்ற முடியுமோ அவ்வளவுபேரையும் ஆடுகளைப்போல அடைத்துக்கொண்டு புறப்பட்டனர். மழை தூறிக்கொண்டே இருந்ததால் ரோடுகள் முழுவதும் சகதியாக இருந்தது. லாரிப் பிரயாணமும் கஷ்டமாகவே இருந்தது. ஒவ்வொரு திருப்பத்திலும் லாரி முன்னும் பின்னுமாக வந்து சிரமப்பட்டுத் திரும்பவேண்டி வந்தது. அங்கு மழையாக இருந்ததால் எதிரில் சந்தன்வாரியை நோக்கி யாத்ரீகர்கள் யாரும் வரவில்லை. நாங்கள் அனைவரும் சிரமங்களுக்கிடையே முன்னர்த் திட்டமிட்டபடி மாலை நான்கு மணியளவில் பஹல்காமை அடைந்து 'லால்கோடி' யிலேயே தங்கினேம்.

எதிர்பாராமல் ஏற்பட்ட இறைவன் அருள்

வழக்கம்போன்று ஆறு நாட்களில் சென்று வரவேண்டிய யாத்திரையை நான்கு நாட்களாகக் குறைத்ததில் பலருக்கு மனக்குறை இருந்தது. காரணம் ஒவ்வொரு நாளும் அதிகதூரம் செல்லவேண்டியிருந்ததும், பௌர்ணமியன்று தரிசனம் செய்ய முடியவில்லையே என்பதும் ஆகும். இப்படிப் பௌர்ணமியன்று மழையினுல் ஏற்பட்ட இன்னல்களை அனுபவித்தவுடன் 'நமக்கு அமரநாதன் அருளால் நல்ல விதமாகத் தரிசனம் செய்து திரும்பும் பாக்கியம் ஏற்பட்டது' என மகிழ்ச்சியடைந்து நாம் சென்ற முறைதான் நல்லது என்றுகூறினர்கள்.

பஹல்காமில் இரவு உணவு உட்கொண்டு உறங்கினேம்.

28—7—80 அன்று காலை கூட்டு வழிபாடு செய்தோம். சிற்றுண்டிக்குப் பிறகு இரண்டு பஸ்கள் மூலம் ஸ்ரீநகர் வந்தடைந்தோம். 'ரிவர் வியூ' ஓட்டலிலேயே வந்து தங்கினேம்.

பிற்பகல் ஓய்வுக்குப் பிறகு ஸ்ரீநகர்வாசியான தபோவன அன்பர் ஒருவர் ஸ்ரீநகரில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்திற்கு எங்களை அழைத்துச் சென்ருர். ஆச்ரமம் 'சிவாலயா' என்ற பகுதியில் உள்ளது. அது சிறிய இடத்தில் அழகாக அமைந்து உள்ளது. பிரார்த்தனை ஹாலில் ஸ்ரீராமகிருஷ்ணர், தூய அன்னையார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் சிலைகள் சலவைக்கல்லால் செதுக்கிவைக்கப்பட்டுள்ளன. நாள்தோறும் மாலைப் பிரார்த்தனை நடைபெறுகிறது. சிலபேர் தொடர்ச்சியாகப் பிரார்த்தனை, தியானம் ஆகியவற்றில் கலந்து கொள்கிருர்கள். ஆச்ரமத்தார் ஒரு சிறிய வாசகசாலை நடத்தி வருகிருர்கள். எங்களை ஆச்ரம நிர்வாகி அன்போடு வரவேற்றுச் சிற்றுண்டி அளித்தார். பிறகு நாங்கள் பிரார்த்தனைஹாலில் பஜனை, தியானம் செய்துவிட்டுத் திரும்பினேம். பலர் கடைத்தெருவிற்குச் சென்று கம்பள உடைகளை வாங்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் கோவில்

29—7—80 அன்று காலை கூட்டு வழிபாடும் சிற்றுண்டியும் முடித்த பிறகு இரண்டு வேன்கள் மூலம் சங்கராச்சாரியர் மலைக்குச் சென்றோம். இம்மலை தால் ஏரியின் அருகில் உள்ளது. ஸ்ரீநகரில் 1000 அடி உயரமுள்ள மலைமீது இக்கோயில் அமைந்துள்ளது. காஷ்மீரத்தில் புத்தமதம் செல்வாக்குப் பெற்றிருந்தபோது இந்து மதத்தின் சிறப்பினை நிலைநாட்டச் சங்கரர் பௌத்தர்களுடன் வாதிட்டு வென்றது இந்த இடம் என்று சொல்லப்படுகிறது. மலை மீது வளைந்து வளைந்து பாதை செல்கிறது. கோயிலுக்குச் சற்றுக் கீழே வேன்கள் நின்றுவிடுகின்றன. இறங்கிச் சிறிது தூரம் படிக்கட்டுகள் வழியே ஏறிச் சென்றோம். உச்சியில் சிறிய ஆலயம் உள்ளது. அதில் பெரிய சிவலிங்கம் உள்ளது. இது ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்டது எனக் கூறுகிறார்கள். சங்கராச்சாரியரின் சிலை ஒன்றும் அங்கு உள்ளது. அங்கு அனைவரும் தரிசனம் செய்த பிறகு வெளியே மரத்தடியில் அமர்ந்து கூட்டு வழிபாடு செய்தோம். இடம் சிறியதாக இருந்தாலும் சுத்தமாகவும், அமைதியாகவும், அழகாகவும் உள்ளது. இக்கோயிலுக்கு மின் விளக்குகள் மைசூர் மகாராஜாவினால் பொருத்தப்பட்டிருப்பதாகக் காட்டும் கல்வெட்டு ஒன்றும் அங்கு உள்ளது. அங்கிருந்து பார்த்தால் வளைந்துசெல்லும் ஜீலம் நதியும், அதன் இரு மருங்கிலும் அமைந்துள்ள நகரத்தின் அழகும், பரந்த ஏரிகளும் கண்ணுக்கினியகாட்சி அளிக்கின்றன. அங்கிருந்து வேன்கள் மூலம் திரும்பி அரசினர் எம்போரியத்தை அடைந்தோம். அங்கு விலை உயர்ந்த கைவினைப் பொருட்கள் மரத்தினாலும், கம்பளத்தினாலும், உலோகங்களினாலும் செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் வெளிநாட்டவர்களும், பெரிய பணக்காரர்களுமே அவற்றை வாங்க இயலும். சுற்றிலும் அழகான பூந்தோட்டம் உள்ளது. அதில் அழகிய ரோஜாச் செடிகள், மற்றப் பூச்செடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளைப் பார்த்துவிட்டு மதிய உணவிற்கு ஓட்டலுக்குத் திரும்பினோம்.

ஸ்ரீநகரில் ஏற்பட்ட கலவரத்தினால் பஸ்கள் ஓடவில்லை. அதனால் நாங்கள் ஒருநாள் அங்குத் தங்கியிருக்கவேண்டி ஏற்பட்டது. பௌர்ணமி அன்று அமரநாதனைத் தரிசிக்கச் சென்றவர்கள் மழையினால் அதிகச் சிரமத்திற்குள்ளானதாகவும், குளிர் தாங்காது இருவர் குகைப் பக்கம் காலமாகி விட்டதாகவும் கேள்விப்பட்டோம்.

காஷ்மீரில் எல்லா வகையான காய்கறி, பழவகைகள் நிறையக் கிடைக்கின்றன. அதிலும் மலைப்பகுதியில் விளையக்கூடிய ஆப்பிள், வால்பேரி, அக்ருட், காலிப்பிளவர், முட்டைக்கோஸ், பச்சைப்பட்டாணி போன்றவைகள் நிறைய மலிவாகக் கிடைக்கின்றன. பிரம்பினால் விதவிதமான பெட்டிகளும், கூடைகளும் செய்து விற்கிறார்கள். காஷ்மீருக்கு வருடம் முழுவதும் உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் உல்லாசப் பயணிகள் வருவதால் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து அதன்மூலம் கிடைக்கும் வருவாய் தான் அங்குள்ளோரின் முக்கிய வருமானம். ஓரளவு விவசாயமும், கம்பளி, பட்டுத்தொழிலும் செய்கிறார்கள்.

வெரிநாக்

30–7–80 அன்று பிரார்த்தனையும் சிற்றுண்டியும் ஆன பிறகு காலை எட்டு மணிக்கு ஜம்முதாவியை நோக்கி இரு பஸ்கள் மூலம் அழகு நிறைந்த ஸ்ரீநகரை விட்டுப் புறப்பட்டோம். எண்பது கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீநகருக்கு எழிலும் வாழ்க்கை வசதியும் தருகின்ற நதியான ஜீலம் நதியின் உற்பத்தி ஸ்தானமான 'வெரிநாக்' என்னும் இடத்திற்குச் சென்றோம். வானைத் தொடுவது போன்று வளர்ந்துள்ள 'பர்' மரங்கள் நிறைந்த மலையின் அடிவாரத்தில் பெரிய நீரூற்று கிளம்பி ஆரம்பத்திலேயே வாய்க்கால் போன்று வருகிறது. அதைச் சுற்றிலும் எண்கோண வடிவத்தில் மொகலாய மன்னர்களான ஜஹாங்கீரால் ஆரம்பிக்கப்பட்டு ஷாஜஹானால் முடிக்கப்பட்ட கட்டடம் உள்ளது. இதைச் சுற்றிலும் அழகான, பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற பசும் புல்தரைகளும் வகைவகையான வண்ண மலர்களும் கண்ணைக் கவர்கின்றன. இந்த வெரிநாக் ஊற்று நாற்பது அடி ஆழம் இருந்தாலும் ஞானிகளின்தெளிந்த உள்ளம்போன்று

அடிவரையிலும் தெளிவாகத் தெரிகின்றது. இவற்றையெல்லாம் கண்டு களித்து ஜம்முவை நோக்கிப் புறப்பட்டோம். இடையிடையே மழை தூறிக்கொண்டிருந்ததாலும், ராணுவ லாரிகள் எதிரே வந்துகொண்டிருந்ததாலும் எங்களுடைய பஸ்கள் மெதுவாகச் சென்றன. 12 மணிக்கு வழியில் உள்ள பயணியர் விடுதியில் கையில் எடுத்துவந்த புளிச்சாதம், தயிர்ச் சாதம் ஆகியவற்றை உண்ட பிறகு பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஜம்முதாவியை நெருங்கிக் கொண்டிருந்த போது வைஷ்ணவிதேவி மலையிலுள்ள மின் விளக்குகள் எங்களைக் கவர்ந்தன. அங்குப் பஸ்ஸை நிறுத்தி வைஷ்ணவிதேவி ஆலயத்திற்குப் போகும்வழி மற்ற வசதிகள்பற்றி விசாரித்தோம். அங்கிருந்து பன்னிரண்டு மைல் தூரமுள்ள கட்ராவை அடைய வாகனவசதி இல்லாததால் ஜம்முவிலிருந்து காலையில் வரத் தீர்மானித்துப் பயணத்தைத் தொடர்ந்தோம். இரவு பதினொரு மணிக்கு ஜம்முதாவி ரயில் நிலையத்தை அடைந்தோம். நாங்கள்விட்டுச் சென்ற ரயில் பெட்டியை அடைந்து இட்லி தயார் செய்து சாப்பிட்டுப் படுத்து உறங்கினோம்.

வைஷ்ணவி தேவி

30—7—80 அன்றுமாலை ஏழுமணிக்குத்தான் எங்கள்பெட்டி காசி செல்லும் ரயிலில் இணைப்பதாக ஏற்பாடுசெய்யப்பட்டுஇருந்ததால்அன்று காலை ஐந்துமணிக்கு எழுந்து வைஷ்ணவிதேவி ஆலயத்திற்கு இருபது பேர் புறப்பட்டோம். அன்று ஸ்ரீநகர் கலவரத்தை முன்னிட்டு ஜம்முவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. எனவே பஸ், டாக்ஸி போன்ற வாகனங்கள் சரிவர ஓடவில்லை. நாற்பதுசீட் உள்ள பஸ் ஒன்றைப் பேசி நாற்பது பேருக்குரிய கட்டணத்தைச் செலுத்தி அதில் அமர்ந்துகொண்டு இருபது பேரும் 42 கி.மீ தூரத்தில் உள்ள கட்ரா என்னும் ஊரை அடைந்தோம். அது ஒரு பெரிய ஊர் ஆகும். வைஷ்ணவிதேவி ஆலயத்திற்குச் செல்லும் பாதை இங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது.

கட்ராவில் பஸ் நிலையம், தந்தி, தபால் ஆபீஸ், சிற்றுண்டிச் சாலை, பயணியர் தகவல் தெரிவிக்கும் நிலையம் ஆகியவை உள்ளன. அன்று மழை தூறிக்கொண்டிருந்தது. அங்குச் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தபோதே ஹர்த்தாலினால் கடைகளை மூடினார்கள். வைஷ்ணவிதேவியைத் தரிசிக்க மலைமீது பன்னிரண்டு மைல் ஏறிச் செல்ல வேண்டும். நடந்துசெல்லப் படிக்கட்டுகள் உள்ளன. குதிரை செல்லத் தனிப்பாதையும் உள்ளது. தண்டி வசதியும் உள்ளது. ஆண்டுமுழுவதும் மக்கள் சென்று வழிபட்டு வருகிறார்கள். நவராத்திரி போன்ற அம்பிகை வழிபாட்டு நாட்களில் பெரும் கூட்டம் வருகிறது.

பஸ் நிலையத்தின் அருகே வைஷ்ணவி தேவி தேவஸ்தான அலுவலகம் உள்ளது. வைஷ்ணவி தேவி மூலஸ்தானம் குகைக்குள் அமைந்திருப்பதால் ஒரு சமயத்தில் ஐந்துபேருக்கு மேல் சென்று வழிபட இயலாது. அதனால் இந்த அலுவலகத்தில் பதிவுசெய்து கொண்ட வரிசைக் கிரமப்படிதான் தரிசனத்திற்கு அனுமதிக்கிறார்கள். அதனால் யாத்திரை செல்பவர்கள் யாவரும் முதலில் இங்குச் சென்று பெயர்களைப் பதிவுசெய்துகொண்டு சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும். இதற்குக் கட்டணம் ஏதும் இல்லை. நாங்களும் பதிவு செய்துகொண்டோம்.

மழையும், ஹர்த்தாலும் இருந்ததால் அன்று குதிரைக்காரர்கள் அதிகம் வரவில்லை. இருபது குதிரைகள் தேவை என விசாரித்தோம். பேருந்து நிலையத்திற்கு அருகில் மூன்று குதிரைகளே இருந்தன. குதிரை கிடைப்பது அரிது என்பதாலும், மழைதூறிக்கொண்டிருந்ததாலும் பத்துப்பேர் ஜம்முதாவிக்குத் திரும்பி விட்டார்கள். என்ன சிரமம் ஏற்பட்டாலும் முன் வைத்த காலைப் பின் வைக்காது, அன்னையைத் தரிசனம் செய்துதான் திரும்ப வேண்டும் என்ற உறுதிபடைத்திருந்த பத்துப் பேர் மட்டும் ஒரு மைல் தூரம் உள்ள மலை அடிவாரத்திற்கு நடந்து சென்றோம். அடிவாரத்தை அடைவதற்குள் அன்னையின் அருளால் எங்களுக்குப் பத்துக் குதிரைகள் கிடைத்தன. குதிரை ஒன்றுக்குச் சென்றுவர நாற்பது ரூபாய் பேசி அமர்த்திக்கொண்டு புறப்பட்டோம். இங்கும் கனமாக உள்ளவர்களை ஏற்றிக்கொள்ளக் குதிரைக்காரர்கள் மிகவும் தயங்குகிறார்கள். ஒருவிதமாக அவர்களோடு சமாதானம் பேசி அவர்களை இணங்கவைத்தோம்.

குறிப்புகள்

பாத யாத்திரை-9

ஆண்டுதோறும் நிகழ்ந்து வரும் பாத யாத்திரை இவ்வாண்டு மே மாதம் நான்காம் தேதி துவங்கி மே மாதம் ஏழாம் தேதி முடிவு பெற்றது. தர்மபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணத்தில் துவங்கிய பாதயாத்திரை பாலஜங்க மனஹள்ளியில் முடிவு பெற்றது. தபோவனம் நடத்திய இப்புனித யாத்திரையில் ஆசிரியர்களும், அரசாங்கப் பணியாளர்களும், வியாபாரத்துறையில் இருப்பவர்களும், விவசாயிகளும் சுமார் அறுபத்து நான்கு பேர் பங்கு கொண்டனர். பாதயாத்திரையில் கலந்து கொண்ட அன்பர்கள் சம்பாஷித்துக் கொள்கிறார்கள். அவர்கள் சம்பாஷணை பாதயாத்திரையில் கலந்துகொள்ளாத வாசகர்களைப் பாதயாத்திரைக்கு அழைத்துச் செல்லும்.

காவேரிப்பட்டணத்தில் 4—5—81 அன்று மாலை 4 மணிக்கு மணி அடிக்கிறது; கூட்டம் கலைகிறது. அந்தர்யோகம்நடத்தியஅன்பர் பாத யாத்திரை அன்பர்களுக்குக் குளிர்ந்தபானம் வழங்குகிறார். அதைப் பருகிவிட்டுப் பாதயாத்திரை அன்பர்கள் வரிசைக்கு மூன்றுபேர் வீதம் நிற்கின்றார்கள். "சிவாய நம ஓம், சிவாய நம: சிவாய நம ஓம் நமச்சிவாய" என்னும் மந்திரம் ஓதப்படுகிறது. பாதயாத்ரிகர்கள் அனைவரும் ஒரே குரலில் இனிமையாகச் சொல்லுகின்றார்கள்.

பாதயாத்திரை அன்பர்களில் ஒருவர்: "சிவானந்தம்,'' "சிவானந்தம்''— இந்த நாமத்தை ஓதுவதில் உள்ளத்தில் எத்தகைய ஆனந்தம் எனக்கு உண்டாகிறது தெரியுமா! கிருஷ்ண சைதன்யர் உலக மக்கள் எல்லாரையும் இறைவனுடைய நாமத்தை ஓதுவதற்குக் கூவி அழைத்தார் என்று நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். அவர் கூவி அழைத்த மகிமையை இப்பொழுது நான் உணர்கிறேன். நாம உச்சாரணையில் எவ்வளவு இன்பம் இருக்கிறது என்பதை நானும் உணர்வதால் மக்களைக் கூவி அழைக்கலாமா! என்று எனக்குத் தோன்றுகிறது. கிருஷ்ணசைதன்யருடன் பக்தர்கள்கூட்டம் போனதைப்பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லரோ? இக்காலத்திலும் அது நிகழ்கிறது என்பதை எங்கள் பாதயாத்திரையில் நீங்கள் கண்டு களியுங்கள்.

இரண்டாம் அன்பர்: "கோபுர தரிசனம் கோடி பாபநாசம்" என்பது ஆன்றோர் வாக்கு. இறைவன் நாமத்தை ஓதிக்கொண்டு கோபுர தரிசனம் காண்கின்றோம். கோபுரத்தைப்பார்த்தாலே பாபநாசம் என்றால், ஒருமுகப்பட்ட உள்ளத்துடன் இறைவன் நாமத்தை ஓதிக் கொண்டு கோபுரத்தைப் பார்க்கும் எங்களுக்குப் பாபம் ஏது? புனிதவான்களாக ஆலயத்திற்குள் நுழைகின்றோம். அந்த நீல மேக வண்ணனின் காட்சி கண்டு பேரானந்தம் அடைகிறோம். பாதயாத்திரை அன்பர் ஒருவர் பரந்தாமனின் புகழைப் பரவசமாகப் பாடுகிறார். அப்பாடல் உள்ளத்தில் உறங்கிக்கிடக்கும் ஆன்ம உணர்ச்சியைத்தட்டி எழுப்புகின்றது. ஆனந்தம்! ஆனந்தம்! இதுவன்றோ ஆனந்தம்!

மூன்றாம் அன்பர்: அதோ! பாதயாத்திரைக்கு ஏற்பாடு செய்த அன்பர் இன்முகத்துடன் எங்களை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டு இருக்கிறாரே! அவரை அணுகுகின்றோம். "சிற்றுண்டியும், பானமும், உங்கள் யாவர்க்கும் தயாராக இருக்கின்றன" என்று சொல்லுகிறார். என்ன ஆச்சரியம்! நான்கு கிலோமீட்டர் நடந்து வந்து விட்டோம். நாம ஜபத்தில் ஈடுபட்டிருந்ததால் நடந்ததே தெரியவில்லை. பாதையின் ஓரத்தில் ஏற்பாடு செய்திருந்த விரிப்பில் அமர்கின்றோம். அப்பொழுது காலைப் பற்றிய உணர்வு வருகின்றது. வலியும் சிறிது தெரிகின்றது. அப்பொழுதுதான் பேருண்மை ஒன்று விளங்குகிறது. உடலை மறந்து ஆத்மபோதத்தில் இருக்கின்றவர்களுக்கு உடற்பிணி இல்லை என்ற உண்மை தெளிவாக விளங்குகிறது. தேகாத்ம புத்தியை வெல்லுகின்றவனுக்குப் பேரானந்தம் கிட்டுகிறது என்பது புத்தகத்தில் படித்தோ, பிறர் சொல்லிக் கேட்டோ அறிந்துகொள்வதை விடப் பாதயாத்திரை அவ்வுண்மையை எனக்குத் தெளிவாக விளக்குகிறது. நாமஜபம் சொல்லிக்கொண்டு நடந்து வந்தபொழுது கால்வலி

தெரியவில்லை. சிற்றுண்டிக்காக அமர்ந்தவுடன் உடல் ஞாபகம் வந்துவிடுகிறது. கால்வலியும் ஆரம்பித்து விடுகிறது; பாதயாத்திரை ஏற்பாடு செய்த அன்பரின் உபசரிப்பில் மறுபடியும் உடலை மறந்து சிற்றுண்டி எடுத்துக்கொண்டு பாதயாத்திரையை மேலும் துவக்குகிறோம்.

நான்காம் அன்பர்: புறவுலகில் இருள் கவ்வுகிறது. கைவிளக்கின் துணைகொண்டு பாதையைப் பார்த்துக்கொண்டு நாமஜபத்துடன் நடக்கின்றோம். வானத்தில் கார்மேகம் ஓடுகிறது. எங்கள் மீது மழைத்தூறல் விழுகிறது. நாமத்தின் மூலம் மனது குளிர்வது போன்று மழைத்தூறல் மூலம் மேனியும் குளிர்கிறது. உள்ளும் புறமும் குளிர, சிவ நாமத்தில் ஓங்காரத்தொனியும் கலக்க எங்கள் யாத்திரை எளிய மக்கள் வாழும் எலுமிச்சனஹள்ளியை நோக்கிப்போகிறது. சற்றுத் தூரத்தில் பறை ஒலி கேட்கிறது. சிறிது தூரம் செல்லுகிறோம். தீப்பந்த ஒளியைக் காண்கின்றோம். வாழ்வு எளிமையாக இருந்தாலும், அன்பு செழுமையாக இருக்கும் உள்ளங்களைப் பார்க்கிறோம். புன்முறுவல் பூத்த முகத்துடன் அன்புக்கு அறிகுறியாகக் கையில் பூமாலைகொண்டு எலுமிச்சனஹள்ளி ஏழை மக்கள் எங்கள் வருகையை எதிர்நோக்கி நிற்கின்றார்கள். அவர்களை நாங்கள் நெருங்கியதும் மாலை அணிவித்து மகிழ்வைத் தெரிவிக்கிறார்கள். எங்களுடைய உள்ளங்களும், அவர்களுடைய உள்ளங்களும் அன்பினால் பிணிக்கப்படுகின்றன.

ஐந்தாம் அன்பர்: அதோ! எங்களை வரவேற்க வந்த கூட்டத்தில் மெலிந்த உடலோடு காணப்படும் வெள்ளை உடை அணிந்த அன்பர் யார்? என்ற ஐயம் எங்கள் உள்ளங்களில் எழ, எங்கள் பார்வை அவர் பக்கம் திரும்புகிறது. அவரைப் பார்த்தாலே உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அவர் ஒரு தியாக புருஷர் என்பதை அவருடைய தோற்றம் விளக்குகிறது. எங்களுடைய வருகையை வழிமேல் விழிவைத்துப் பார்த்திருந்த அவர் எங்களைக்கண்டதும் பரமானந்தம் அடைகிறார். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்ற அருள் வாக்கின் பூரண விளக்கத்தை அப்பொழுது நாங்கள் உள்ளத்தில் உணர்கிறோம். நல்லாரைக் காண்பது உள்ளத்தில் எத்தகைய நலனைத் தோற்றுவிக்கிறது என்பதை நாங்கள் நேரில் அனுபவிக்கிறோம். எலுமிச்சனஹள்ளியில் பொது இடத்தை அடைகிறோம். கூட்டம் கூடுகிறது. இடுப்பிலே கந்தைத்துணி! உள்ளத்திலே கள்ளம் கபடம் அற்ற தன்மை! முகத்திலே புன்முறுவல்! கிடைக்காத ஒன்றைப் பெற்றது போன்ற பெருமிதம்! என்ன சொல்வார்களோ அதைக் கேட்க வேண்டும் என்ற ஏக்கம்! இத்தகைய தோற்றத்தில் தென்படும் அவ்வூர் மக்களைக் காண்கின்றோம். வெள்ளை வேட்டியுடன் விளங்கினரே அன்பர்! அவருடைய வெள்ளை உள்ளத்திலிருந்து எழுந்த எண்ணங்கள் சொற்களாக வந்து எங்களை வரவேற்க நல்லார்களுடைய வருகையால் மழையும் வருகிறது என்று அந்த நல்லவர் சொல்கிறார். "உங்களை மயக்கும் மதுவும், மத மாற்றமும் உங்களுக்கு வேண்டாம். உங்களுடைய உடலைச் சுத்தம் பண்ண நாள்தோறும் குளியுங்கள். கந்தையானாலும் கசக்கிக் கட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் வாழும் இடத்தைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய உள்ளத்தைச் சுத்தம் பண்ணுவதற்கு நாங்கள் மருந்து கொண்டு வந்து இருக்கிறோம். ராமமந்திரம்தான் அம்மருந்து. நீங்களும் நாங்களும் சேர்ந்து ராமமந்திரத்தை ஓதுவோம்" என்று பேசிய உரையைச் செவிமடுக்கிறது அக்கூட்டம். எல்லாரும் சேர்ந்து,

"ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே!
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண, கிருஷ்ண,
ஹரே ஹரே!"

என்று செய்த முழக்கம் வானைப் பிளக்கிறது. "எல்லாரும் அமைதியாகச் செல்லுங்கள். நம் ஊருக்கு வந்த இந்த நல்லவர்களுக்கு உணவு கொடுத்து உறங்க வைப்போம்" என்று கொஞ்சும் மொழியில் பேசுகிறார் அந்தத் தியாக மூர்த்தி. மக்கள் அமைதியுடன் கலைகிறார்கள். அவ்வூர் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து தயாரித்த உணவை அன்புடன் தலைவாழை இலையில் பரிமாறுகிறார்கள். நாம ஜபம் முழங்கிக்கொண்டு இருக்கிறது. பரிமாறி முடிந்ததும் பிரம்மார்ப்பணம் சொல்லி, பாதயாத்ரிகர்கள் உண்பதைக் கண்டு அம் மக்கள் பரமானந்தம் அடைகிறார்கள். உடலை

மறந்து நடப்பதில் இன்பம்! தங்களை மறந்து தங்களிடத்து உள்ள பொருட்களை அடியார்க்கு அளிப்பதில் இன்பம்! உலகத்தில் இத்தகைய இன்பங்களை அல்லவோ பெறவேண்டும் என்ற எண்ணம் எங்கள் உள்ளத்தில் எழுகிறது.

ஆறும் அன்பர்: இத்தனை நிகழ்ச்சிகளுக்கிடையில், வெள்ளை உடை அணிந்து மெல்லிய தோற்றம் உடைய அன்பரை யார் என்று அறிந்துகொள்ள என் உள்ளம் துடிக்கிறது. மகாபாரதத்தில் பீஷ்மர் நைஷ்டிக பிரம்மச்சாரியாக இருந்து தம் கடமையை முறையாகச் செய்து கர்மயோகியாகத் திகழ்ந்தார் என்பது என் ஞாபகத்துக்கு வருகிறது. தந்தைக்காகப் பீஷ்மர் வாழ்க்கை முழுதும் நைஷ்டிக பிரம்மச்சாரியாக இருந்தார். நாட்டுக்காக நைஷ்டிக பிரம்மச்சாரியாக இருந்து, கல்விப் பணியும், மக்கள் பணியும், அத் தியாகபுருஷர் செய்து வருகிறார் என்பதை அறிகிறேன். இக்கலியுகத்திலும் இத்தகைய நல்லவர் இருப்பதால்தான் உலகம் இன்னும் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பது எனக்குத் தெளிவாக விளங்குகிறது.

ஏழாம் அன்பர்: இன்றைய பாத யாத்திரை என் வாழ்க்கையில் நல்ல பலனை அளித்திருக்கிறது. உள்ளத்தில் தூய உணர்வும், இரக்க உணர்வும் எழுவதை இன்றைக்கு நான் அறிகிறேன். நெஞ்சுக்கு நீதிதரும் நிகழ்ச்சிகளை இன்றைக்கு ஏராளமாகப் பெற்றிருக்கிறேன். என் வாழ்நாளில் இன்று ஒரு நல்ல நாள். இப்படி எண்ணிக்கொண்டே படுத்திருக்கையில் என்னையும் அறியாது உறங்கிவிடுகிறேன்.

எட்டாம் அன்பர்: என் வாழ்க்கையில் என்ன புதுமை! நான் நினைக்க முடியாத அனுபவம் எனக்கு உண்டாகிறது. என்னையும் அறியாது அதிகாலைமூன்றுமணிக்குத் தெளிந்த உள்ளத்துடன் எழுந்திருக்கின்றேன். என் வாழ்க்கையில் பகல் மூன்று மணி எப்படி இருக்கும் என்பதைப்பார்த்திருக்கிறேன். அதிகாலை மூன்று மணி எவ்வளவு அமைதியாக இருக்கிறது என்பதை இப்பொழுதுதான்காண்கிறேன். சத்சங்கத்தில் சேர்ந்தால் நம்மையறியாது நல்ல பழக்கங்கள் ஏற்படுகின்றன என்பது நூற்றுக்கு நூறு உண்மை. கடிகார அலாரமோ, பிறருடைய கூச்சலோ மூன்று மணிக்கு என்னை எழுப்பமாட்டா. அப்பேர்ப்பட்ட நான் மூன்று மணிக்கு உற்சாகத்துடன் நானாகவே எழுகிறேன் எனில் அது சத்சங்கத்தின் மகிமை அன்றி வேறு எதுவாக இருக்கமுடியும்? சுறுசுறுப்பே வடிவெடுத்தவனாகக் காலைக் கடன்களை முடிக்கின்றேன். நான் ஒரு ஆசிரியன். பள்ளி வகுப்பில் மாணக்கர்களை ஆஜர் எடுத்திருக்கிறேன். இன்றைக்கு எனக்கு ஆஜர் எடுக்கப்படுகிறது. என் பெயரைக் கூப்பிட்டதும் ஓம் என்று ஒலித்து உவகை அடைகின்றேன்.

ஒன்பதாம் அன்பர்:

“ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்
ஆதி சக்தி, மஹா சக்தி, பராசக்தி ஓம்”

என்ற நாம உச்சாரணை என்காதில் விழுகிறது. சக்தி நாமம் கேட்டதும் அன்று செவ்வாய்க்கிழமை என்பது எனக்கு ஞாபகம் வருகிறது. நானும் அந்த நாமத்தைச் சொல்லிக்கொண்டு பாதயாத்ரிகர்களுடன் பயணம் செய்கின்றேன். வீட்டில் உள்ளவர்களை எழுப்பி, பானம் தயாரித்துக்கொடுங்கள் என்றுமன்றாடுவது உண்டு. வீட்டில் உள்ளவர்களோடு சிலசமயம் சண்டை போடுவதும் உண்டு. சண்டை போடாதும், மன்றாடாதும், பாத யாத்திரையில் இருள் மறையம்மறைய அருந்துவதற்குப் பானம் தயாராக வைத்துக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு களிப்படைகின்றேன். கண்ணன் கீதையில் வேறு எண்ணம் இல்லாது என்னையே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டியவற்றையெல்லாம் நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன் எனப் பகர்ந்து இருக்கிறார் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். பாதயாத்ரிகர்களாகிய நாங்கள் வேறு எண்ணம் இல்லாது இறைவன் நாமத்தை ஓதிக்கொண்டே இருக்கிறபொழுது எங்களுக்குத் தேவையானது எல்லாம் எங்களைத் தேடிக்கொண்டு வருவதைக் காண்கின்றோம். கண்ணனுடைய கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை நாங்கள் ஆங்குக் காண்கின்றோம்.

பத்தாம் அன்பர்: மே மாதம் ஐந்தாம் தேதி காலை 5-30 மணிக்குப் பாலக்கோடு சர்க்கரை ஆலையை அடைகிறோம். இயந்திரக்கோளாறு ஏற்பட்டு ஆலை அன்றைக்கு ஓடவில்லை. ஆனால் எங்களை உபசரிக்க இருந்த அன்பர் எங்களை

உவகையுடன் வரவேற்க ஓடி வருகிறார். அவருடைய உள்ளத்தில் கோளாறு எதுவும் இல்லை. குளிப்பதற்கும், சிற்றுண்டிக்கும் எங்கள் அறுபத்து நான்கு பேருக்கும் அற்புதமாக ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார். நீர் வறட்சி என்று கேள்விப்பட்டு இருந்தோம். ஆனால் அன்பர்களின் கனிந்த உள்ளம் அவ்வறட்சியை எங்களுக்கு மறைத்து வைக்கிறது. நாட்டுக்குத் தொழில் வளர்ச்சி தேவை. அதற்கு அறிகுறியாகச் சர்க்கரை மில் ஆங்கு விளங்குகிறது. மக்களுடைய உள்ளம் வளர்ச்சி அடைய சமய உணர்வு அவசியம் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் நேரில் காண்கிறோம். அவர்களுடைய சமய உணர்வைக் கணபதி ஆலயம் எடுத்திருப்பதின் மூலம் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். ஐக்கிய உணர்வோடு கணபதி ஆலயத்துக்கு முன்பு நடந்த ஆலய வழிபாட்டில் நானும் கலந்து கொள்ளுகிறேன். சோதனைச் சாலையில் பௌதிக ரசாயன உண்மைகளைச் செயல்முறையில் காட்டி விளக்குவது போன்று, ஆலய வழிபாடு எப்படி நிகழவேண்டும் என்பதை அவ்வன்பர்களுக்குச் செயல்முறையில் காட்டித் தந்த நிகழ்ச்சிகளிலிருந்து வழிபாட்டின் தத்துவத்தை நான் அறிகின்றேன்.

பதினொன்றாம் அன்பர்: மலர் மலர்ந்தவுடன் வாசனை எங்கும் பரவுகிறது. உள்ளம் மலர்ந்தால் நல்ல உள்ளங்களையெல்லாம் அது இழுத்துக்கொண்டு வருகிறது. தர்மபுரியிலிருந்து அன்பர் ஒருவர் பாதயாத்திரிகர்கள் பாலக்கோடு வருவதை எப்படியோ அறிந்து எங்கள் முன் மூட்டை ஒன்றைக் கொண்டுவந்து வைக்கின்றார். மூட்டையிலிருந்து ஒவ்வொரு துண்டாக எடுத்து ஒவ்வொரு பாதயாத்திரை அன்பருக்கும் படைத்து மகிழ்ச்சியடைகின்றார். நல்ல உள்ளங்களுக்கெல்லாம் பாதயாத்திரை எத்தகைய தூண்டுதல் தருகிறது என்பதை நான் இங்குக் காண்கிறேன். அவ்வட்டாரச் சிறுவர் சிறுமியர் சுமார் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு உடைகள் வழங்கப்படுகிற காட்சி உள்ளத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டுகிறது.

பன்னிரண்டாம் அன்பர்: *5—5—81* காலை *10-45* மணிக்குப் பாலக்கோடு அடைகின்றோம். மக்கள் மனநிறைவின் அடையாளமாகப் பூரண கும்பம் கொண்டுவந்து எங்களை வரவேற்கின்றனர். விநாயகர் கோவிலுக்கு அழைத்துச் சென்று வழிபாடு செய்வித்து எங்களைத் தங்குமிடத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். எங்களைப் பார்த்தாலே ஜனங்களுக்கு என்ன ஞாபகம் வருகிறது தெரியுமா? பகவானைப்பற்றிய ஞாபகம்தான் வருகிறது. தாய்மார்கள் பகவத் மகிமையைக் குறித்து அழகாகப் பஜனை பாடுகிறார்கள். அதைக்கேட்டுத் தெய்வச் சிந்தனையில் மூழ்கி இருக்கிறோம்.

பதின்மூன்றாம் அன்பர்: பாப்பாரப்பட்டியின் எல்லையை அடைகின்றோம். பாதயாத்திரிகர்களின் சாமான்களை ஏற்றிவந்த பஸ் பிரேக் பிடிக்காது ஓட்டுபவரின் கட்டிலடங்காது வருகிறது. அடக்கமுடியாத மனதை அடக்கி வருகிற பாதயாத்திரிகர்கள் அக்காட்சியைப் பார்க்கின்றனர். ஓடிவந்த பஸ்ஸைப்பிடித்து நிறுத்தி விடுகிறார்கள். மனதையடக்கிய பாதயாத்திரிகர்கள் பஸ்ஸை நிறுத்தியது அரிய செயலாகாது என்று நான்எண்ணுகிறேன். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் உண்மைக்கு விளக்கத்தை நாங்கள் அப்போது காண்கிறோம்.

பதினான்காம் அன்பர்: பாப்பாரப்பட்டி பஜனைக் கோஷ்டி எங்களை வரவேற்கிறது. பஜனையுடன் சுப்பிரமணியர் ஆலயத்துக்கு எங்களை அழைத்துச் செல்கிறார்கள். சுப்பிரமணியர் ஆலயத்தில் செவிக்கு உணவு கிடைக்கிறது. அதன் பின் எங்கள் வயிற்றுக்கும் அருமையான உணவு கிடைக்கிறது.

பதினைந்தாம் அன்பர்: அதிகாலையில் பறவைகள் தாமாகவே எழுந்துவிடுகின்றன. மக்கள் எழுந்திருப்பதில்லை. ஆனால் பாதயாத்திரிகர்களாகிய நாங்கள் ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்துவிடுகின்றோம். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஸ்நானம் செய்துவிட்டுக் கடவுள் நாமத்தை உச்சரிக்க ஆயத்தமாக இருக்கின்றோம்.

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரேஹரே
ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண
ஹரேஹரே !"

என்ற நாமஜபத்துடன் *6—5—81* அன்று பாதயாத்திரை துவங்குகிறது. சூரியன் உதிக்

கத் தவறினும் பாதயாத்திரை முடியும் வரையில் பானம் கொடுக்கும் அன்பர் காட்சி கொடுக்கத் தவறுவதில்லை. பானத்துடன் காட்சி தருகிறார். பாதயாத்ரிகர்கள் அவர் காட்சியைக் கண்டு ஆனந்தம் அடைகின்றனர். கானுப்பட்டி ஊரில் பானத்துடன் பிஸ்கட்டும் பழமும் கலந்து அவ்வூர் அன்பர்கள் பாதயாத்ரிகர்களுக்குப் படைத்து அன்பை வெளிப்படுத்துகிறார்கள். பஜனையின் மூலம் பாதயாத்ரிகர்களைப் பண்டரிபுரத்திற்கு அழைத்துச் செல்கிறார் ஒரு பக்தர். அவர் பாடும் பாடலை வாசகர்களாகிய நீங்களும் கேட்டு எங்களுடன் பண்டரிபுரம் வாருங்கள்.

“ நடப்போம் வாரீர் பண்டரிபுரிக்கு
நாமெல்லாரும் பஜனை யுடனே
கைதவில் தாளம் தம்பூரம் கொண்டு
கருணையுடனே ஹரிகோலம் பூண்டு
(நடப்போம் வாரீர்)

விட்டலா விட்டலா ஜெய ஜெய விட்டலா
விட்டலா விட்டலா ஜெய ஜெய விட்டலா
விட்டலா விட்டலா ஜெய ஜெய விட்டலா

பாண்டுரங்கா பண்டரிநாத
பாண்டுரங்கா பண்டரிநாத
பாண்டுரங்கா பண்டரிநாத
பட்டுப் பீதாம்பர கருடவாகன
கம்ச வதனு ஹரி ஓம் ஹரி ! (நடப்போம் வாரீர்)

கோவிந்தம் கோவிந்தம் போடுங்களேன் நம்
கோபியர் எல்லாம் வாருங்களேன்
பாண்டுரங்கனைப் பாடுங்கள் பாபம் எல்லாம்
போக்குங்கள்
விட்டலனைப் பாடுங்கள் வினைகள் எல்லாம்
நீக்குங்கள்—கோவிந்தம்

இப்பஜனையில் ஈடுபட்டு எங்கள் உள்ளங்களெல்லாம் பண்டரிபுரம் போகின்றன.

பதினாறும் அன்பர்: இண்டுரை அடைகிறோம். பூரண கும்பம் கொண்டு அவ்வூர் மக்கள் வரவேற்கின்றனர். பெருமாள் கோவிலில் ஒரு கிணறு இருக்கின்றது. அவ்வூர்ப் பெருமாள் அங்குள்ள மக்களுக்குத் தண்ணீர் அளந்து கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஈரடியால் மூவுலகை அளந்த பெருமாள் இண்டூர் மக்களுக்குப் போதுமான நீர் கொடுக்க முடியவில்லை என்பது போன்று ஆங்கு வறட்சியைக் காண்கின்றோம். அவ்வூர் ஆலயத்தில் பாதயாத்ரிகர்கள் துணிவாக மரம்நடுவதில் ஈடுபடுகிறார்கள். ஒருமணி நேரமாக முயன்று அக்கிணற்றிலிருந்து இரண்டு குடம் நீர் இறைத்துப் புதிதாக நட்ட செடிகளுக்கு ஊற்றுகிறார்கள். தனக்கெனச் செய்யாது உலகுக்கெனச் செய்யும் செயல்களுக்குத் தெய்வத்தின் துணை வருகிறது. செடிகளை வைத்துப் பாதயாத்திரை அன்பர்கள் நீர் ஊற்றும் பொறுப்பைத் திருமாலிடம் ஒப்படைத்தார்கள் போலும்! அன்று மாலையே அவ்வூரில் மழை பொழிந்த அற்புதந்தான் என்னே! சுயநலமற்றுத் தூய உள்ளத்தோடு எண்ணுகின்ற எண்ணம் நிறைவேறுகிறது என்பதை அன்று எங்கள் வாழ்க்கையில் காண்கின்றோம். செடி வைக்கும் பொழுது இன்று மழை வரவேண்டும் என்று பாதயாத்ரிகர்களாகிய நாங்கள் எண்ணுகின்றோம். அதன் படியே அன்று மழை வருகின்றது. தூய எண்ணத்தின் வலிமை அத்தகையது.

பதினேழாம் அன்பர்: நான் கேட்ட ஒரு செய்தியைக் கேளுங்கள். எங்களுக்காக இண்டூர் மக்கள் ஒருநாள் கிணற்றில் நீர் எடுக்காமலேயே இருந்தார்களாம். ஒருநாள் ஊறிய நீரைச் சேகரித்து எங்களை உபசரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். விருந்தோம்பலில் அவர்களுக்கிருந்த சிரத்தையைப் பாருங்கள்! இத்தகைய நல்ல உள்ளம் படைத்த மக்கள் உலகத்தில் இருப்பதால்தான் இன்னும் உலகம் இயங்கி வருகிறது.

பதினெட்டாம் அன்பர்: மழை பொழிகிறது. நனைந்துகொண்டே நடக்கின்றோம். ஓர் ஓலைக் குடிலைக்காண்கிறோம். மழைக்காக அதில் புகுகின்றோம். என்ன ஆச்சரியம்! மாலைச் சிற்றுண்டி எங்களுக்கு அங்குத் தயாராக இருக்கின்றது. இருக்கும் இடம் தேடி உணவு வந்து கொண்டிருக்கிறது. இறைவன் நாமத்தின் மகிமை அத்தகையது.

பத்தொன்பதாம் அன்பர்: எங்கும் வீடுகளைக் காணோம். வெட்டவெளியைக் காண்கின்றோம். பரந்த பூமியைக் காண்கின்றோம். மனித சஞ்சாரமே இல்லை. இச்சூழ்நிலையில் இன்பமாக நடக்கின்றோம். திடீரென்று காட்சி மாறுகிறது. ஆணும் பெண்ணும் குழந்தை குட்டிகளுமாகப் பானகத்தோடு எங்களை வரவேற்கிறார்கள். ராமனைக் குகன் சந்தித்த

காட்சி ஞாபகத்துக்கு வருகிறது. "பானகத்தில் என்ன கலந்திருக்கிறீர்கள்?" என்று கேட்கிறோம். வெல்லம், பழம், புளி ஆகியவைகளைச் சேர்த்திருக்கிறோம் என்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் மேலான ஒரு பொருளை அதில் சேர்த்திருக்கிறீர்கள் தெரியுமா? என்கின்றோம். இல்லை; வேறொன்றும் சேர்க்கவில்லை என்கிறார்கள். உங்கள் அன்பை அதில் சேர்த்திருக்கிறீர்கள்! அதனால் அதைப் பருகுவதற்கு அமிர்தமாக இருக்கிறது என்கிறோம். அவர்கள் பரமானந்தம் அடைகிறார்கள். அவர்களோடு அவர்களுக்கேற்ற கொச்சைமொழியில் அளவளாவுகின்றோம். அவர்களும் நாங்களும் ஒன்றுபடுகின்றோம். இருசாரிலும் அன்பு ஆழப்பதிகிறது. அன்பினால் பிணிப்புண்ட அவர்கள் நாங்கள் சொன்ன பகவான் நாமத்தைப் பக்தியுடனும், உற்சாகத்துடனும் சொல்லுகின்றார்கள். நாள்தோறும் பஜனை பண்ணுவதாக மாரியம்மன்மீது சத்தியம் செய்து கொடுக்கிறார்கள். அடுத்த நாள் பாலஜங்கமஹள்ளியில் நிகழவிருக்கும் சமாராதனைக்கு அவர்களை நாங்கள் அழைக்கின்றோம். அவர்களும் அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். உயிர்களுக்கெல்லாம் இறைவன் அப்பனும் அம்மையுமாகின்றார். அந்த அம்மையப்பனுடைய குழந்தைகள் அவர்களும் நாங்களும் என்பதை உணர்கிறோம். பிரியமுடியாது அவர்களைப் பிரிகிறோம். அவர்களும் பிரிய மனமில்லாது விடைகொடுக்கிறார்கள். அந்தச் சிறு பட்டிக்கு அவ்வை நகரம் என்று பெயர். ஒருகாலத்தில் ஔவையார் அவ்வூருக்கு வந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது.

இருபதாம் அன்பர்: இதோ இமயமலைக்கு ஈடான காட்சியைக் காணுங்கள். நான் கேதார் யாத்திரை போயிருக்கின்றேன். ஆங்குக் கண்ட இயற்கைக் காட்சிபோன்று ஈண்டும் காண்கின்றேன். பாதயாத்ரிகர்களே! நீங்கள் இப்பொழுது இமயமலை யாத்திரை செய்கிறீர்கள். இவ்வியற்கை எழிலைக் கண்டு ஆனந்தமடையுங்கள். உள்ளத்தில் எழும் உணர்வுதான் என்னே! உங்களை மறந்து உங்கள் தலைவன் மேல் பற்றுதல் உண்டாகிறதன்றோ! உங்களை மறந்து இயற்கை அன்னையிடம் சரண்புகுங்கள்.

இருபத்தொன்றாம் அன்பர்: நடக்கும் தூரம் இன்னும் கொஞ்சம் நீடிக்காதா! சேரவேண்டிய ஊர் வந்துவிட்டதுபோன்று இருக்கிறதே! மக்கள் வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கையில் ஒருவர் பூரணகும்பம் வைத்துக்கொண்டிருக்கிறார். அவர்கள் நாகர்கூடல் மக்கள்தாம்! உள்ளப் பூரிப்போடு எங்களை எதிர்நோக்கி நிற்கின்றார்கள். உலகத்தில் எல்லார்க்கும் இடம் உண்டு. எங்களை வரவேற்க இருக்கின்ற நாகர்கூடல் மக்கள் கூட்டத்தில் எல்லாத் தரத்தினரும் இருக்கிறார்கள். பக்தர்கள் அற்புதமாகப் பஜனைபாடுகிறார்கள். போதையிலிருக்கிறவர்கள் தங்களை மறந்து கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கிறார்கள். பொதுமேடைக்கு எங்களை அழைத்துச் செல்கிறார்கள். அவ்வூர் மக்களும், அருகிலுள்ள ஊர் மக்களும் திரண்டுவிடுகிறார்கள். மக்கள் ஆயிரக்கணக்காகக் கூடிவிடுகிறார்கள். ஆரவாரமின்றி அமைதி காக்கின்றார்கள். அறவுரையை அமைதியோடு கேட்கின்றார்கள். அவ்அமைதி எல்லாருடைய உள்ளத்தையும் கவர்கிறது. கூட்டம் முடிந்தவுடன் அவர்கள் அமைதியோடு கலைந்து சென்ற காட்சி எல்லாருடைய உள்ளத்தையும் தொடுகிறது. சட்டசபையில் எத்தனை குழப்பம்! அவர்கள் இம்மக்களிடமிருந்து அமைதியைக் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தியப் பண்பு எத்தகையது என்பதை இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்!

இருபத்திரண்டாம் அன்பர்: இவ்வூர் மக்களுக்கு ஏமாற்றம் ஒருபுறம்; மகிழ்ச்சி ஒருபுறம். தங்கள் திட்டப்படி அரிச்சந்திர நாடகம் நடித்துக்காட்ட முடியவில்லையே என்ற ஏமாற்றம் ஒருபுறம். மழை பொழிவதால் மகிழ்ச்சி ஒருபுறம். அவர்கள் படைக்கிற அமுதை ஏற்றுக்கொள்கிறோம். அன்று எங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையெல்லாம் எண்ணி மகிழ்ந்தவாறே படுத்திருக்கிறோம். சிறிது நேரத்திற்குள் இவ்வுலகைமறந்து தூங்குகிறோம்.

இருபத்துமூன்றாம் அன்பர்: எழுந்திருக்கும் பொழுதே சிவசிந்தனை வந்துவிடுகிறது. சிந்தனை சொல்லாக உடனே வடிவெடுக்கிறது.

"சிவாய நம ஓம் சிவாய நம:
சிவாய நம ஓம் நமசிவாய"

என்ற நாம உச்சாரணையுடன் 7—5—81 அன்று பாதயாத்திரை துவங்குகிறது. அன்றுதான் பாத

யாத்திரையின் கடைசி நாள். அன்று இரண்டு மைல்தான் நடக்கின்றோம். உடலுக்குத் தேவையான காற்றும், நீரும், உணவும் தூயநிலையில் அபரிமிதமாக அன்பர் எடுத்து வழங்குகிறார். எங்கள் வழக்கமான பிரார்த்தனை நடக்கிறது. பாலஜங்கமனஹள்ளி பச்சையம்மன் ஆலயத்தை நோக்கி நடக்கின்றோம். அர்ச்சனையும் ஆராதனையும் நிகழ்கின்றன. வண்டி ஒன்றில் ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்தர், அன்னை சாரதாதேவியார் ஆகிய மூவரின் திருவுருவப் படங்களும் அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள்! நாமாவளி சொல்லுவதும், இசையோடு பாடுவதும், நாதஸ்வரம் வாசிப்பதும் மாறிமாறி நிகழ ஊர்வலம் வருவதைப் பாருங்கள். பாதயாத்திரை அன்பர்கள் வண்டியை இழுப்பதில் அடையும் மகிழ்ச்சியைப் பாருங்கள். மிதிலையில் புகுந்த ராமனைக்கண்டு மிதிலைமக்கள் மகிழ்ச்சியடைந்ததைப்போன்று ஊர்வலக்காட்சியைக்கண்டு அவ்வூர் மக்கள் ஆனந்தமடைவதைப் பாருங்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்தர், அன்னை சாரதா தேவியார் ஆகிய மூவர் திருவுருவப் படங்களையும் தரிசித்து அவ்வூர் மக்கள் ஆனந்தமடையும் காட்சியைக் காணுங்கள். ஊர்வலமும் பள்ளிக்கூடத்தை அடைகிறது. அவ்வூர் மக்கள் அங்குக்கூடுகிறார்கள்.

இருபத்து நான்காம் அன்பர்: இண்டூரில் எங்களைப் பிரிந்த தியாகச் செம்மல் அதோ மேடையின்மீது காட்சி கொடுக்கிறார். நல்லார் சொல் கேட்பதும் நன்றன்றோ! அந்த நல்லார் பேசுகிறார். அதைக் காது கொடுத்துக் கேளுங்கள். அவருடைய பேச்சு பாமரர்களுடைய உள்ளத்தில் வாழ்க்கை நிலையாமையையும், சேவையின் மகிமையையும், சுயநலத்தியாகத்தையும் எவ்வளவு ஆழமாகப் பதியவைக்கின்றன பாருங்கள். அவரைத்தொடர்ந்து அறிவு, அன்பு, ஆற்றல் பற்றிய பேச்சு நிகழ்கிறது. இம்மூன்று பேரியல்புகளும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதா தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் திருவுருவப் படங்கள் வாயிலாக உங்களுடைய காட்சிக்குக் கொண்டுவரப்பட்டன. அப்பேரியல்புகளை நீங்கள் அம்மூர்த்திகள் வாயிலாக வழிபாடு செய்தீர்கள். வாழ்க்கையில் அப்பேரியல்புகளை வளர்ப்பதற்கு அரும்பாடுபடுங்கள் என்று அவர்களுக்கு உபதேசிக்கப்படுவதைக் கேளுங்கள்.

இருபத்தைந்தாம் அன்பர்: விவேகானந்தர் கண்ட கனவு நனவாகும் காட்சியைக் காணுங்கள். நரசேவை நாராயணசேவையென்று அவர் கூறியுள்ளார். நரசேவை, அன்னதானம், அறிவுதானம், அருள்தானம் என்னும் முறையில் நிகழுமானால் அது நாராயண சேவையாகிறது. இது விவேகானந்தர் கண்ட கனவு. தீபாவளிக்குத் தங்கள் குழந்தை குட்டிகளுக்கு, புதுமாப்பிள்ளை, புதுப்பெண்களுக்குப் புத்தாடைகள் கொடுத்து மகிழ்ச்சி அடையும் காட்சியைப் பார்த்திருப்பீர்கள். அது உடல் உறவை ஒட்டியதாகும். ஈண்டு ஓர் அன்பர் சிவனுடைய குழந்தைகளுக்குப் புதிய புடைவைகளும், வேஷ்டிகளும் கொடுத்து சுவாமி விவேகானந்தருடைய அன்னதானம் என்னும் கனவை நிறைவேற்றும் காட்சியைக் காணுங்கள். ஞானத்தை உலகெங்கும் எடுத்துப் பரப்ப விவேகானந்தர் போன்ற அருட்செல்வர்களைப் பெற்று அவர்களிடம் அப்பொறுப்பை ஒப்படைக்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். ஈண்டுச் சிறந்த கல்விமான்களிடம் சிறந்த கருத்துக்களுடைய நூல்கள் ஒப்படைக்கப்பட்டு, விவேகானந்தருடைய அறிவுதானத்தைச் செயலுக்குக் கொண்டுவரும் காட்சியைக் காணுங்கள். பாதயாத்திரை முழுதும் அருள்தானம் வழங்கப்பட்டகாட்சி நாம் நேரில் அனுபவித்ததாகும். சுவாமி விவேகானந்தருடைய அருள்தானம் என்னும் கனவும் நனவுக்குக் கொண்டுவரப்படுகிறது. இன்னும் ஓர் அன்பரின் விரிந்த இதயத்தைக் காணுங்கள். அன்னதானம் செய்கிறார். அறுநூறு பேருக்குமேல் அதில் கலந்துகொள்கிறார்கள். அச்செயலை வெகு அமைதியாகச் செய்கிறார். நான் முந்தி, நீ முந்தி என்று சொல்லிக்கொண்டு பாதயாத்ரிகர்கள் இலைபோடுவதும், பரிமாறுவதும், இலை எடுப்பதுமாகியகாட்சியைக்கண்டுகளியுங்கள். ஒரு பக்கம் “ஹரேராம ஹரேராம ராம ராம ஹரே ஹரே ”என்ற நாமமுழக்கம் நிகழ்வதைக் கேளுங்கள். மற்றொருபக்கம் பிரம்மார்ப்பணம் என்னும் மந்திரம் ஓதப்படுவதைக் கேளுங்கள். மற்றொரு பக்கம் அமைதியாக உணவு அருந்துவதைப் பாருங்கள். உணவு அருந்தியான

வுடன் "ஜய் ஸ்ரீ குருமஹராஜிக்கு ஜே" என்று கூறிவிட்டு எழுந்து வரிசையாக அமைதியுடன் வெளியேறும் காட்சியையும் காண வேண்டாமா!

அன்பர்கள் அனைவரும்: நாங்கள் நகரவாசிகள். சினிமா நடிகர்கள் வந்தால் அவரைக்காண மக்கள்ஓடிவரும் காட்சியைக் கண்டிருக்கிறோம். மனித நடமாட்டம் மிகவும் குறைவு. அப்பகுதியில் மூன்று நான்கு தாய்மார்கள் ஓடிவருகிறார்கள். என்ன ஆபத்தோ என்று நாங்கள் அவர்களை ஏறிட்டுப் பார்க்கிறோம். எங்கள் முன்னிலையில் அவர்கள் வீழ்ந்து வணங்குகிறார்கள். எங்களைத் தரிசிப்பதற்காகத்தான் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்தப் புனித உள்ளந்தான் பாதயாத்திரையில் எங்கள் உள்ளத்தைத் தொடுகிறது.

இரண்டு தாய்மார்கள் எங்கள் வழியை மறிக்கிறார்கள்; வணங்குகிறார்கள். காபி தயாரித்துக்கொண்டுவந்து கைவசம் வைத்திருந்த அவர்கள் எங்களுக்குக் கொடுத்து மகிழ்வடைய விரும்புகிறார்கள். பாதயாத்ரிகர்கள் காபி பருகக் கூடாது என்பது சட்டம். அத்தாய்மார்களின் அன்புக்கு முன் சட்டம் பறக்கிறது. அவர்கள் உள்ளம் மகிழக்காபியை வாங்கிப் பருகுகிறோம். இக்காட்சி எங்கள் உள்ளத்தைத் தொடுகிறது.

தனக்கு, தனக்கு எனத் தேடிஅலைகிறது உலகம். கிடைத்ததைத் தங்களுக்கென்று சுருட்டிக்கொள்ளுகிற காட்சியை நாள்தோறும் கண்டுவருகிறோம். உங்களுக்கு உங்களுக்கு என்று கிணற்றில் தண்ணீரை எடுக்காது சேகரித்து வைத்திருந்த இண்டுர் மக்களின் இதயம் எங்கள் இதயத்தைத் தொடுகிறது.

நீண்டகாலமாக இருகட்சிகளாகப் பிளவுபட்டிருந்த இண்டுர் மக்கள் எங்களை வரவேற்கும் பொருட்டு ஒன்று கூடினார்கள் என்ற செய்தியைக் கேட்டு எங்கள் உள்ளம் பூரிப்பு அடைகிறது. இண்டுர் மக்கள் ஒற்றுமையின்மையால் ஊர்ப் பொதுக்காரியங்கள் தடைப்பட்டிருந்தன. பாதயாத்ரிகள் வருகையால் ஒற்றுமை நிலவி இனிப் பொதுக்காரியங்கள் நிகழப்போகின்றன என்ற செய்தி எங்கள் உள்ளத்தைத் தொடுகிறது.

வெள்ளை உடை அணிந்த மெல்லிய தோற்றத்தோடு காட்சியளித்த தியாகச் செம்மலின் செயல் எங்கள் உள்ளத்தைத் தொடுகிறது.

மரம் நட்டுவீணாகப்போய்விடுமே என்றுஎண்ணிக்கொண்டிருந்தபொழுது அன்று மாலையே மழை கொட்டிய காட்சி எங்கள் உள்ளத்தைத் தொடுகிறது. அதற்குமேல் மரத்தைக் காப்பாற்றும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று அவ்வூர் அன்பர் ஒருவர் கூறிய சொல் எங்கள் உள்ளத்தைத் தொடுகிறது.

இமயமலைபோன்ற இயற்கைக் காட்சி பாதயாத்திரையில் அமைந்திருந்தது எங்கள் உள்ளத்தைவிட்டு நீங்காது தொட்டுக்கொண்டே இருக்கிறது.

ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாக இருந்து நாமாவளி கூறிச்சொற்பொழிவுகேட்டு அமைதியாகச் சென்ற காட்சி எங்கள் உள்ளத்தைத் தொடுகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதாதேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் திருவுருவப் படங்களை வண்டியில் வைத்து அலங்காரம் செய்து நாமாவளி, கீர்த்தனை, நாதஸ்வரம் ஆகிய மூன்றும் முறையாக மாறி மாறி நிகழ்ந்த வண்ணம் ஊர்வலம் வந்த காட்சி எங்கள் உள்ளத்தைத் தொடுகிறது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இவ்வுருக்கமான நிகழ்ச்சிகளுடன் அடுத்த ஆண்டு பெரியார் மாவட்டத்தில் பாதயாத்திரை நிகழ்த்த வேண்டுமென்ற எண்ணம் என் உள்ளத்தைத் தொட்டுக்கொண்டே இருக்கிறதென்று கடைசி அன்பர் பேசி முடிக்க, மங்களம் பாடி, இவ்வாண்டு பாத யாத்திரையை இனிதே முடிக்கின்றோம்.

செய்திகள்

நிகழ்பவை

குற்றாலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் ஜூன் மாதம் 15 ஆம் தேதி பருவ அந்தர்யோகம் ஆரம்பித்து ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி முடிய நடைபெற்று வரும். இது சம்பந்தமான விபரம் வைகாசி மாதத் தர்ம சக்கரம் அட்டை இரண்டாம் பக்கம் வெளிவந்துள்ளது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை	பிரசார விலை	ரூ. 16-00
திருவாசகம்	பிரசார விலை ...	14-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
இராமாயணம்	,, ...	5-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,, ...	3-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பக்தியோக விளக்கம்	...	6-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	4-00
விவேகானந்த உபநிஷதம்	...	4-00
கடவுளின் வடிவங்கள்	...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	...	3-50
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	...	2-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை ...	2-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
பஜனைப் பாடல்கள்	...	2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்) ...	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
அமரநாத யாத்திரை	...	1-25
சந்நியாசி	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
சகோதரி நிவேதிதை	...	1-00
காயத்ரீ	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள்	(நாடகம்) ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்) ...	1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்) ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00

பிரஹ்லாதன்	(நாடகம்)	ரூ. 1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்) ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
பாண்டவ கௌரவபெருமை	(நாடகம்) ...	0-80
நன்மக்களைப் பெறுதல்	...	0-80
நோய்க்கு இடம் கொடேல்	...	0-80
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்) ...	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	0-75
*ஆத்ம சக்தி	...	0-75
*ஆலய வழிபாடு	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொரூபம்	...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*சூரிய நாராயணன்	...	0-50
*முருகக் கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
தெய்வீக மகிமைகள்	...	0-50
சைவன் யார்?	...	0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?		0-50
*கணபதி	...	0-40
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
The Bhagavad Gita (10th Imp.)	...	20-00
Sri Lalitambika Sahasranama Stotram	...	10-00
The Indian National Education	...	8-00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata (with plastic cover)	...	6-50
Ramayana (do)	...	4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)	...	4-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bahagavad Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் சமாதிக்கோயில் புதுப்பித்தல் திருப்பணி இத்துடன் பூர்த்தியாகிறது. சில்லரை வேலைகள் சில பாக்கியிருக்கின்றன. அவ்வேலைகள் படிப் படியாகப் பூர்த்தி செய்யப்பெறும். நித்திய வழிபாடு முறையாக நடைபெற்று வருகிறது. அப்போதைக்கப்போது நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள் தர்ம சக்கரத்தில் வெளி யாகும். இந்த மேலாம் திருப்பணிக்குத் தாராளமாக நன்கொடை அளித்துள்ள அன்பர்கள் அனைவரும் இறைவனுடைய திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக.

1981 மார்ச்சு மாதம் முடிய நன்கொடை வரவு

விலாசம்		ரூபாய்
1981 பிப்ரவரி மாதம் முடிய நன்கொடை வசூல்		10 30 533
மங்கையர்க்கரசியார் மாதர் சங்கம்	சாத்தூர்	200
அத்வைத ஆசிரமம் டிரஸ்ட்	சேலம்	200
ஸ்ரீ M. தண்டபாணி	T. N. E. B. ஈரோடு	150
ஸ்ரீ N. C. S. சிதம்பரம் செட்டியார்	காசுக்கடை, இராமநாதபுரம்	101
M/s ஸ்ரீ கீதா அயர்ன் ஒர்க்ஸ்	பிள்ளையார்பாளையம் ரோடு, மதுரை	101
ஸ்ரீ M. S. மாரியப்பன் செட்டியார்	பேரையூர், மதுரை	101
ஸ்ரீமதி C. பாலம்மாள்	இராமநாதபுரம்	100
M/s. N. C. S. C. செல்வராஜன் & பிரதர்ஸ்	,,	100
ஸ்ரீ N. கணபதி	கிழக்குச் சேப்பாக்கம், சென்னை	100
ஸ்ரீ K. K. செல்லப்பா	வடுகப்பாளையம், கோபி	100
ஸ்ரீ A. S. முனுசாமி முதலியார்	அந்தியூர்	100
ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மாள்	சிங்காரவீதி ,,	100
ஸ்ரீ S. M பழனியப்பகவுண்டர்	பவானிரோடு ,,	100
ஸ்ரீ S. M. அருணசலகவுண்டர்	,, ,,	100
ரூ. 100க்குக் கீழ்வந்த நன்கொடைகள்		3 944
	ஆகக் கூடுதல் ரூ.	10 36 130

31—3—81 முடிய உள்ள வரவு செலவு கணக்கு

	வரவு	பற்று
மொத்த நன்கொடைகள்	10 36 130-57	
தாயுமானவர் கோவில் கட்டடம்		3 38 168-35
ஆச்ரம கட்டடம்		2 68 740-62
பள்ளி-விடுதிக் கட்டடம்		2 60 901-13
மூன்று ஆண்டுகள் ஆச்ரம நிர்வாகம்		73 353-23
பாத்திரம் & தளவாடங்கள்		8 723-23
நிரந்தர நிதிக்காக பேங்கில் போட்டிருப்பது		20 000-00
ஷை தபோவனத்தில் இருப்பு		64 433-19
ரொக்க இருப்பு		1 810-82
ஆகக் கூடுதல்	10 36 130-57	10 36 130-57

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.